விலை : 20.00
பக்கங்கள் : முப்பத்து இரண்டு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 05 ஞாயிற்றுக்கிழமை (19.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 183

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், வீடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-4915)

## கோத்தா, பஷில் ஆகியோரை விசாரணை செய்ய வேண்டும்

### மக்ஸ்வெல் பரணகம கோரிக்கை

அரசாங்கத்தினால் அமைக்கப்படவுள்ள காணாமல் போனோர் தொடர்பிலான பணியகம், இறுதி யுத்தத்தில் முக்கிய பங்காற்றிய பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ சவேந்திர சில்வா போன்ற இரண்டாம் தரப்பினரையும் விசாரணை செய்ய வேண்டும் என காணாமல்போனோர் தொடர்பாக முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம கோரிக்கை விடுத்துள்ளார்.

காணாமல் போனவர்களின் முறைப்பாடுகளை மட்டுமே தமது ஆணைக்குழு விசாரணை செய்தது. எனினும் அவர்களால் குற்றம்சாட்டப்பட்ட பாதுகாப்பு தரப்பினரை விசாரணை செய்வதற்கான கால அவகாசம் தங்களுக்கு இருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த விவகாரத்தில் தீர்வொன்றை பெற வேண்டுமாயின் காணாமல் போனோர் தரப்பினரைப்போன்று, பாதுகாப்பு தரப்பினரையும் விசாரணை செய்ய வேண்டிய முக்கிய பங்கு, அரசாங்கத்தினால் அமைக்கப்படும் என கூறப்பட்டுள்ள பணியகத்திற்கு உள்ளது என்றும் பரணகம கூறினார். (செ-12)

## இலங்கையின் முன்னேற்ற பாதையில் இந்தியா கைகோர்த்து நிற்கும்!

### காணொலி மூலமாக இந்தியப் பிரதமர் உரை



31 ஆம் பக்கம் பார்க்க....



# இலங்கை-இந்திய உறவு பலம் பெறுவது முக்கியம்

## யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை திறந்து வைத்து ஜனாதிபதி உரை

(யாழ்ப்பாணம்)

இந்திய-இலங்கை நட்புறவில் எமது பொருளாதார வர்த்தக மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு எப்போதும் பலம்பெற்றுவருகிறது. அந்த ஒத்துழைப்புக்காக இலங்கை அரசாங்கம் மிகத்தெளிவான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. சில கடும் போக்காளர்கள் இது தொடர்பாக பிழையான வியாக்கியானங்களை முன்வைத்து வருகின்றனர். என்றாலும் எமது இரண்டு நாடுகளும் மிகுந்த புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றன என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எமது உறவுகள் பலம்பெறுவது இரண்டு நாடுகளினதும் பிராந்திய மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானதாகும் எனவும் குறிப்பிட்டார்.

31 ஆம் பக்கம் பார்க்க....

## உதய கம்பன்பில நேற்று கைது!



(கொழும்பு)

பொலிஸாரின் சிறப்பு விசாரணைப் பிரிவினால் நேற்று கைது

31 ஆம் பக்கம் பார்க்க....


## தனியார் பேருந்து சேவை 27 முதல் பகிஷ்கரிப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரால் தயாரிக்கப்பட்ட இணைந்த நேர அட்டவணை விரைவாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என தெரிவித்த வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தமது சேவையை எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் புறக்கணிப்பது என முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலமாக அறிவித்துள்ள இவர்கள் போராட்ட காலத்தில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளுக்கு விசமிகளால் ஏற்படும் பாதிப்பை தடுக்க அவர்களது சேவையையும் தவிர்க்க ஆவன செய்யும்படியும் கோரியுள்ளனர். (செ)

## இராணுவ வாகனம் மோதி குடும்ப பெண் உயிரிழப்பு



31 ஆம் பக்கம் பார்க்க....

## பயங்கரவாத சிந்தனை இன்னும் மறையவில்லை!

### பாதுகாப்புச் செயலாளர் உரை

(கொழும்பு)

நாட்டில் பௌதிக ரீதியாக பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட போதிலும் பயங்கரவாத சிந்தனை சிலரிடமிருந்து இன்னும் மறையவில்லையென பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் பயங்கரவாத சிந்தனை தொடர்பில் பாதுகாப்பு தரப்பு மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டுமெனவும் அவர் கூறினார்.

தியதலாவை இராணுவ அக் கடமியில் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் இராணுவ கெடட் அதிகாரிகளின் 89ஆவது பிரியாவிடை அணிவகுப்பு தியதலாவை இராணுவ முகாமில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக

32 ஆம் பக்கம் பார்க்க....

## வீதி விபத்தில் பெண் மரணம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளும் ஜீப் ரக வாகனமும் விபத்துக்குள்ளானதில் குடும்ப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 5.15 மணியளவில் வவுனியா சாம்பல் தோட்ட சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மோ.சைக்கிளில் பயணித்த வவுனியா நெலுக்குளம் பகுதியைச் சேர்ந்த சத்தியநாதன் வனோசா (வயது 35) என்று குடும்பப்பெண்ணே உயிரிழந்தவராவார்.

31 ஆம் பக்கம் பார்க்க....

## மீள்குடியேற்றம் குறித்து எதுவும் கூறாத ஜனாதிபதி!

### வலி வடக்கு மக்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீள்குடியேற்றம் மற்றும் காணி விடுவிப்பு குறித்து எதுவும் கூறாமலே சென்றுள்ளார்.

தமது நிலங்களை விடுவிக்கும் அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொள்வார் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் இருந்த மக்கள் இதனால் ஏமாற்ற மடைந்துள்ளனர். இந்நிலையில் ஜனாதி

32 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

- 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை.
- உணவுப்பொருட்கள், உடுப்புகள், கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**மிகக் குறைந்த கட்டணம்.**




**திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd.**

271, K.K.S Road, Jaffna

கிளைகள்: திருநெல்வேலி, நெல்லியடி, பருத்தித்துறை, சங்கானை.

தொலைபேசி இல : 021 222 7835

(4981)



## மீண்டும் கிரியைகள் ஆரம்பம்

**சமயக் கிரியைகள் பற்றிய அறிவித்தல்**
**மரணக் கிரியைகள், அந்தியேட்டிக் கிரியைகள்**
**பொருத்தமாக செய்து கொடுக்க**
**மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**எஸ்.சபாரத்தின தேசிகர்**
பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்
பண்டாரி அம்மன் கோவில் தம்பசிட்டி பருத்தித்துறை.

(C-4928)

தொடர்புகளுக்கு
**077 670 1678, 021 226 3944**



## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.
இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

**Manufactured by:**
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567

(C-4912)


### 750 மில்.நிதியில் பாலாவி விமான நிலைய அபிவிருத்தி

(மன்னார்)

மன்னார் பாலாவி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த விமான தளத்தை மேலும் 26 ஹெக்டெயார் நிலப்பரப்புவரை விஸ்தரிப்பதற்காக 750 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்படவுள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாலாவி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சரவை அனுமதிப்பத்திரத்தை போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

மேலும், பலாலி விமான நிலையம் சர்வதேச தரத்துடனான வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)


சேவை முகவர்

## காணிகள் விற்பனைக்கு

மணிக்கூட்டு வீதி Y.M.C லேன், பலாலி வீதி உரும்பிராய், நுணாவில் A9, 1/4 மைல் தூரம்,தென்னந்தோட்டம், 21/2, 3, 21 பரப்பு அளவுகளில் யாழ்., நல்லூரில் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.

**V.சுந்தரம்-0774819801**

(4983)



## காணி விற்பனைக்கு

கொடிகாமம் கச்சாய் வீதியில்
12 பரப்பு காணி விற்பனைக்குண்டு
தொடர்பு: (4979)

**0767026426**



வேலையாட்கள்
## தேவை

தேநீர் கடை ஒன்றுக்கு
வேலையாட்கள் தேவை

- Tea Maker - தேநீர் தயாரிப்பவர்
- உணவு பரிமாறுபவர்

தொடர்பு:-
**076-8597856**

(4980)



A9 வீதியில் நுணாவில் சந்தி பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 24 பரப்பு காணி விற்பனைக்குண்டு. 3, 5, 7, 10 என வீட்டுத் திட்டத்திற்கு அமைய பிரித்தும் கொடுக்கப்படும்.

**0778730129**

(4930)



## Yarl Beauty Academy
YARL BEAUTY ACADEMY

**அழகுக்கலை பயிற்சிகள்**



- Certificate in Basic Beauty Courses
(ஒரு மாத கால அழகுக்கலை)
- Dip in Beauty Culture & Hair Dressing
(மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Certificate in Cake Icing (கேக் ஐசிங்)

கிழமை நாள் பிரிவுகள் 24.06.2016 (வெள்ளி) 10.30 மணிக்கு
சனி, ஞாயிறு பிரிவுகள் 25.06.2016 (சனி) 10.30 மணிக்கு

அனைத்து பயிற்சிகளும் இந்திய முறையில் மிகச்சிறந்த பயிற்சி நெறி விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

வகுப்புகளில் சேரவிரும்புவோர் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

(சி-4929)

**இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)**


## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் தனலஷ்மி நாகரெத்தினம்
19.06.2016



மண்ணில் 17.07.1944

விண்ணில் 20.05.2016

அன்புச் சுடர் ஒளியாய்
அனைவர்க்கும் வழிகாட்டி
என்றும் எம் வாழ்வுக்கு
வளம் சேர்த்த அரும் தாயே
இன்றில்லை நீர் இங்கு...
இதயத்துள் துயர் நிறைத்து

எங்கே தான் சென்றீரோ?
ஏன் எம்மைப் பிரிந்தீரோ?
நின்ற தொரு பெருவிருட்சம்
நிமிடத்தில் சாய்ந்து விட
நிழல்தேடி தவிக்கின்றோம்
நினைவுகளின் நீர் உயிர்ப்பீர்




கே.வேலாயுதம்
(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி)
இ.நந்தகோபால் (மில்க் வைற்)
வி.தயாபரன் (தயா அச்சகம்,
தயா வெளியீடு)
யு.சிவன்ராஜ் (T.O. நெடுந்தீவு
பிரதேச சபை),
குடும்பத்தினர்.

தயா அச்சகம்,
575, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(4920)

## கண்ணீர் காணிக்கை



(சி-4930)


திருமதி
## கனகாம்பிகை செல்வநாயகம்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வ ராஜா கஜேந்திரன் அவர்களின் அன்பு மாமியார் கனகாம்பிகை செல்வநாயகம் அவர்களது மரணச் செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.

துயருடன்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ். (தொ.பே: 021 221 2530)

# யாழில் நேற்று சர்வதேச யோகாதினம் மைத்திரி பங்கேற்பு;மோடியும் இணைவு









இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு திறப்பு விழாவும், சர்வதேச யோகா தினமும் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் நேரடியாக கலந்து கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன- இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவிலிருந்து காணொலி மூலம் விளையாட்டரங்கினை திறந்து வைத்தனர். நேற்று முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் துரையப்பா விளையாட்டரங்கில் ஒன்றுகூடி யோகா பயிற்சியிலும் ஈடுபட்டிருந்தனர்.

(படங்கள் -உ.சாளின)

## ஒக்டோபர் மாதம் அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள்

(கொழும்பு)

இலங்கை அமைச்சரவையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பாரிய மாற்றங்களைக் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டும், சில அமைச்சர்கள் முகங்கொடுத்துள்ள குற்றச்சாட்டுக்களை கருத்தில் கொண்டும் ஜனாதிபதி இந்த அதிரடி நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக மேலும் கூறப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் வருட முற்பகுதியில் நடைபெறவிருப்பதாக ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

தேசிய அரசாங்கம் என்றபோதிலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெவ்வேறாக செயற்பட இரண்டு பிரதான கட்சிகளும் எதிர்பார்ப்பதோடு தேர்தலை எதிர்கொள்ள தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க, சில அமைச்சர்களது செயற்பாடுகள் திருப்திகரமாகவும், திறனாகவும் இல்லை என்ற முறைப்பாடு ஜனாதிபதி, பிரதமரின கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் அமைச்சரவையில் மாற்றம் கொண்டுவந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(இ-10)

## கைப்பற்றிய போதைப்பொருட்களை ஜனாதிபதி தீயிட்டு அழிக்கவேண்டும்

இலங்கை சுங்கத்திணைகளத்தால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எங்கள் முன்னிலையில் தீயிட்டு அழிக்க வேண்டும் என இலங்கை சுங்க சேவையாளர் சங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இதன்மூலம் சுங்கத்தினால் கைப்பற்றப்பட்டுள்ள பாரிய அளவிலான போதைப் பொருட்கள் போதைப்பொருள் வியாபாரிகளின் கரங்களுக்கு செல்வதை தடுக்க முடியும் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் ஜே.ஏ. குணதிலக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுங்கத்திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட பாரிய அளவிலான போதைப் பொருட்கள் உள்ளூர் சந்தைகளில் விற்கப்படுகின்றன என மக்கள் மத்தியில் கருத்து நிலவுகின்றது, இதுகுறித்து சந்தேகம் எழுந்துள்ளது.

மேலும், சுங்கத்திணைகளத்தினர் பாரியளவில் போதைப்பொருட்களை கைப்பற்றுகின்ற போதிலும் உள்ளூர் சந்தைகளில் தொடர்ந்தும் பாரிய அளவில் போதைப் பொருட்கள் காணப்படுகின்றன.

சுங்கத்தால் பாதுகாக்கப்படும் போதைப் பொருட்கள் நேர்மையற்ற அதிகாரியின் கரங்களுக்குச் சென்றால் அதனால் பாரிய விளைவு ஏற்படலாம்.

இவற்றைக் கருத்தில் கொண்டு, இலங்கை சுங்கத்திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சுங்க அதிகாரிகள் தீயிட்டு அழிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றவாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## இலங்கையின் கடல் வளங்களை ஆய்வு செய்ய தயாராகும் நோர்வே

நீரியல் அளவை மற்றும் மீன்களின் தொகைகளை மதிப்படும் பணிக்கு இலங்கைக்கு உதவ நோர்வே முன்வந்துள்ளது.

இது தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு விஞ்ஞான ரீதியிலான தொழில்நுட்பத்தை பயன்படுத்தும்படி கடற்றொழிற்றுறை அமைச்சர் மகிந்த அமரவீரவிற்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்பிராந்தியங்களில்மேற கொள்ளப்படும் ஆய்வுகளின் தரவுக்கிணங்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுகளின் போது, கடலின் ஆழம் உட்பட சகல விபரங்களும் நாடளாவிய ரீதியான கடற் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த பணிகளுக்காக நோர்வேயிலிருந்து சிறப்பு கப்பல் ஒன்று வரவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கப்பல் இலங்கை கடற் பிராந்தியத்தில் அதிகாரிகளுடன் இணைந்து சுமார் இரண்டு வருடங்களுக்கு இந்த பணியினை மேற்கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.(இ-10)

## விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது புடவை விற்பனை நிலையத்துக்கு புடவை அனுபவம் உள்ள ஆண்/பெண் ஊழியர்கள் தேவை.

**சென்னை பசன் வேல்ட்**
**63, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-4933)

## வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நாள் ஒன்றுக்கு ரூபா 400 வேதனமாக வழங்கப்படும். வயது 18 தொடக்கம் 35 வரை. வேலை நேரம் காலை 8 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை. திங்கட்கிழமையிலிருந்து தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு:-11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

(4977) **தொ.பே:-021 222 3857**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, கோப்பாயில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் 2 பரப்பு காணி விற்பனைக் உண்டு. தனிக்கிணறு உள்ளது. கோப்பாய் சந்தியிலிருந்து 1/4 மைல் தூரத்தில் AGA Officeக்கு அருகாமையில் அமைந்துள்ளது.

**தரகர் தேவையில்லை.**
**விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.**

தொடர்பு:- **0776589656**

(4975)

# 8 கிலோ தங்கம் பறிமுதல்

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக கடத்தப்பட்ட 8.76 கிலோகிராம் தங்கம் இந்தியாவின் காரைக்கால் பகுதியில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

காரைக்காலுக்கு அருகே நிரவி பகுதியில் மத்திய வருவாய புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அரச பேருந்தில் மறைத்து வைககப்பட்டிருந்த தங்கக் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் இந்திய ரூபாய் மதிப்பில் 2. 07 கோடி ரூபாய் பெறுமதி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நாகை, ஜுடிசியல் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து, அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(செ-12)

FALC FRENCH LANGUAGE CENTRE "FOR THE BEST FRENCH FOREVER"

## FRENCH CLASSES

பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)


DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....

No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
10.01.1934

மறைவு
18.06.2016

### சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்

சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சோமசுந்தரம் வீதி,**
**ஆனைக்கோட்டை** (சி-4931)

**-மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்.**

## பணியாள் தேவை

பரந்தனில் அமைந்துள்ள மைக்ரோ கார் விற்பனை நிலையத்தில் கடமையாற்றுவதற்கு அனுபவம்மிக்க கிளிநொச்சி மாவட்டத்தை அண்மித்த பகுதியைச் சேர்ந்த ஆண்கள் (வயதெல்லை 25-45) பணியாளர் தேவை. கணனி அறிவு உடையவரும், சாரதி அனுமதிப்பத்திரம், விற்பனையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. மேலுள்ள தகைமை உடையவர்கள் சுயவிபரக் கோவையுடன் 30.06.2016ற்கு முன் தொடர்பு கொள்ளவும்.


அத்துடன் பார ஊர்தி சாரதியும் கணக்காளரும் தேவை.

குறிப்பு:-சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:-077 772 2305**
**திரு.யசோதரன்**
**சிவகுரு ஹாட்வெயார்**
**கரடிப்போக்கு, கிளிநொச்சி.**

(சி-4924)

## மரண அறிவித்தல்



### குழந்தைவேலு யோகரட்ணம் (சிவம்)

சரவணை கிழக்கு வேலணையை பிறப்பிடமாகவும், அம்மன் வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு யோகரட்ணம் (சூர்யா லொறி சிவம்) நேற்று (18.06.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - அன்னம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், சிந்துஷா, மிதுஷா, சரண்ஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்னலட்சுமி, ராஜரட்ணம், காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் தனலட்சுமி, விஜயரட்ணம், ராஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனேஸ்வரி, இந்திராதேவி, காலஞ்சென்றவர்களான முத்துக்குமார், தவமணிதேவி மற்றும் தர்மராஜா (தர்மு தேங்காய் கடை), பரமானந்தம், ஜெயகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று 2.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

**இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**அம்மன் வீதி,**
**திருநெல்வேலி.** (4984)

**தகவல் :**
**குடும்பத்தினர்**


## வயிறு குலுங்க சிரிக்க வாரீர்...

Head of Lanka PRODUCTION

### இலங்கையில் முதல் நகைச்சுவை நிகழ்ச்சி




VEERASINGHAM HALL : Saturday 25th June - 5.30 PM

J/NELLIADY CENTRAL COLLEGE, GROUND : Sunday 26th June - 5.30 PM

Further Detail : 075 042 4195

தென்னிந்திய புகழ் மிம்மிகிறி ஸ்டான்டட் காமடி & டான்ஸ் மனோ,
விஜய் டிவி மற்றும் மாரி திரைப்பட புகழ் றோபோ சங்கர்,
காதல் திரைப்பட புகழ் சுகுமார், சிற்றிசன், யூத்,
விருமாண்டி திரைப்பட புகழ் கொட்டாச்சி,
ஆதித்யா டிவி புகழ் திருச்சி இளங்கோ சரவண குமார்,
சன் டிவி புகழ் கிரி ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்

HARI · SELLAMUTHUS · Ilamai FM · சிறிநந்தியா · TILKO · Rasi
KIRUBAA LEARNERS · SHARANGA NAGAI MAADAM · HAPPY TEX · THAVAM STUDIO · E.S.P.N · ideas PRINTERS

(சி-4918)

# படகில் தத்தளித்த தமிழ் அகதிகளை தரையிறங்க இந்தோனேசியா அனுமதி

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவின் ஆச்சே மாகாண கடற்கரையில் தரைதட்டி நிற்கும் படகில் இருந்த இலங்கைத் தமிழ் அகதிகளை தரையிறங்குவதற்கு இந்தோனேசிய அரசாங்கம் நேற்று அனுமதி அளித்துள்ளது.**

கடந்த சனிக்கிழமை தொடக்கம், ஒரு வாரகாலமாக ஆச்சே மாகாண கடற்கரையில் படகில் இருந்த அகதிகள் 44 பேரும் நேற்று தரையிறங்க அனுமதிக்கப்பட்டனர்.

படகில் உள்ள அகதிகளை தரையிறங்க அனுமதிக்குமாறு இந்தோனேசிய உதவி ஜனாதிபதி யூசுப் கல்லா, ஆச்சே மாகாண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதை அடுத்தே, அகதிகள் கரையில் இறக்கப்பட்டனர்.


அகதிகளை ஒளிப்படம் எடுத்து அடையாளங்களை பதிவு செய்யும் பணிகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

பெண்கள், குழந்தைகளை உள்ளடக்கிய அகதிகள் படகை மீண்டும் ஆழ்கடலுக்குள் கொண்டு சென்று விடுவதற்கு முன்னர் இந்தோனேசியா முடிவெடுத்திருந்தது.

இதற்கு அனைத்துலக அளவில் கடும் எதிர்ப்பும் கண்டனங்களும் எழுந்த நிலையிலேயே அகதிகளை தரையிறக்க நேற்று அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## போட் சிட்டிக்கு பதிலாக பொருளாதார நகரம்

### பிரதமர் ரணில் அறிவிப்பு



கொழும்பில் அமைக்கப்பட இருந்த போட்சிட்டிக்குப் பதிலாக பொருளாதார நகரமொன்றை அமைப்பது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதமர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் சீனாவின் சைனா ஹார்பர் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து வெறுமனே கேளிக்கை அம்சங்கள் மட்டும் கொண்ட துறைமுக நகரமொன்றுக்குப் பதிலாக பொருளாதார நகரம் ஒன்று காலிமுகத்திடல் அருகே அமைக்கப்படவுள்ளது.

தற்போதைக்கு உலகின் சந்தைப்படுத்தல் மத்திய நிலையங்களாகவும், பொருளாதார நகரங்களாகவும் கருதப்படும் சிங்கப்பூர் மற்றும் டுபாய் ஆகியவற்றுக்கு மத்தியில் அமையும் இன்னொரு பொருளாதார நகரமாக இது மாற்றம் பெறும்.

குறித்த பொருளாதார நகரம் அமையவுள்ள காணி சீன நிறுவனத்துக்கு விற்பனை செய்யப்படுவதற்குப் பதில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொருளாதார நகரம் அமையப் பெறும் பட்சத்தில் உலகின் அனைத்து நாடுகளின் உற்பத்திகளும் இலங்கையில் இருந்து சர்வதேச சந்தைக்கு விற்பனை செய்யப்படும் வாய்ப்பு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## ஜனாதிபதியின் முகநூல் சாதனை




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோக பூர்வ முகநூல் ஒரு மில்லியன் விருப்பு “like” களை தாண்டியுள்ளன.

இலங்கை அரசியல்வாதி ஒருவர் தனது உத்தியோக பூர்வ முகநூல் பக்கத்தில் ஒரு மில்லியன் Like ஐ பெற்றுக்கொண்டது இதுவே முதல் தடவை ஆகும்.

நேற்று அதிகாலை 5:54 மணியளவில் ஜனாதிபதியின் முகநூல் பக்கம் ஒரு மில்லியனை தாண்டியதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 18 மாதங்களில் ஜனாதிபதியின் முகநூல் விருப்புக்கள் இந்த இலக்கை அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை நேற்று அதிகாலை 5:54 மணியளவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோக பூர்வ முகநூல் 999,254 Like களை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## விண்ணப்பங்கள் கோரல்

இலங்கைவிஞ்ஞானசேவையின் தரம் III இல் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2015 இற்கான அரசாங்க சேவைகள்ஆணைக்குழுவின்ஆணைப்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கீழ்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி), உதவிப்பணிப்பாளர் (அபிவிருத்தி), வளிமண்டலவியலாளர், உதவிப்பணிப்பாளர், பௌதீகவியலாளர்.

வயதெல்லை- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு (2016. 07.15) 22 வயதிற்குக் குறையாமல் இருப்பதோடு 32 வயதினை விட மேற்பட்டிருத்தல் கூடாது.

சம்பள அளவுத்திட்டம் SL- 1- 2016, ரூ 47,615- 10X 1335 -8 X 1, 630 - 17X2,170- ரூ 1,10,895 இணை மாதாந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடையதாகும்.

மேலதிக தகவல்களுக்கு 17.06.2016 இல் வெளி வந்த வர்த்தமானியைபார்வையிடவும்.

2015/2016 ஆம் கல்வியாண்டில் பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொதுக் கலைத்தகைமை (வெளிவாரி/பரீட்சை ஆங்கில பாடத்துடன்) மற்றும் விஞ்ஞானமாணி (வெளிவாரி) பட்டத்தின் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பமுடிவுத் திகதி 2016.07.15 மேலதிக தகவல்களுக்கு 17.06.2016 இல் வெளிவந்த வர்த்தமானியை பார்வையிடவும். (இ

## அமெரிக்காவின் தடுப்பு பட்டியலில் பொன்சேகா



அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை தடுப்புப் பட்டியலில் (black list) இணைத்துக் கொண்டுள்ளமையால் அமெரிக்காவுக்கு செல்வதற்கு தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தடுப்புப் பட்டியலில் பொன்சேகா இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு வெளிநாட்டு தூதரகம் கூறியுள்ளது.

பொன்சேகா அண்மையில் அமெரிக்கா செல்வதற்காக விண்ணப்பித்திருந்தார். எனினும் வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்ற போர் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்ததாகவும், மனித உரிமைகள் மீறல் ஆகிய குற்றங்களினால் இவர் அமெரிக்கா செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் தூதரக வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற போரினை அடுத்து பொன்சேகாவிற்கு அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தடுப்புப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றும், போருக்குப் பின்னர் ஒரு வருடம் அமெரிக்காவிற்கு விஜயம் செய்திருந் தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

## இராசி பலன்

19.06.2016

(ஆனி 05, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு

சதுர்த்தசி பிற்பகல் 4.14 மணிவரை

கேட்டை முழுவதும்

சுபநேரம் 8.54-10.24மணிவரை

இராகுகாலம் 4.24-5.54 மணிவரை

நயினை நாகபூஷணி தேர்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | புத | சூரி சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை துலா-செவ் (வக்) | | |
| | | | குரு ராகு |
| | சனி சந் | செவ் | |

**மேடம்** — ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், வேலைச்சுமை கூடும், தேகநலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள்.

**இடபம்** — பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** — உற்சாகமாகப் பணிபுரியும் நாள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பழைய கடனில் ஒரு பகுதியை கொடுத்து தீர்க்கும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** — தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தனவரவு திருப்திகரமாக அமையும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** — சுப செய்திகள் வந்து சேரும் நாள், பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், தாய் வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.

**கன்னி** — உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியமொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** — புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்** — வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** — சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது, அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்** — வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கும்பம்** — புதிய முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம்.

**மீனம்** — தடைப்பட்ட காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தேக நலன் சீராகும், திறமை மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

# பற்றைக்காடுகளால் சூழ்ந்துள்ள மயானம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி வெள்ளாம்போக்கட்டி கிராமத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட மயானம் பராமரிப்பின்றி பற்றைக் காடாக காணப்படுவதாக பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் தென்மராட்சியில் உள்ள பல மயாணங்கள் இராணுவத்தினரால் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டிருந்தவேளை மேற்குறித்த மயானத்திலே பெரும்பாலான தகனக் கிரியைகள் இடம்பெற்று வந்தன.


ஆனால் குறித்த மயா ணம் இன்றுகவனிப்பாரின்றியநிலையில் காணப்படுகின்றது.

இம் மயாணம் உரிய முறையில் பராமரிக்கப்படுவதில்லை. அத்தோடு மயான த்தைச் சூழ அமைக்கப்பட்ட வேலிகள் அடைக்கப்படாது காணப்படுகின்றன.

அயல்புறங்களில் உள்ள பொதுமக்களால் கழிவுப் பொருட்கள் இம்மயானத்திலே கொட்டப்பட்டு வருகின்றன.

இதனால் அம்மயானம் மேலும் சுகாதாரச் சீர்கேடான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

எனவே கவனிப்பாரின்றி பற்றைக் காடாக உள்ள இம்மயானத்தை உரிய முறையில் துப்புரவு செய்யுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-89)




(கேலிச்சித்திரம்)

## பொதுக்கூட்டம்

வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டு றவுச் சங்கப் பொது க்கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி யளவில் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (இ-5-60)




## துவிச்சக்கரவண்டியில் கசிப்பு விற்றநபர் கைது

### 50 ஆயிரம் ரூபா அபராதம்

துவிச்சக்கரவண்டியில் சென்று கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறும் 50 மணித்தியாலங்கள் பொதுச்சேவை செய்யுமாறும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

அல்வாய் மாலுசந்திப் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யபபட்ட மேற்படி நபரை பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்திய போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டதுடன் உத்தரவை மீறினால் ஆறுமாதகால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (இ-5-60)

## இரண்டாம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றம் நடத்தும் கூத்துக் கலைக்கூடல் நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 12.30 மணியுடன் நிறைவடையவுள்ளது.

இதன் போது அற்றைத் திங்கள் கூத்துருவ நாடக நூல் என்ற நூல் வெளியீடு மட்டக்களப்பு கலைக்கழகம் வழங்கும் அலங்காரரூபன் என்ற தென்மோடிக்கூத்து மன்னார் பேசாலை விழிகள் கலாமுற்றம் வழங்கும் இராமபாணம், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் வழங்கும் எஸ்தாக்கியார் என்ற தென்மோடி நாட்டுக் கூத்து என்பன இடம் பெறும்.


தொடர்ந்து மாலை 6 மணியளவில் கருத்தமர்வும் கண்காட்சியும் இடம்பெறும். (இ-5)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். வித்தியாலய 140 வது ஆண்டு நிறைவையொட்டிய செயற்றிட்டங்கள் அமுல்படுத்துவது தொடர்பான முடிவுகளை எடுப்பதற்குரிய விசேட கூட்டமாக அமையவுள்ளது. (இ-5)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 15 ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர்களின் பிரிவுபசார விழா கடந்த புதன்கிழமை 15 ஆம் திகதி மாலை 5 மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டப முன்றலில் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக யா/வேலணை மத்திய கல்லூரி அதிபர் சி.கிருபாகரன் கலந்து கொண்டார். (படங்கள்:-பொ.சோபிகா)

## விழுமியங்கள் பற்றிய விவாத போட்டித் தலைப்புக்கள்

மனித விழுமியங்களை கட்டியெழுப்பும் நோக்குடன் யாழ்.பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் இல.213,பிறவுண் வீதியில் நிர்மாணிக்கப்பட்டு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் திறந்து வைககப்பட்ட சுகதாமம் மண்டபம் 2016 ஓகஸ்ட்டில் தனது ஓராண்டை நிறைவு செய்கின்றது.

இதனை முன்னிட்டு, தனிநபர் மற்றும் சமூக விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கிலான விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டியொன்றை மாகாண மட்டத்தில் க.பொ.த.(உ/த) பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல் சுற்றுப் போட்டிகளும் இரண்டாம் சுற்றும் ஜூன் 27ஆம் திகதி முதல் ஜூலை 11ஆம் திகதி வரை பாடசாலை நாட்களில் காலை 9மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இடம்பெறவுள்ளன. இப் போட்டியைக் கண்டு களிக்கப் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

யார்சிறந்தவன்மரியாதை கொடுப்பவனா (மதிப்பவன்)?, மரியாதை பெறுபவனா (மதிக்கப்படுபவன்)? மனித வாழ்வுக்கு மிகவும் அவசியமானது அன்பா? மகிழ்ச்சியா?, சகிப்புத் தன்மையை அவ்சியம் பயிற்சி செய்ய வேண்டியவர்கள் இளைஞர்களா? முதியவர்களா?, ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவது ஒழுக்கமா? தாராள மனமா?, அன்புக்குத் தடையாவது அகங்காரமா? கோபமா?,பணிவு அதிகம் அவசியமாவது இளையவர்களுக்கா? மூத்தவர்களுக்கா?, இளைஞர்களுக்கு அவசியமானது சுதந்திரமா? பொறுப்புணர்ச்சியா?, பிள்ளைகள் பெற்றோரிடம் எதிர்பார்ப்பது அன்பா? மரியாதையா?, மரியாதையான நடத்தைக்குக் காரணம் பிறப்பா? வளர்ப்பா?,ஒற்றுமையான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது கல்வியா? கலாசாரமா?, எளிமையில் அதிகம் வெளிப்படுவது நிம்மதியா (அமைதியா?) மகிழ்ச்சியா?, ஒத்துழைப்புக் கிடைக்காமல் போவதற்குக் காரணம் எனது கடந்த காலமா? எனது நிகழ்காலமா?, ஒற்றுமைக்குப் பலம் சேர்ப்பது ஒத்துழைப்பா? நேர்மையா?,நல்ல மாற்றத்தைக் கொண்டு வருவது அன்பா? மரியாதையா?, நேர்மையின் அத்திவாரம் சகிப்புத்தன்மையா? சுதந்திரமா?,வெற்றியின் வெளிப்பாடு எளிமையா? பணிவா?, இழக்கவே கூடாதது எது மரியாதையா? அன்பா?, பொறுப்புணர்ச்சி அற்றுப் போவதால் இழக்கப்படுவது அமைதியா? சுதந்திரமா?,நம்பிக்கையின் அடித்தளம் அமைதியா? பொறுப்புணர்ச்சியா?, பெற்றோர் குழந்தைகளிடம் எதிர்பார்பது அன்பா? நேர்மையா?, சிறந்த மாணவனுக்கு அவசியமானது பணிவா? பொறுப்புணர்ச்சியா?, உண்மையான சுதந்திரத்தால் கிடைப்பது மன ஒருமைப்பாடா? நினைவாற்றலா?,கலாசார மேன்மைக்குக் காரணம் புற அமைதியா? அக அமைதியா?, வளர்க்கப்பட வேண்டியது எது சுதந்திரமா? சகிப்புத்தன்மையா?,வெற்றியின் முதல்படி அமைதியா? பொறுப்புணர்ச்சியா?,நேர்மையின் வெளிப்பாடு சிந்தனையா? செயலா?, ஆன்மீகவாதிகளால் அதிகம் விரும்பப்படுவது சகிப்புத்தன்மையா? எளிமையா?,மனவலிமை தருவது மகிழ்ச்சியா? பணிவா?, ஒத்துழைப்புக்கு அதிகம் அவசியம் விட்டுக்கொடுப்பா? திடசங்கற்பமா?, நேர்மையின் பலன் ஆத்ம திருப்தியா? சாதனைகளா?, எளிமை என்பது பெருந் தன்மையா? கவர்ச்சியா?, சுலபமானது எது மதித்து நடப்பதா? மதிப்பைப் பெறுவதா?, ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவது அடக்கமா? உற்சாகமா?, சுதந்திரம் பெற்றுத் தருவது சீரிய கலாசாரமா? திறந்த மனமா?, ஒற்றுமைக்கு இடையூறாவது குறுகிய மனப்பான்மையா? அதிகார மனோபாவமா?, இன்றைய காலகட்டத்தில் அதிக சவாலாக இருப்பது எளிமையா? நேர்மையா?, வாழ்க்கைத் தரத்தின் இரகசியம் பொறுப்புணர்ச்சியா? சுதந்திரமா?,சிறந்த நினைவாற்றலுக்குக் காரணம் மன நிம்மதியா? மன மகிழ்ச்சியா?, கலாசார மேன்மைக்குக்காரணமானவர்கள் இளைஞர்களா? முதியோரா?,மன வலிமை கிடைப்பது தியானம் பற்றிய அறிவைத் தேடுவதாலா? இடையறாத தியானப் பயிற்சியாலா?

## ஆசிரியரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதான இருவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கரணவாய்)

ஆசிரியர் ஒருவரை தாக்கிய இரண்டு சந்தேகநபர்களை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரை மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தாக்கி காயப்படுத்தியுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டி இது தொடர்பில் ஆசிரியரால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது.

பொலிஸாரின் தேடுதலின் பின்னர் மேற்படி இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டதுடன் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போதே அவ் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-5-60)

## முன்பள்ளிக் குழந்தைகளின் கலாசார அணிவகுப்பு விழா

வீணாகான குருபீடம் நடத்தும் சங்கானைக் கோட்ட முன்பள்ளிக் குழந்தைகளின் சைவத்தமிழ் கலாசார அணிவகுப்பு விழா நாளை பிற்பகல் 4 மணியளவில் வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஸ்ண ஐயர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ். இந்தியத்துணைத் தூதுவர் ஏ. நடராஜன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

25 இற்கு மேற்பட்ட முன்பள்ளிகளைச் சேர்ந்த 250 சிறார்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# டிப்ளோமா பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் நடத்தப்படும் மனித வள முகாமைத்துவ டிப்ளோமா, சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா ஆகியவற்றுக்கான பரீட்சைகள் இம்மாதம் 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறும் என பேராசிரியர் க.தேவராஜா அறிவித்துள்ளார்.

அத்துடன் இதுவரை பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறியவர்கள் உடனடியாக விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அவர்மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

# பௌர்ணமி பெருவிழா

யாழ். தங்கச்சக்கர யோகமகாலட்சுமி கோவில் மாதாந்த பௌர்ணமி பெருவிழா நாளை காலை 9 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இதன்போது அகண்டநாம பஜனை, தேவாரம், திருமுறை கூட்டுப்பிரார்த்தனை, இலவச தமிழ் சித்த வைத்திய முகாம், யோகாதினப் பயிற்சி, ஆங்கிலப் பயிற்சி என்பனவும் இடம்பெறும். (இ-5)


SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES

0% NET FARE

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,400/- | LONDON | 59,000/- |
| MADURAI | 18,600/- | TORONTO | 89,000/- |
| TRICHI * | 27,800/- | MALDIVES | 17,500/- |
| BOMBAY | 28,000/- | ITALY | 86,699/- |
| BENGALURE | 28,900/- | NEWYORK | 107,000/- |
| KALKATTA | 34,800/- | MELBOURNE | 99,800/- |
| DELHI | 47,400/- | CANTON | 56,900/- |
| MALAYSIA | 26,000/- | PERTH | 86,200/- |
| SINGAPORE | 28,400/- | NARITA | 75,900/- |
| BANGKOK | 29,900/- | AUCKLAND | 128,900/- |
| ONEWAY: ABUDHABI - 18,800/- | | SYDNEY | 81,600/- |

DUBAI- 16,800/- DOHA-16,800/- SHARJAH - 14,500/-

*Condition Apply

VISA CARD ACCEPTED.

குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு

IATA ACCREDITED AGENT

எதிர்பாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் டிக்கட்டுகளும், வீசா ஏற்பாடு உட்பட அனைத்தும் ஒரே இடத்தில் சிறப்பாக செய்து கொள்ள இன்றே அழையுங்கள்:

0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83

0212229555 / 0212228555

Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81

e-mail : bookings@sbairfares.com

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280

No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322

NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence





Assemble Of God Emmaanuvel

தெய்வீக சுகம் அளிக்கும் ஜெய ஊழியம்

நோய் வாய்ப்பட்டோர், பில்லி சூனியம், மாந்திரிகை கட்டுகள், குழந்தை இன்மை, குடும்பப் பிரச்சினைகள், திருமணம் அமையாதவர்கள் சகலவற்றுக்கும் ஏற்ற வல்லமையான ஊழியம் செய்வதற்கு (U.K) இல் இருந்து போதகர் டேவிட்டை 14.06.2016 இல் இருந்து ஒரு மாதத்திற்குள் 14.07.2016 வரை சந்திக்கலாம்.

தம்புவத்தை,
ஏழாலை மேற்கு, ஏழாலை.
டேவிட் U.K.:- 076 983 9038,
077 852 0121


# யாழ்ப்பாணம் மாநகரசபை

## துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் -2016

யாழ். மாநகர சபையினால் 04.11.2015 ஆம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைவாக இதன் கீழ் குறிப்பிடப்பட்ட து.வ.பா. நிலையத்தை 01.07.2016 ஆம் திகதி முதல் 31.12.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 500.00 ( VAT, NBT நீங்கலாக )
கேள்விப்படிவம் விநியோகித்தல்- 20.06.2016 தொடக்கம் 28.06.2016 வரை
கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல் -29.06.2016 முற்பகல் 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 29.06.2016 முற்பகல் 10.30 மணிக்கு

| தொ இல | விபரம் | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்வி பிணைப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | முனீஸ்வரன் வீதி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் (வீரசிங்கம் மண்டபம் அருகாமை) | | 2,000.00 | 1,00,000.00 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.

பொ.வாகீசன்
ஆணையாளர்
யாழ்.மாநகர சபை


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா:75செவ் 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:HNDA/லண்டன் NOT PR
எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்
தொ.இ: B/5953

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 66செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/கட்டார்
தொ.இ: B/5954

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 64சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:MA/ஆசிரியர்
தொ.இ: B/5955

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 16
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/Lபிரான்ஸ் PR
தொ.இ: B/5957

**மணமகன் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 42செவ் 1 இல்
c a uk ; 5'3"
தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர்
எதிர்பார்ப்பு:சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/5561

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 17செவ் 2இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/5563

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 56செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5564

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 8
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5565

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


#Generation පරපුර தலைமுறை | #WeGovernSL | FRIDA The Young Feminist Fund

# நீங்கள் 21-40 வயதுக்கு இடைப்பட்ட அரசியலில் ஈடுபடும் விருப்பமுள்ள பெண்ணா?

உங்களுக்கு உள்ளூராட்சி, மாநகராட்சி, மாகாணசபை, ஏன் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் விருப்பம் இருக்கிறதா?

உங்களுக்கு தேர்தலில் போட்டியிடும் தகுதியும் உங்களுடைய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் விருப்பம் உள்ளதா?

மேலே குறிப்பிட்ட ஏதாவது ஒரு கேள்விக்கு உங்களுடைய பதில் ஆமாம் என்றால் உங்களுடைய கனவை நனவாக்குவதற்கு நாம் ஹாஷ்டாக் தலைமுறை (#Generation) மூலமாக தொடர்பாடல் பயிற்சிகளை வழங்க தயார்!

நீங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி மற்றும் 10 ஆம் திகதி யாழப்பாணத்தில் நடைபெறவுள்ள தொடர்பாடல் மற்றும் திறமை விருத்தி பயிற்சி பட்டறையில் பங்குபற்ற விரும்பினால் உடனே உங்களது சுய விண்ணப்பத்தை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

இந்த பயிற்சி பட்டறை முழுவதும் தமிழில் நடத்தப்படும்

விண்ணப்பத்தை அனுப்பவேண்டிய கடைசித் திகதி **27-06-2016**

இந்தப் பயிற்சி பட்டறை இலவசமாக நடத்தப்படும்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் மஹிஷா: 0773-166462

ஹாஷ்டாக் தலைமுறை
#2, பாம் குரோவ், கொழும்பு 03
Tel: 0773-166462
Twitter: @generation_sl
Facebook: Facebook.com/Hashtag-Generation
Email: generationlka@gmail.com

# நாம் அனைத்தையும் இழந்துள்ளோம் கல்வி ஒன்றே கைகொடுக்கும் சொத்து

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**க்ல்விக்கான ஒரு இராஜாங்க அமைச்சராக தமிழர் ஒருவர் எமக்கு கிடைத்தது எமக்கு பெருமையை ஏற்படுத்தியுள்ளது. அவர் கல்விக்காக ஆற்றுகின்ற சேவை, இன்று எமது அமைச்சர் என்ற வகையில் தலைநிமிர்ந்து பேச வைக்கின்ற தன்மையினை ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுக்கூடம் நேற்று முன்தினம் கல்வி இராஜாங்க அமைச்சர் தலைமையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

மன்னார் மாவட்டம் குறிப்பாக வன்னி மாவட்டம் கல்வி ஒன்றில் தான் பல துன்பங்களின் மத்தியிலே முளைத்து வளர்ந்து செயற்பட்டு வந்தது. அதற்கு காரணமாக இருந்தவர்கள் எமது வலயக்கல்விப் பணிமனை மற்றும் எமது ஆசிரியர் பெருந்தகைகள். போர்க்காலத்தில் கூட அவர்கள் துப்பாக்கி ஏந்தவில்லை.கடமையின் நிமிர்த்தம் தமக்கு பணிக்கப்பட்ட பாடசாலைகளுக்குச் சென்று தமது குடும்பத்தை மறந்து கடமைக்குச் சென்ற எங்களுடைய ஆசிரியர்கள், வலயக் கல்விப்பணிமனை உத்தியோகத்தர்கள் துப்பாக்கி ரவைகளுக்கு பலியானார்கள்.

அவர்களுடைய அந்த பொது நோக்கு மனப்பான்மை என்பது இன்று எமது மாவட்டத்தில் கல்வியினை ஒரு அளவிற்கு உயர்த்தியுள்ள நிலை காணப்படுகின்றது. எல்லாவற்றையும் நாங்கள் இழந்தோம்.ஆனால் கல்வி ஒன்றுதான் எங்களுக்கு கைகொடுக்கின்ற ஒரு சொத்தாக காணப்படுகின்றது.

வெளிமாவட்டத்தில் இருந்து இங்கு வந்து கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கு நாங்கள் என்றைக்கும் தலை வணங்குபவர்களாக இருப்போம். எனினும் எமது பாடசாலைகளில் வளப்பற்றாக்குறை காணப்படுகின்றது. குறித்த வளப்பற்றாக்குறை தீர்க்கப்படுமாக இருந்தால் நாங்கள் யாழ்.மாவட்டத்திற்கு இணையாக வன்னி மாவட்டம் திகழும் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

எனவே கல்வி இராஜாங்க அமைச்சரின் காலத்திலே அவரை நாம் பயன்படுத்தி எங்களுடைய பாடசாலைகளின் வளங்களை பெற்றுக் கொள்கின்ற சந்தர்ப்பத்தை நாங்கள் ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் மூலமே சிறந்த பலனைபெற்றுக்கொள்ள முடியும். எங்களுக்கு கிடைத்த கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஸ்ணன் எங்களுக்கு ஒரு சிறந்த கௌரவத்தை கொடுத்துள்ளார்.அவர் ஒருதமிழனாக இருககின்றார். எனவே போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களிலே அவருடைய தரிசனம் இருக்க வேண்டும்.அங்கு அவர் தனது பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன்.

எங்களுக்கு ஒரு உறவுப் பாலமாக அமைச்சர் செயற்பட்டு வருகின்றார். அவரை நாம் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். அந்தவகையில் முயற்சி திருவினையாக்கும் என்பதற்கு சான்றாக மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை திகழ்ந்து வரும் நிலையில் அதற்கு அந்த பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் இந்த பாடசாலையின் சமூகம் காரணமாக உள்ளன என்றார். (2-281)

## முதிரை மரக்குற்றிகளை கடத்திய சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கடத்திச் செல்லப்பட்ட மரக்குற்றிகளை மரக்கூட்டுத் தாபனத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, மரக்குற்றிகளை கடத்திய சந்தேகநபரை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் அதிகாலை, வனவள திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, கிளிநொச்சி - அக்கராயன் 4ஆம் கட்டை பகுதியில் இருந்து பயணித்த பாரவூர்தியை சோதனைக்குட்படுத்தியபோது, தேங்காய்களால் மூடப்பட்ட சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கடத்திச் செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தியபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. (2)



கிளிநொச்சி தர்மபுரம் புதிய உதயம் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன் பங்குகொண்டதுடன் சிவில் நிர்வாக கட்டளையகத்தின் முல்லைத்தீவு அதிகாரி கேணல் கணேஜகொட, தர்மபுரம் பொலிஸ் நிலைய அத்தியட்சகர் எம்.டி.என். சதுரங்க உட்பட்ட பெற்றோர் பங்கேற்றிருந்தனர். (படம்:-சோலைநகர் செய்தியாளர்)




## 32 பயனாளிகளுக்கு சீமெந்து பக்கெற்றுக்கள் வழங்கப்பட்டன

(சோலைநகர்)

கிளி/ புதுமுறிப்பு சோலைநகர் சாலோம் கிராமத்தில் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டு வீடுகள் கட்டி முடிக்காத 32 பயனாளிகளுக்கு சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா-மகேஸ்வரனின் பணிப்புரைக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பிரதான அமைப்பாளர் இ.சுஜிபனினால் 10 சீமெந்து பக்கெற்றுக்கள் கடந்த 16 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த நான்கு வருடத்திற்கு முன்னர்•அரசினால் வழங்கப்பட்ட நிஜாப் நிறுவன வீட்டுத் திட்டம் 31/2 இலட்சம் ரூபா நிதியில் வழங்கப்பட்டவையாகும். இந் நிதி போதாமையால் வீட்டுத் திட்டங்கள் பூரணப்படுத்தப் படாமல் அரைகுறையாக புனரமைக்கப்பட்ட வீடுகள் இனம் காணப்பட்டு இரண்டாம் கட்டமாக இச் சீமெந்து விநியோகம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் புதுமுறிப்பு கிராம சேவை உத்தியோகத்தர் மஞ்சுளா பாலகுமாரன் உள்ளிட்ட சமூக அமைப்பினர், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-309)

## பொருளாதார மத்திய நிலைய பணிகளை அடுத்த வாரமளவில் ஆரம்பிக்க முடியும்

### அமைச்சர் றிசாத் பதியுதீன் உறுதி

வவுனியா நகரில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலைய நிர்மாணப் பணிகளை அடுத்த வாரம் ஆரம்பிக்க முடியுமென அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அதன் இணைத்தலைவர்களான அமைச்சர் றிசாத் பதியுதீன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் தலைமையில் கடந்த 16 ஆம் திகதி நடைபெற்று முடிந்த பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க , அமைச்சர் ஹரிசன் ஆகியோரின் முழுமையான பங்களிப்புடன், வவுனியாவுக்கு பொருளாதார மத்திய நிலையம் ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் வவுனியா மற்றும் அதனை அண்டியுள்ள பல்வேறு பிரதேசங்களில் வாழ்கின்ற விவசாயிகள், வர்த்தகர்கள், நுகர்வோர் பயன்பெற வழி கிடைத்தது.

கடந்த மாதம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில், வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் முழுமையான ஆதரவுடன் இதனை அமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டு, அதற்கான உரிய இடமும் அடையாளப்படுத்தப்பட்டது. பின்னர் இது தொடர்பில் வவுனியா அரசாங்க அதிபருக்கு உத்தியோகபூர்வ அறிவித்தலும் வழங்கப்பட்டு இருந்தபோதும், பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதில் சில தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

எனினும் இத்தடைகளைச் சரி செய்துகொள்ள முடியும் என்ற நோக்கில், இன்று (கடந்த 16 ஆம் திகதி) அதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட இருந்தன. ஆனால் இணைத்தலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன்,இந்தப் பொருளாதார மையத்தை குறித்த இடத்தில் அமைப்பதற்கான தனது முடிவை ஒருவார காலத்தில் அறிவிப்பதாகத் தெரிவித்து,கால அவகாசம் கோரினார். அதனால் அவரது முடிவு கிடைத்த பின்னர் பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க முடியுமென திடமாக நம்புகின்றோம்.

மேற்படி கூட்டத்தில் வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டுள்ள 3 ஆயிரம் மில்லியன் ரூபாவை,எந்தெந்த விடயங்களில் பயன்படுத்துவது என்பது குறித்தும் விரிவாக ஆராய்ந்தோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், வீடு இல்லாத மக்களுக்கு வீடமைத்துக் கொடுத்தல், பாதை சீரமைப்பு, நீர், மின்சாரப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தல் ஆகிய்வற்றுக்கு முன்னுரிமை வழங் குவது எனவும் முடிவெடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

## தொலைக்காட்சி போட்டியில் இரண்டாமிடம்



நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளுக்கிடையில் பசும்பால் நுகர்வை பிரபல்யப்படுத்தும் முகமாக நடத்தப்பட்ட தொலைக்காட்சி போட்டியில் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவி மோ.டிலோஜினி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வைத்து மாணவிக்கான பரிசிலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கி வைத்தார். (2-307)



மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி தேசிய பாடசாலைக்கு கல்வி அமைச்சால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தினை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் உத்தியோக பூர்வமாக திறந்து மாணவர்களது பாவனைக்கு கையளித்தார். கல்லூரி அதிபர் த.தனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆகியோரும் கல்வி அமைச்சின் தமிழ்மொழிமூல தேசிய பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிப்பாளர் எம்.முரளீதரன், மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.செபஸ்ரியன், மன்னார் கோட்டக் கல்வி அதிகாரி மரியான் கூஞ்ச ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

(படங்கள் :- பனிக்கன்குளம், மல்லாவி, பரந்தன் செய்தியாளர்கள்)

### வலம்புரி செய்தியை அடுத்து

# பராமரிப்பின்றிக் காணப்பட்ட காணியினுள் கொட்டப்பட்ட கழிவுப் பொருட்கள் அகற்றம்



வலம்புரிச் செய்தியை அடுத்து கிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவா சிறுவர் இல்லத்திற்கு அருகிலுள்ள பராமரிப்பின்றி காணப்பட்ட காணியினுள் கொட்டப்பட்டிருந்த கழிவுப் பொருட்கள் கனரக வாகனத்தின் உதவியுடன் சம்பந்தப்பட்டவர்களால் அகற்றப்பட்டு உழவு இயந்திரத்தினுள் மண் நிரப்பப்பட்டு அவ்விடத்தில் கொட்டப்படும் செயற்பாடு நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 15 ஆம் திகதி பராமரிப்பின்றி காணப்படும் காணியினுள் கொட்டப்படும் கழிவுப் பொருட்களால் துர்நாற்றம் எனும் தலைப்பில் வலம்புரிப் பத்திரிகையில் செய்தி பிரசுரிக்கப்பட்டது.

குறித்த காணியினுள் மாம் பழங்களின் கழிவுகள், விளாம் பழங்களின் கோதுகள், உணவுப் பொருட்கள் , மரக்கறிக் கழிவுகள் என்பன கறுப்பு பொலித்தீன் பைகளில் கட்டப்பட்டு நாளாந்தம் வாகனங்களின் மூலம் குறித்த காணியினுள் பரந்த அளவில் கொட்டப்படுவதாக பொது மக்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இவ்வாறு நாளாந்தம் கொட்டப்படும் கழிவுப் பொருட் களினால் ஈக்கள், புழுக்கள் அவ்விடத்தில் பெருக் கெடுப்பதால் துர்நாற்றம் வீசுவதாக அவ்வழியாகப் பயணிப்போர் தெரிவித்திருந்தனர்.

இந் நிலையில் செய்தி பிரசுரிக்கப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் துப்புரவு செய் யும் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2-271)




## 'புகைத்தல், மது பாவனையை ஒழிப்போம்' மாணவர்கள் விழிப்புணர்வு செயற்றிட்டம்

நாட்டில்அதிகரித்து வரும் புகைத்தல் பாவனையாளர்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மு/முறிகண்டி இந்துவித்தியாலயம் முன்பாக பேரணியாக திரண்ட மாணவர்களும், மக்களும் பல்வேறு கோசங்கள் அடங்கிய பதாதைகளையும் ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புகைத்தல் மற்றும் பாவனையை முற்றாக ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் முல்லைத்தீவு முறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்கள், அப்பகுதி அமைப்புக்கள் ஆகியன இணைந்து விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் முன்னெடுத்திருந்தனர்.

புகைத்தல் மற்றும் மதுவுக்கெதிரான கண்டனங்களை முன்வைத்தவாறு மு/திரு முறிகண்டி இந்து வித்தியாலயத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமான பேரணி திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய சந்திவரை சென்று அங்கு மதுபானப் போத் தலை எரியூட்டிஎதிர்ப்புவெளியிட்டதோடு சூழல் பாதுகாப்பை மேம்படுத்தும் முகமாக மரநடுகையும் இடம்பெற்றது.(2-15-281)

## தந்தையர் தினம் வவுனியாவில் இன்று

தமிழ் விருட்சம் அமைப்பு மற்றும் குடியிருப்பு கிராம அபிவிருத்தி சங்கம் ஏற்பாடு செய்துள்ள தந்தையர் தின நிகழ்வு, இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா குடியிருப்பு சிறுவர் பூங்காவில் நடைபெறும்.


இந் நிகழ்வில், தந்தையர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான போட்டி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வுக்கு வன்னி பட்டறை பிரதான அனுசரணை வழங்குவதுடன் வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கம் ஊடக அனுசரணையை வழங்குகின்றது. (2

## 152 காணி உரிமையாளர்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்

காணிக் கச்சேரி மூலம் தகுதியான 152 காணி உரிமையாளர்களிற்கான காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் ஒட்டு சுட்டான் பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள தச்சடம்பன் கிராம அலுவலர் பிரிவில் வைத்து கிராம உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அநிருத்தனன் கலந்து கொண்டு காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கிவைத்தார். அத்துடன் இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் உரையாற்றுகை யில், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காணிகளை யாரும் எவருக்கும் விற்க முடியாது. அதேபோல் எவரேனும் இக் காணிகளை கொள்வனவு செய்ய முடியாது என வலியுறுத்திக் கூறியதுடன் காணி அனு மதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட அனைவரும் தத்தமது காணிகளை உரிய முறையில் பராமரிக்க வேண்டும். இவ்வாறு பராமரிக்கும் காணிகளை எதிர் வரும் காலங்களில் உரியவர்களுக்கே நன்கொடையாக வழங்குவதற்குரிய வழிவகைகளை பிரதேச செயலகம் மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார்.(2-302)

## ஏ-9 வீதியில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் கால்நடைகள்



கிளிநொச்சி ஏ-9 வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாக நடமாடித்திரியும் கால்நடைகளைக் கட்டுப்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அத்துடன் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு உயிராபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (2-298)

## மழலைகள் விளையாட்டு நிகழ்வு

(சோலைநகர் )

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தைச் சேர்ந்த 15 முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் கோட்ட மட்ட மழலைகள் விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளி/ இல-01 தருமபுரம் அ.த.க.பாடசாலையில் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. விந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப் பாளர் க. முருகவேள் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக ஜப்பான் தொண்டர் முன்பள்ளி ஆசிரியர் செல்வி. யயோய் நகமுறா, கௌரவ் விருந்தினர்களாக பெற்றோர், ஆசிரியர்கள் , நலன் விரும்பிகள் , மழலைகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-309)



மு/முறிகண்டி இந்து வித்தியாலய மாணவர்கள், அப் பகுதி அமைப்புக்கள் ஆகியன இணைந்து புகைத்தல் பாவனையை முற்றாக நீக்குவோம் எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்ததைப் படங்களில் காணலாம்.(படங்கள்:-மல்லாவி,பனிக்கன்குளம் செய்தியாளர்.)

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு தேர்த்திருவிழா



### தேரேறி வரும் தாயே தேற்றிடுவாய்

நயினையிலே இன்று நீ தேரேறியே
நம்பினோரை நலமடைய வைத்திடுவாயே!
பயனுடைய மனிதப் பிறவியினை நன்றாக
பயனடைய நல்லாட்சி புரிய வைப்பாய்
கலை கலாசாரம் நற்பண்புகள் நன்றாக மனிதத்தில்
கலந்திடவே கடைக்கண்ணருள்வாய் நாகபூஷணியே
சலிக்காது உன் தேர் வடம் பிடித்திடவென
சடுதியாக வருகின்றார்கள் உன் பக்தர்கள் தாயே

தெல்லியூர்த்தேவி

### வல்லமை தாருமம்மா நாகபூஷணியே

நாகினியே நாகபூஷணியே
நல்லருள் தாருமம்மா அன்னைபூரணியே
அகிலத்தையாளும் நாயகியே நாகபூஷணியே
அமுத சுரபியே அன்னபூரணியே
தேரேறி வருகின்ற பூஷணியே
நாதியற்ற எமை நல்லருளால் காத்திடம்மா
எம்தேசம் எழுச்சி கொள்ள நீ தேரேறி பவனிவர வேண்டுமம்மா

த.தர்சன் -மட்டுவில் மத்தி

### பவனி வரும் நாகபூஷணியே

தேரேறி வருகின்ற நாயகியே நாகபூஷணியே
பாராளும் பார்வதியே
அகிலத்து நாயகியே அன்னை அம்பிகையே
அன்னபூரணியே அமுத சுரபியே
தமிழரின் தாயானவளே
எம்மினத்தை காத்திடம்மா
தேரேறி வருகின்ற கைலாய நாயகியே
எம் துயரெல்லாம் களைந்திடம்மா
பாரெங்கும் பகைவிரட்ட
நீ தேரேறி பவனி வர வேணுமம்மா

த.அமலா
மீசாலை

### அருள்வாய் நயினை அம்மா

நாடி வந்தோம் ஓடிவந்தோம் அம்மா
எம் பழவினைகள் போக்கிடு
பாடி வந்தோம் ஆடி வந்தோம் அம்மா
எம் பந்தவினை போக்கிவிடு
தெம்பி நின்றோம் தேடிநின்றோம் அம்மா
எம் வாழ்வில் நிம்மதியை தந்துவிட


பி.ராசன்- நல்லூர்

### தேரேறி வாருமம்மா

தேரேறி வாருமம்மா பாரினைக் காத்திடவே
தேரேறி வாருமம்மா தீமைகள் நீங்கிடவே
அநியாயம் அழிந்திட தேரேறி வந்திடுவீர்
அடியவர் குறைதீர்த்திட ஓடோடி வந்திடுவீர்

கு.யசிதீபன்- அரியாலை

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு தேர்த்திருவிழா



### நயினைத்தாய் தேரில் வருகின்றாள்

தேரில் எழுகின்றாள் எம் நயினை தேவி வருகின்றாள்
பாரின் குறை போக்க எமை நாடி வருகின்றாள்
எண்ணியவர் வினை தீர்க்க ஆடி வருகின்றாள்
அண்டமெங்கும் அருள்புரிய அசைந்து வருகின்றாள்
ஆர்ப்பரிக்கும் பக்தர்களை ஆள வருகின்றாள்
போர்ப்பளுவை சுமந்தவர்க்கு அருள வருகின்றாள்
தேடியழுபவரைக் காண ரதத்தில் ஓடி வருகின்றாள்
கூடிய பக்தர் கவலையொழிக்க தாயே வருகின்றாள்

இணுவை-நாரணி

### வாருங்கள் வடம் பிடிக்க



வேப்பமரச்சோலையிலே
வெண்மணல் பரப்பினிலே
தோப்பான தென்னை மரம்
வீதியிலே தேரோட்டம்
ஆதிசக்தி தேரோட்டம்
வாருங்கள் வடம் பிடிக்க
சேருங்கள் வடம்பிடிக்க
சேர்ந்த துயர் ஓடிவிடும்
வாழ்வின் இன்பம் கூடிவிடும்

திருமதி. ஜெ.கந்தவேள்
கொக்குவில்

### தேரேறி வாருமம்மா

தேவி தயாபரியே தேரேறி வாருமம்மா
பாவிகளை அழித்துப் பாலகரைக் காத்திடம்மா
சேவிக்கும் செந்தமிழர் சிறுமைகள் நீக்கிடம்மா
நாவினால் நாம்பாட நல்லருள் தந்திடம்மா
மூவினமும் வழிபடும் முத்தரசி நாகம்மா
கூவியே கும்பிடுவோர் குறைகளைக் களைந்திடம்மா
மேவியே அலைகள் சூழ மேதினியில் வாருமம்மா
தீவிலுறை திருத்தாயே தேரேறி வாருமம்மா

தென்கோவை விசாகஜன்

### குறைதீர்க்க வாருமம்மா

அலைகடல் நடுவே அருளின் வடிவாய்
வீற்றிருக்கும் அலைமகளே!
நயினையிலே இருப்பிடம் கொண்டாய்!
நாகத்தினையே துணையெனக் கொண்டாய்
அனுதினம் உன்னை நினைத்திட்டால்
நீர்த்திவலை வந்திடுமோ கண்களிலே
தேரேறி வரும் தேவியே
பக்தர்களின் குறை தீர்ப்பாய் நீயே

ஜெ.சிந்து-வேலணை-02

### நல்வரம் தந்திடம்மா



பக்தர்கள் சூழ்ந்து சூழ்ந்து வர
பரமசிவனோடு பணிவாக உட்கார்ந்து
பொன்னிறத் தேரில் பொலிவாக
பொறுமையுடன் அருள் சுரக்கும்
(அபிராமியே)
நாதஸ்வர மேளதாளம் ஒலிக்க
நாவுக்கரசி நயன நடை பயில
நேர்த்திக் கடன்களை நிம்மதியாய்
(நிறைவேற்ற)
நேர்வழி காட்டிவிட்டாள் அன்னை அபிராமி

பா.கலாதேவி-சண்டிலிப்பாய்

# Obtain a postgraduate qualification and
# Get exemptions for your MBA

PEARSON edexcel
advancing learning, changing lives

# PGD
## Post Graduate Diploma
### Strategic Management & Leadership
Duration: 6 Months

Delivered By PhD Qualified Academic Staff

Group Discount Available UP TO RS. 20,000



**Programme Stucutre**
- Developing strategic Managemnet & Leadership Skills
- Professional Development for strategic Management
- Strategic Change Management
- Strategic Marketing Management
- Strategic Human Resources Management
- Strategic Planing

UGC RECOGNIZED

Your progression Path

PGD 6 Months L7 Diploma → MBA 6 Months 2nd Semester → MBA 6 Months 3rd Semester → Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY MBA Master in Business Administration

ESOFT
*Shaping Lives, Creating Futures.*

ESOFT METRO CAMPUS Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142

# AFTER O/L or A/L



PEARSON edexcel
advancing learning, changing lives

# HND

NEW BATCHES
24 June 2016
27 June 2016
@ 9:00am

PEARSON edexcel
advancing learning, changing lives

## BTEC HND Computing & Systems Development

**Highlights in Computing**
- Computer Systems
- Programming Languages (C++, C#.net, Asp.net, Java)
- Web Application Development
- Object Oriented Programming
- Network Technology
- Knowledge based systems

M.Sc MBA
Degree - Final Year
B.A(Hons)Business Administration
B.Eng. (Hons) in Software Engineering
B.Sc. (Hons) in Computing
HND in Computing & Systems Development in Business Management
OL's / AL's / DiTEC

## BTEC HND Business Management

**Highlights in B.Managment**
- Human Resource Management
- Business Environment
- Organizational Behaviour
- Marketing Management
- Financial Management
- Business Law
- Quality Management

Success to Degree
Final Year
BEng (Hons) in Software Engineering
BSc (Hons) in Computing
BA (Hons) in Business Administration
LONDON METROPOLITAN UNIVERSITY


Success to Degree
Final Year
BA (Hons) in Business Administration
LONDON METROPOLITAN UNIVERSITY

ESOFT
*Shaping Lives, Creating Futures.*

ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna |
Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142

HOTLINE 077 309 9 308

www.esoft.lk



# நயினை நாகபூஷணி அம்மன் இரதோற்சவ சிறப்பு மலர்


நயினை நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்

THE SASIKA DRIVING SCHOOL

# த சசிகா. லேணர்ஸ்

## THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

DS No - 882




சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்

- ✓ தேசிய அடையாள அட்டை
- ✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப் பிரதி)
- ✓ திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி - பெண்களுக்கு மட்டும்)
- ✓ மருந்துவச் சான்றிதழ் (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
- ✓ சாரதி அனுமதிப் பத்திரம் (வைத்திருந்தால்)

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

- விண்ணப்பதாரி கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
- எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.

### தலைமைக் காரியாலயம்

இல. 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 021 221 7678, 077 614 0361
HOTLINE - 077 722 6247
SasikaLearners
sasikadrivingschool@gmail.com

### கிளை நிறுவனங்கள்:

**வேலணை**
வங்களாவடிச் சந்தி, வேலணை.
021 221 5472
070 301 3012

**சங்கானை**
ஒடக்கரை வீதி, சங்கானை.
021 225 1664
070 301 3016



# அம்ச மஹால்



அரங்கேற்றம், கூட்டம், ஒன்றுகூடல், திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்த நாள் மற்றும் பொது வைபவங்களுக்கும்



- விசாலமான பெரிய மண்டபம்
- சாப்பாட்டு வசதிகள்.
- வாகனம் விடுவதற்கான வசதிகள்.
- வீடுகளுக்கு தேவையான உணவுகள் தயாரித்து ஓடருக்கு கொடுக்கப்படும்.

0777 030 418
ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(பிடாரி கோவிலுக்கு அருகில்)



# MEGA SALE மாபெரும் மலிவு விற்பனை

தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்

ஏழ்கடல் சூழ் நயினையம்பதியிலே ஏழிலோடு
வீற்றிருக்கும் நர்த்தனியே! நாக பூசனியே

- ❖ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Glass Coffee Table+ Table Fan) இலவசம்.
- ❖ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை இலவசம்.
- ❖ நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Damro Door களுடனும் ஒரு Door Lock இலவசம்.
- ❖ Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Rice Cookers ஐ அதிகூடிய விலைக்கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ 32", 40", 50" LED TV களுடன் ஒரு DVD Player இலவசம்.
- ❖ 25000/= க்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- ❖ Damro, Piyestra, Nilkamal ஆகிய பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

Gas Cooker 20% தள்ளுபடி



## JAMUNA FURNITURE

181, Navalar Road, Jaffna.
T.P: 021 222 1092, 077 757 4776





# ஆயிரங்கள் கடந்த பதிவுகள்

நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனை




உங்கள்

## கல்யாணி மாலை

உலகில் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்

நிலைய நிர்வாக செலவிற்காக பதிவுக்கட்டணம் 1000 ரூபாய் மட்டும்

தொடர்பு - கல்யாணமாலை இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com



# நயினை நாகபூஷணி அம்மன் இரதோற்சவ சிறப்பு மலர்




## சாரங்கா
### நகை மாடம்

இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 6972, தொலைநகல்: 021 222 8869



## Saranka
### Nakai Maadam

Sharanga Money Exchange (pvt) Ltd.

No.157/1, Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 6972, Fax: 021 222 8869.
Email:sarankajewllers@yahoo.com
Web: www.saarangajewellers.com

நயினை பதியுறையும் நாயகியே பூரணியே
நம்பியுன்னை வந்துள்ளோம் நலம்
நல்கி அருள்புரிவாய்

## தவாஸ் அண்ட் சண்ஸ்
## தச்சுத் தொழிற்சாலை

## Thavas And Sons
### (Carpentry Work Shop)

ஏழ்கடல் சூழ் நயினையம்பதியிலே
எழிலோடு வீற்றிருக்கும்
நர்த்தனியே ! நாகபூஷணியே



கதவு, யன்னல், நிலைகள், கூரை வேலைகள், மரச்சிற்ப வேலைகள் பன்றி கபேட் (Pantry Cupboard) வேலைகள் மற்றும் வீட்டு வர்ண வேலைகள் (House Painting) நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்

பாரதிலேன்,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர் :
தவராசா காண்டீபன்
T.PHONE NO :
0771387651
0766201231

BLOOMING BUDS
The Wisdom of Children

## BLOOMING BUDS
## International E CAMPUS

PV 94034

### ENGLISH MEDIUM TEACHER TRAINING DIPLOMA PROGRAMME
### பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்

## 12 Months

### தகைமைகள்

- க.பொ.த. (சா/த) 6 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5 நாட்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
- போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 8.30-5.00 வரை வேலைநாட்களாகும்.

### மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கணனி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா , சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா , சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்

ஐந்து வருடங்களாய் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுனர் ஆசிரியர்களை பயிற்றுவித்து எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைப்பாடுகள் நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்

பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் 34,000 ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிகடன் ஏற்பாடு செய்து தரப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது )


உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01-11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி officer.
Blooming
Buds International *E Campus*
Teacher Training School *.178,*
Thavadi Rd , Suthumalai south
Manipay
021 225 6641. 071 566 9641

*378/3, Nelson Building*
*Kandy Road, Dhulukama,*
*Kalaniya. 011 305 4641*

No.390/2/1, Baseline Road
Dematagoda
Colombo- 9 . T.P : 011 267 7641
071-5669641,077-1529731

*(C-4614)* ***www. blooming budse campus.com***



# நயினை நாகபூஷணி அம்மன் இரதோற்சவ சிறப்பு மலர்




LONDON METROPOLITAN COLLEGE

புதிய பிரிவுகள் ஆரம்பம்

IELTS LIFE SKILLS (A1)

Speaking & listening
Duration : 48 hours (week & week ends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப settlement விசாக்களுக்கான IELTS A1 புதிய பாடத்திட்டம் தற்போது கற்பிக்கப்படும்.

- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- இதுவரை பயின்ற அனைத்து மாணவர்களுமே சித்தி அடைந்துள்ளனர்.


IELTS

Academic & General
Duration : 48 hours (week & week ends)
மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் விசேட கவனிப்பு முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
IELTS 5.5 - 6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம் ஒரே தரத்திலேயே தேவையான Band இனை பெற்றுக்கொள்ளலாம்.
லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகள் வழங்கப்டும்.

அனைத்து கற்கை நெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்,தவணை அடிப்படையிலான மிகக் குறைந்த கட்டணம்.

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.

HOTLINE : 021 753 8395

## தாயே தரிசனந் தாராயோ...!

தாயே என்று கலங்கி அழுதால் போதும்
தயை கூர்ந்தருளும் கருணா கரியே
வாயாரப்பாடி உன்னை வரம்பல கேட்கின்றேன்
- உன்
சேயாக நினைத்தென்னை காராயோ தாயவளே.

த.தவமணி - திருநெல்வேலி

## எம் குறை தீர்ப்பாய் அம்மா...!

ஏழ்கடல் சூழ் நயினையம்பதியிலே
எழிலோடு வீற்றிருக்கும்
நர்த்தனியே! நாகபூஷணியே!
நலம் யாவும் தருபவளே
அகிலம் ஏழும் காப்பவளே
நாயகியே ஈஸ்வரியே
அன்னையே உன் சேய் நான்
உன்பாதம் பணிகின்றேன். தாயே
எம் குறையாவும் தீர்பாய் அம்மா.

கைதடியூர் - சு.கண்ணன்

## அகர வரிசையில் அன்னை...!

அலைகடலின் ஓரத்திலே
ஆளவந்த நாயகியே!
இலங்கைத் திருநாட்டினிலே
ஈடில்லா ஜோதி நீயே!

உள்ளமெல்லாம் நிறைந்திருப்பாய்
ஊமைகளைப் பேசவைப்பாய்
எல்லையில்லா மாந்தர்களின்
ஏக்கங்களைத் தீர்த்து வைப்பாய்!

ஐந்து தலை நாகத்திலே!
அசைந்தாடி வாருமம்மா!
ஒற்றுமையாய் வாழவைப்பாய்
ஓங்கார நாயகியே!

திருமதி.உ.பூமணி - வடலியூர்


எரிக்கணேஷ்

உன் அருள் ஆட்சி என்றும்
ஓயாது தாயே

மூக்குக் கண்ணாடியகம்
நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை
மிகவும் மலிவான
விலையில் பெற்றுக் கொள்ள
தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 222 2486
கிளைகள்:-
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல. 105, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.
021 224 0255,021 224 0255



இல. 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில். 021 222 5233

Kiruba Computer Forms

Jaffna Road, Manipay.

Thermal Paper
NCR 2Ply, 3Ply
IWB Paper
Bar Code Sticker (Any Size)
Bar Code Printer Ribbon

all kind of Roll papers, Stickers and Ribbons...

Contact us
076 985 6140
077 248 7082
kiruba20152@gmail.com




நயினை நாகபூஷணி அம்மன் இரதோற்சவ சிறப்பு மலர்



சித்தா
றெஜிபோம்
டிசைனிங்
அன்ட் ஸ்கிறீன்
பிறிண்டிங்
Wedding
Seelan
Rusitha
இல. 49 A, அச்சுக்கூட லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
T.P : 075 544 5901


அம்பாள்
பல்பொருள் வாணிபம்
Ampal
Multi Shop
254, முத்துமாரியம்மன் வீதி,
உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.
தொ.பே:- 0775352260
நயினை பதியுறையும் நாயகியே பூரணியே
நம்பியுன்னை வந்துள்ளோம் நலம்
நல்கி அருள்புரிவாய்


உன் அருள் ஆட்சி என்றும் ஓயாது தாயே
ஒளீர் சசி அலுமினியபிற்றிங் அன் படமாடம்
Olier Sasi Aluminum Fitting & Padamadam
• கிலேடிங்சீற் • ஜீப்சன் • ரெம்பர் கிலாஸ் • டீறோபொக்ஸ் பிறேம்
போன்றனவற்றை சிறந்த முறையில் செய்து
கொடுக்கப்படும்.
கே.கே.எஸ்.றோட்,
மல்லாகம்
முல்லைத்தீவு,
முள்ளியவளை.
முல்லை வீதி,
உடையார் கட்டு.
T.P:- 077 104 1582


இசைக்குமரன் பல்பொருள் வாணிபம்
ESAIKKUMARAN MULTI SHOP
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்
கொள்ளலாம்.
இல.66,
திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.
No:66
Thirunagar North,
Kilinochchi.
TP: 076 625 3024


அன்பொளி கல்வியகம்
சின்ன விழி அசைத்து சிரித்துவரும்
சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வி
ஊட்டிடுவோம்.
இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

# நீராவியடி- யா

# ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் இர



### முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.நீராவியடிப் பகுதியில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீஜெயவீரகத்தி விநாயகர் இன்று அழகிய தேரேறி தனது பக்தர்களின் ஆணவ மலங்களை அழித்து அருள்பாலிப்பதற்காக வீதியுலா வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் இப்பகுதிவாழ் மக்களுக்கு எனது வாழ்த்துச்செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இந்தியாவில் இருந்து பூதர் எனப்படும் சைவ பக்தர் திருமறைக்காட்டில் உறையும் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானை தம்முடன் எடுத்துக்கொண்டு வேதாரணியம் வழியாக இலங்கைக்கு வந்து நீராவியடிப் பகுதியில் குடியேறியதுடன் ஒரு சிறிய கொட்டில் அமைத்து அதில் விநாயகப் பெருமானின் சிலையை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்ததாக வரலாறு.

அக்காலத்திலேயே அவர் இந்தியாவின் வேதாரணியம் பகுதியில் உள்ள சைவக்குருக்கள்மாரை நீராவியடிப் பகுதிக்கு வரவழைத்து அவர்கள் வசதியாகத் தங்கியிருந்து சமயதீட்சைகள் செய்வதற்கும் அபரக்கிரியை, அந்தியேட்டிக்கிரியைகள் செய்வதற்கும் மற்றும் சைவசமய பணிகள் புரிவதற்கும் குருக்கள் மடம் ஒன்றை அமைத்து அதில் சைவக்குருக்கள்மாரை குடியேற்றி ஒரு சைவப் பாரம்பரியத்துடன் கூடிய சமூகமொன்றை அங்கே உருவாக்கியிருந்தார்.

அத்துணை சிறப்புப்பெற்ற ஸ்ரீஜெயவீரகத்தி விநாயகர் வண்ணத் தேரேறி வீதியுலாவரும் திருக்கோலம் காணக்கிடைக்காதது.இவ்வாலயத்தை நோக்கி அலை அலையாகத் திரண்டு வரும் அடியவர்கள் தேர் வடம் பற்றி இழுக்க அசைந்தாடி அருள்பாலித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகரின் அருட்கடாட்சம் அவர் தம் பக்தர்கள் அனைவருக்கும் கிட்டுவதாக.

**சி.வி.விக்னேஸ்வரன், முதலமைச்சர்,**
**வடமாகாண சபை,யாழ்ப்பாணம்.**



### ஆசிச்செய்தி

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்த சமயம் சைவ சமயமாகும். அவ்வாறே எமது மொழியாம் தமிழுமாகுமென்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை. சைவசமயத்தின் உட்பிரிவுகளாகக் காணபத்தியம், சைவம், சாக்தம், கௌமாரம்,வைணவம், சௌரம் என அறுவகை வழிபாடுகள் இந்தியப் பெருங்கண்டத்தில் பண்டுதொட்டுப் பரவியுள்ளமையைக் காணலாம். காணாபத்தியமென்பது கணபதியை முழுமுதலாகக் கொண்டு வழிபாடியற்றும் சமய நெறியாகும்.

சிந்துவெளி நாகரிகத்தில் ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சியின்போது வெளிப்பட்ட புராதன சின்னங்களில் கணபதியின் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இருக்கு வேதத்தில் விநாயகரைக் கணபதி என்றே குறிப்பிடப்பட்டு இருக்கின்றமையை அவதானிக்கலாம். தேவார, புராணங்களில்கூட கணபதியெனவே விநாயகர் அழைக்கப்படுகின்றார். கணங்களுக்கெல்லாம் அதிபதியக உள்ளதனால் கணபதி எனப் பெயர் பெற்றார்.

சைவசமயத்தில் விநாயகரே முதல் வழிபாட்டைப் பெறுகிறார். இதன் காரணமாகவே அறுவகைச் சமய நெறிகளிலும் காணாபத்தியம் முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகத்தின் வெளிப்பாடான சைவசமய நெறிமுறைகள் இந்தியப் பெருங்கண்டத்திலிருந்து இலங்கை, தாய்லாந்து, கம்போடியா, பர்மா, இந்தோனேசியா, முதலாம் தென்கிழக்காசியா முழுவதும் பண்டு தொட்டு பரவியிருந்தமையைக் காணலாம். அந்த வகையில் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் நீராவிப் பகுதியில் குடியேறிய பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ ஜெய நீராவியடி விநாயகர் ஆலயமும் மிகவும் புராதனமானதெனில் ஐயமெதுவுமில்லையெனலாம். படிப்படியாக காலத்திற்குக்காலம் வளர்ச்சிகள் பல கண்ட குறித்த ஆலயத்தில் வருடாந்த உற்சவம் தற்போது நடைபெறுகின்றது.

பக்தர்களின் அஞ்ஞான இருளை அகற்றி மெய்ஞ்ஞான ஒளியை வழங்குவதற்காக முதன்மை வழிபாட்டிற்குரிய தனிப்பெரும் தெய்வமான வீரகத்தி விநாயகன் தேரேறி வருகின்ற இந்தநாளில் நாம் விநாயகரைத் தொழுது எமது பிறவிப் பிணியை போக்கிக்கொள்வோமாக.இன்றைய இந்நன்னாளில் ஸ்ரீஜெயநீராவியடி வீரகத்தி விநாயகர் அனைவருக்கும் நோயற்ற நீண்ட வாழ்வையும் இஷ்ட சித்திகளையும் வழங்குமாறுவேண்டி அவர் தாள் பணிந்து ஆசி கூறி வாழ்த்தி அமைகின்றேன்.

**சிவஸ்ரீ .க.கிருபானந்தக்குருக்கள்**
**தலைவர், அகில இலங்கை சைவக்குருமார்**
**அர்ச்சகர் சபை, யாழ்ப்பாணம்.**



பழம்பெருமை வாய்ந்த சிவபூமியான யாழ்ப்பாணம் எனும் திருநகரில் நீர்வாவியடி எனும் திருத்தலத்தில் கருணையே வடிவான சிவநந்தன் அத்திமுகத்தோன் ஆனந்தமாய் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கிறார். வெற்றியெல்லாம் தரும் வேழமுகத்தோன் வினைகளை எல்லாம் வேரறுத்து வேண்டியோர்க்கு வேண்டுவன எல்லாம் வழங்கி வீற்றிருந்தருளும் நற்பதியாம் நீர்வாவியடித் திருத்தலத்தில் ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகர் எனும் திருநாமம் கொண்டு எழுந்தருளி எம்மோடு உறைந்து எமைக்காத்து அருளுவது எம் முன்வினைப்புண்ணியமேயாம்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையின் ஆதிமுதற் குருவான எமது குருநாதர் அருட்திரு கடையிற்சுவாமிகள் தினமும் நீர்வாவியடி நாயகனை தரிசித்து வணங்கி அருளாசிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பல சித்தர் பெருமக்கள் பணிந்து வணங்கி அருள் பெற்ற எம் திருத்தல நாயகன் திருவிழா கோலம்பூண்டு தேரேறி எமை ஆட்கொள்ளவரும் நன்னாளில்,வேழமுகத்து விநாயகனின் பாதம் பணிந்து எம் வாழ்வினை உய்விப்போமாக.

**ஓம் தத்புருஷாய வித்மஹே**
**வக்ர துண்டாய தீமஹி**
**தன்னோ தந்தி பிரசோதயாத்**
**ஓம் சாந்தி**
**கடையிற்சுவாமிகள் கோவில் சிவனடியார்கள்.**



### ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கிறையில் *பருத்திப்புலம்* எனும் காணியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஜெய நீராவி வீரகத்திப் பிள்ளையாருக்கு வருடாந்த மகோற்சவம் நடைபெற்றுக் கொண்டிருப்பதறிந்து மகிழ்கிறேன்.

ஆலயங்களில் வழிபாடு சிறப்பாகவும் நியதிப்படியும் நடைபெறுவது நாடும் சமூகமும் செழிப்படைய அவசியமாகும். ஆலயங்கள் சமூகத்திற்கு வழிகாட்டுபவையாக இருப்பது அவசியம். சமய சடங்குகளை செய்வதற்கு ***நீராவிக் குருக்கள் மடம்*** பரம்பரை வைத்தியம் செய்வதற்கு வைத்தியர் தங்கியிருப்பதற்கு இட ஒதுக்கீடு செய்தமை, குளம் வெட்டியது போன்று சமூகப் பணிகள் ஆலயத்தினால் முன்னர் செய்யப்பட்டிருப்பது மகிழ்வான செயற்பாடாகும்.

இனிவரும் காலங்களில் சமூக ஒழுக்கம் பேணுவதற்கு *சமய வாழ்வு* இன்றியமையாத ஒன்றாகும். இப்பணியை ஆலயங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும் எனப் பிரார்த்தனை செய்து தோசம் நீக்கும் விநாயகர் அனைவருக்கும் அமைதியான சூழலில் வாழ்வதற்கு வழிகாட்டுவார் என்றும் ஆழ்ந்த நம்பிக்கையுடன் உற்சவம் இனிது நடைபெற எனது நல்வாழ்த்துக்களைக் கூறுவதில் மனமகிழ்வடைகிறேன்.

**டக்ளஸ் தேவானந்தா, பா.உ.**
**செயலாளர் நாயகம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**
**(ஈபிடிபி)**



### ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் மகோற்சவத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம் சிறப்பாக நடைபெறுவது குறித்து மிக மகிழ்ச்சியடைகின்றோம். மகோற்சவங்கள் இறைவனின் பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கின்றன. இதில் இரதோற்சவம் அழித்தல் தொழிலைக் குறித்து நிற்கின்றது. அழித்தல் என்று கூறப்படுவது எதனை? யார் அழிப்பது? இவ் உற்சவம் அதி உன்னதமாக, சிறப்பாக நடத்தப்படுவதன் நோக்கம் என்ன? மனிதர் உலகில் படைக்கப்பட்டு காத்து வளர்க்கப்படும்போது அவர்களுடன் ஆணவமும் இணைந்து வளர்கின்றது. இவ் ஆணவம் இறைவனால் அழிக்கப்படுவதையே இரதோற்சவம் குறிக்கின்றது. மனிதரிடையே உள்ள தீய குணங்களுக்கெல்லாம் காரணம் ஆணவமே. எனவே இந்நன்னாளில் இவ் உற்சவத்தில் பங்கு பற்றும் அனைவரும் எம்மிடம் உள்ள குறைந்தது ஒரு தீய குணத்தை யாவது இன்றிலிருந்து விட்டுவிடுவதாக சங்கல்பம் செய்து கொள்வோம். இவ்வாறு இவற்றின் விளக்கங்களை அறிந்து கொண்டு உற்சவங்களை அனுஷ்டிப்பது சிறப்பாகும்.

உற்சவம் சிறப்பாக நடைபெறவும் மலர் சிறப்பாக வெளிவரவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திப்போம்.

**வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க.**
**இறைபணியில்**
**பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள்,**
**வதிவிட ஆச்சாரியார், சின்மயாமிஷன், யாழ்ப்பாணம்.**



சகல விக்கினங்களையும் நீக்கி சகல சௌபாக்கியங்களையும் அருளும் ஜெயவீரகத்தி விநாயகர் தேரேறி திருவுலாவரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். தேர்த்திருவிழா சம்ஹாரத்தைக் குறிக்கும் உற்சவமாகும். மனிதனை ஆட்டிப் படைக்கும் அசுரனாகிய ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் தன்னுடைய அருட்பார்வையால் அகற்றி மனிதனை மனிதனாக மாற்றுவதோடு நாட்டில் இடம்பெறும் வன்முறைகளையும் தீமைகளையும் இல்லாதொழிக்கவும் விநாயகப் பெருமான் தேரேறி வலம் வருகின்றார். ஜெய என்றால் வெற்றி எனப் பொருள்படும். ஆகவே எல்லோர் வாழ்விலும் வெற்றி விநாயகப் பெருமான் வெற்றியைக் கொடுத்து காத்தருள்வார் என்பதில் ஐயமில்லை.

***வீரகத்தி விநாயகனைத் தொழுதால்***
***வினைகள் எல்லாம் விரைந்தோடும்***
**பிரதம குரு கிரியாகலாபமணி**
**சிவஸ்ரீ. ச. சந்திரகுமாரக்குருக்கள்**




### இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் அவர்களின் ஆசிகள்


கர்ண பரம்பரைச் செய்திகளின் படி தென்னிந்தியா காரைக்காலில் இருந்து வந்து குடியேறிய வணிகரும் செல்வந்தருமான பூதர் என்பவரால் ஸ்தாபிதம் செய்யப்பட்டு ஆரம்ப காலத்தில் ஓலைக்குடிசையில் அமர்ந்தருளிய நீராவியடி ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகப் பெருமானின் துர்முகி வருட மகோற்சவ தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது.

ஓலையால் ஆரம்ப காலத்தில் இருந்த ஆலயம் தீக்கிரையாக்கப்பட்டாலும் விநாயகப் பெருமானுக்கு எத்தகைய விக்கினங்களும் இல்லாமல் இறைவன் காட்சி கொடுத்தான். முதலியார் பரம்பரையினரால் பராமரிக்கப்பட்டு வ ரும் ஆலயம் மீண்டும் புதுப்பொலிவுடன் ஆகம சாஸ்திர விதிமுறைகளுக்கமைவாக இராஜகோபுரத்துடன் அமைந்திருப்பது எல்லாம் விநாயகர் திருவருள் என்பதில் ஐயம் எதுவுமில்லை. பரம்பரை நம்பிக்கை பொறுப்பாளராக தற்போது ஆலயத்தை பரிபாலனம் செய்யும் ரகுநாதமுதலியார் வம்சம் சிறப்பான பாரம்பரியங்களையுடைய சிவாச்சாரியார் விநாயகர் அடியவரின் உதவியுடன் இணைந்து மகோற்சவ பெருவிழா சிறப்புற நடத்திவருவதும் பாராட்டப்படவேண்டும்.

சிறப்பானதொரு ஆலயத்தில் இன்று இரதோற்சவப் பெருவிழா நடைபெறுகின்றது. ஆணவம், கன்மம், மாயை என்கின்ற இருளில் மூழ்கியுள்ள மக்களின் மலங்களை நீக்கி ஆன்ம ஈடேற்றத்தில் அனைவரும் ஒன்றிணையவேண்டும் என்பதை நமக்கு உணர்த்தும் பெருவிழா தேர்த்திருவிழாவாகும்.இன்று தேரேறி உலாவரும் விநாயகப்பெருமான் திருவருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திப்பதோடு நித்திய நைமித்திய சிவாச்சாரியப் பெருமக்கள், ஆலயம் சார்ந்த முதலியார் பரம்பரையினர், அடியார் பெருமக்கள் அனைவரும் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு வாழ வாழ்த்தி ஆசிகள் கிடைப்பதாகட்டும்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**
**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள்**






### ஆசிச்செய்தி

*வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்* எனும் கோட்பாட்டிற்கமைவாக யாழ். மண்ணில் நீராவி எனும் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் தன்னை நாடி வரும் அடியவர்க்கு அவர் தம் குறை களைந்து அருளாட்சி புரிந்துவரும் பெருமைக்குரியவர்.

இவ்விநாயகர் ஆலயம் தோன்றிய வரலாறும் அதன் வளர்ச்சி பற்றியும் பல அடியார்களின் சொல்லாடல் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இவற்றுடன் காலங்காலமாக இவ் ஆலய வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றும் அன்பர்களின் செயற்றிறன் மென்மேலும் பெருகவும் இன்று தேரில் ஏறி அடியார்களுக்கு அருள்புரியும் விநாயகப் பெருமானை வேண்டி எல்லா மக்களும் இன்புற்றிருக்க ஆசி கூறி அமைகிறேன்.

**செ.மோகனதாஸ், சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு**



### உப தலைவர்,அகில இலங்கை இந்து மாமன்றம், வழங்கிய ஆசிச்செய்தி.

யாழ்ப்பாணம் நீராவியடியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் திருக்கோவில் தேர்த் திருவிழாக்குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். ஒல்லாந்தர் காலத்தில் உயர் செல்வத்தோடு வாழ்ந்த ஸ்ரீமான் பூதமுதலியார் குடும்பத்தின் வழிபாட்டுக் கோவிலாகத் தோற்றம் பெற்று, இன்று பலர் வணங்கும் திருக்கோவிலாக வளர்ச்சி பெற்று விளங்கும் இவ்வாலயச் சிறப்பு தனித்துவமானது.அழகான சிற்பம் நிறைந்த கோபுரத்துடன் காட்சியளிக்கும் இவ்வாலயத்தில் பல்வேறு திருப்பணிகள் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்பட்டு முழுமையான ஆகமம் சார்ந்த கோவிலாக சிறப்புப்பெற்று விளங்குகிறது.ஸ்தாபகர் குடும்பத்தவர்களும்,அடியவர்களும் இணைந்து ஆலய மகோற்சவ பெருவிழாவை சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.எம்மண்ணில் ஆத்மீகவளம் பெருகி சமூகம் சீரிய நெறியில் வாழ்வதற்கு திருக்கோவில் வழிபாடு அவசியமாகும்.குடும்பம் குடும்பமாக கோவில் விழாக்களுக்கு மக்கள் சென்று எம் சந்ததியை சரியான பாதையில் அழைத்துச் செல்லல் காலத்தின் கட்டாய கடனாகும்.ஊர் கூடி ஆனந்தமாக வடம் பிடித்து தேர் இழுக்கும் நன்னாளை பக்திபூர்வமாக கருதி ஒன்றுபட்டு வழிபடுவோமாக என அன்புடன் வேண்டி அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர்.கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**(தலைவர்,ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்.தெல்லிப்பழை,**
**தலைவர்,சிவபூமி அறக்கட்டளை,யாழ்ப்பாணம்)**



ஆலயங்களில் இடம்பெறும் விழாக்கள் மகோற்சவம் எனப்படுகின்றன. பஞ்சகிருத்திய உண்மைகளைப் புலப்படுத்தும் இவ்விழாக்களில் இரதோற்சவம் (தேர்த்திருவிழா), சங்காரம் (அழித்தல்) உயிர்களை இளைப்பாற்றுவதற்குச் செய்யும் பேரருட் செயல் என்ற தத்துவத்தை தெரிவிக்கின்றது. தேர்த்திருவிழா சிவபெருமான் திரிபுரதகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துகின்றது.

இந்த உடம்பு ஒப்பற்ற ஒரு தேர். உயிர் உடம்பை இயக்கிக்கொண்டிருக்கின்றது. உடல் வெறும் சடம். உடலாகிய தேரை இயுக்குவது உயிர் என்பதை உடல் அறிவது இல்லை.உயிரும் உண்மையில் ஒரு தேர். உயிருக்கு உயிராகிய இறைவன் உயிராகிய தேரில் வீற்றிருந்து இயக்குகின்றான். இந்தப்பூமியும் இறைவனுக்கு ஒரு தேர். இந்த உண்மைகளை உணர்பவர்களுக்கு ஞானநிலை சிந்திக்கும்.

பிரபஞ்சத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்று அதனைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து, அருளும் இறைவனின் திருவருட் தரிசனத்தை பக்தர்கள் கண்டு இன்புறும் நாள் தேர்த்திருவிழா ஆகும்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பல்வகைத் தத்துவ நுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவை. இந்த ஆண்டும் ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகப் பெருமானைச் சித்திரத் திருத்தேரில் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று எங்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்வோமாக.

**வை.இரகுநாதமுதலியார்**
**ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளர், நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்.**

# யாழ்ப்பாணம்
# இரதோற்சவ சிறப்புமலர்-19.06.2016



## தேர்த் திருவிழா



திருமூல நாயனாரால் சிவபூமி என்று சிறப்பித்துக் கூறப்படும் ஈழமணித் திருநாட்டின் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் நீராவியடிப் பதியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ ஜெய வீரகத்திப் பெருமானிற்கு இன்று தேர்த் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது.

*வேழமுகத்து விநாய கனைத் தொழ*
*துள்ளி ஓடும் வினைகளே...*

என அருள் புரிபவனே நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் சைவ மக்கள் முதலில் வழிபடும் தெய்வம் விநாயகர் . ***வி+நாயகர்*** மேலான தலைவன் என்ற பொருளைத் தருகின்றது. தனக்கு மேல் வேறொரு தலைவன் இல்லாத ***தனி*** முதற் கடவுள் என்பது இதன் பொருள். எல்லோருக்கும் மூத்தவராக என்றும் இளையவராக, பிள்ளையாய் இருப்பதால் மூத்த பிள்ளையார் என அழைக்கப்படுகின்ற பெருமான்.

***அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே*** என்று அருணகிரிநாதர் பாடுகின்றார்.

*பிடியதன் உருவுமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்*
*கடிகன பதிவர அருளினன் மிகு கொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே*

திருநாவுக்கரசு நாயனார் கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார். இந்த வகையில் யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியில் ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் எழுந்தருளி எட்டுத்திக்கும் அருளாட்சி புரிந்து தன்னை நம்பி வருகின்ற அடியவர்களின் வினைகளை எல்லாம் அடியோடு வேரறுத்து அவர்க ளுக்கு வேண்டிய வற்றை வாரி வழங்கும் வள்ளலாக காட்சி தருகின்றார்.

***வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ...***

என்ற மணிவாசகர் பெருமானின் திருவாசகத்தில் கூறப்பட்டது போல் தன்னை விரும்பி வந்து வழிபடும் தன் அடியவர்களுக்கு என்ன என்ன வேண்டும் என்று அறிந்து வாரி வழங்குகின்றார். யாழ்ப்பாண நீராவியடிப் பகுதி ஈழத்துச் சித்தர்களில் முதன்மை சித்தர் எனப் போற் றப்படுகின்ற கடையிற் சுவாமி, யோகர் சுவாமி போன்ற மகான்கள் நடமாடிய புனிதபூமி யாக விளங்குவதோடு, மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் போன்ற பல சிறப் பம்சங்களை தன்னகத்தே கொண்ட காலத்தில் முற்பட்ட ஆலயமாகத் திகழ்கின்றது.

ஸ்ரீ ஜெய வீரகத்தி பெருமானை 250 வருடங்களுக்கு முன்னர் பரம்பரை ஆதீன கர்த்தாவாக விளங்குகின்ற இரகுநாத முதலியாரின் முன்னோர்கள் இந்தியாவின் வேதாரணியத்தில் இருந்து கொண்டு வந்து நீராவியடிப் பகுதியில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகின்றனர். ஆரம்ப காலத்தில் சிறிய ஆலயமாக இருந்த இவ் ஆலயம் இன்று சிவாகம விதிக்கமைய அமைக்கப்பட்ட ஒரு விநாயகர் ஆலயமாகத் திகழ்கின்றது. தற் போதைய ஆதீன கர்த்தாக்கள் ஆலய அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருந்து தேவைகளை அறிந்து ஆலயத்தை மிகவும் சிறப்பாக பராமரித்து வருகின்றனர்.

கடந்த 2013 ஆம் வருடம் பெருமானிற்கு புதிய சித்திரத் தேர் அமைத்து முதலாவது தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. இன்று நான்காம் வருடமாக ஸ்ரீ ஜெய வீரகத்தி பெருமானின் இரதோற்சவ விழா யாழ்.நகரத்திற்கு அண் மையில் பிறவுண் வீதி யில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சைவ பரிபாலன சபை போன்ற கல்வி நிறுவனங்கள் அமைந்துள்ள சூழலில் இன்று மிகவும் அழகான சித்திரத்தேரில் ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகப் பெருமான் தேரின் மேலே ஆரோகணித்து வருகின்ற காட்சி அற்புதக் காட்சியாகும்.

ஒவ்வொரு அடியவர் மனதிலும் உறைவிடமாகக் கொண்ட ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானை வணங்காத அடியவர்களே இல்லையென்றே கூறலாம். பெருமானின் ஆலயத்தில் காலம் தவறாத மூன்று நேரப் பூசையும் பிள்ளையார் பெருங்கதை, நவராத்திரி, திருவெம்பாவை, சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி போன்ற விரதங்கள் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

***எனக்கு வேண்டும் வரங்களை இசைப்பாய்***
***கேளாய் கணபதி***

என்ற பாரதியின் வாக்கிற்கு இணங்க எமக்கு வேண்டிய வரங்களை எல்லாம் ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகப் பெருமான் வாரி வழங்க அவர் பாதம் பணிந்து ஊர் கூடி ஒன்றுபட்டு இவ் இரதோற்சவ நாளில் வடம் பிடிப்போம் வாரீர்.

திரு.செல்லத்துரை லோகேஸ்வரன் (ஆசிரியர்) காரைநகர்

மலராக்கம்-பா.இராகுலன்

## யாழ்.மாநகரசபை
### ஆணையாளரின் ஆசிச்செய்தி



*அத்தி முகத்தவனை நித்தம்*
*நினைப்பவர்*
*சித்த மகிழ்வோடு முத்தி*
*பெறுவாரே*

தர்மத்துவீபமாம் இலங்கை மணித்தீவின் சிரம் எனப் பொலிவது யாழ்ப்பாணம். யாழில் வண்ணார் பண்ணையின் வடகிழக்கில் அமைந் தது நீராவிப்பதி. இப்புண்ணியஸ் தலப் பகுதியில் வாழ்பவர்களுக்கு தினமும் காலையில் ஓம் எனும் பிரணவ மந்திர மணி ஓசை, அவர்களது ஆன்ம ஈடேற்றத்திற்கு அடிப்படையான இறையுணர்வை வளர்த்துக் கொண்டேயிருக்கும். இத்திருக்கோவிலில் தற்போது பல உயர்வுகளைக் காண முடிகின்றது. இதில் ஒன்றாக கடந்த 09.06. 2016 ஆம் திகதி துவஜாரோகண நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்ட மகோற்சவம் மிக உயரிய முறையில் முன்னெடுக்கப்பட்டிருப்பதும் அதன் நிறைவில் விநாயகப் பெருமானின் நல்லாசியைப் பெறவிருப்பதும் நாம் அனைவரும் செய்து கொண்ட பெரும் பாக்கியமேயாகும். மகத்தான விநாயகப் பெருமானின் திருவருட்பொலிவு திக்கெட்டும் பரவி நிற்க பாரம்பரிய சம்பிரதாயங்களுடன் வருடாந்த மகோற்சவங்களை நடத்திவரும் இவ்வாலய பரிபாலன சபையினருக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அருள்மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானின் பாதம் பணிந்து நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொ.வாகீசன், ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்



மானுடர்களில் இறையருளால் ஒரு சிலர் ஆங்காங்கே கோவில்களை நிறுவுகின்றார்கள். அவ்வாறான ஒருவர் தான் தமிழ்நாடு காரைக்காலில் இருந்து வந்து குடியேறிய பூதமுதலியார் ஆவார். அவரால் குடும்ப வழிபாட்டிற்காக இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் நீராவியில் நிறுவப்பட்ட ஆலயம் இன்று ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயமாக வளர்ச்சியடைந்து பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றது. குடும்ப வழிபாட்டிற் காக நிறுவப்பட்ட ஆலயம் காலவோட்டத்தில் பொதுமக்கள் நலனுக்காக வழிவிடப்பட்டது. உரிமையாளர்களின் சமூக நலநோக்கிற்கு சான்றாக அமைந்துள்ளது. பூதமுதலியாரின் வழித்தோன்றலான வை. இரகுநாத முதலியார் தற்பொழுது பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளராக செயற் படுகின்றார். கட்டம் கட்டமாக ஆலயகட்டுமான வேலைகள் மேற்கொள் ளப்பட்டு இன்று தீர்த்தக்கேணியும் நிர்மாணிக்கப்பட்டு நிறைவான நிலையில் பூசையும் வழிபாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் தற்பொழுது பொதுமக்கள் பங்களிப்புடன் 10 நாள் வருடாந்த மகோற்சவமாக மிளிர்ந்துள்ளது இறையருளாலாகும். ஆலயம் ஏன்,?ஆலய வழிபாடு ஏன்? ஆலய வழிபாடு யாருக்காக? என்ற விடயங்களுக்கான பதிலைப் பார்ப்போம். மனிதர்களின் தூய்மை நிலை ஆளுக்காள் வேறுபடுகின்றது. அவ்வாறே ஆன்மீக அறிவும் அவரவர் பெற்றிருக்கும் அறிவு ஞானமும் வேறுபடுகின்றது.

***தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்***

உலகிலுள்ள கோடானுகோடி மக்களின் மேல் குறிப்பிட்ட இயற்கை தத்துவத்தின் உண்மையை எத்தனைபேர் அறிந்துள்ளனர். பிரபஞ்சத்தி லுள்ள அனைத்தும் அவனே என்பது தான் மேற்குறிப்பிட்ட தத்துவத்தின் உண் மைப்பொருளாகும். எனவே இறைவன் என்னுள் இருக்கின்றான் என் பதை ஐயம் திரிவுபட அறிந்த அருளாளனுக்கு ஆலய வழிபாடு அவசியமற்றது. ஏனைய எல்லோருக்கும் ஆலய வழிபாடு அவசியமாகும்.

ஆலய வழிபாட்டின்மூலம் தன்னைத்தான் தூய்மைப் படுத்தி பக்குவநிலையை அடைபவன் தானே இறைவன் என்ற பேருண்மையை உணர்ந்தவன் ஆவான். அவனுக்கு ஆலய வழிபாடு அவசியமற்றதாகி விடும். எனவே ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானின் அருளை யும் ஞானத்தையும் பெறவிரும்பி அவரைத் தொழ வருகை தரும் அனை த்து அடியார்களுக்கும் எம்பெருமானின் அருள்கிடைக்க வேண்டுமென்று எல் லாம்வல்ல சிவனை பிரார்த்தித்து இவ்வுரையை நிறைவு செய்கின்றோம். இறுதியாக இறை தொண்டாற்றும் சிவத்திரு பா.இராகுலன் இலை மறை காயாகவிருந்து ஆற்றும் இறை தொண்டுக்காக அவருக்கும் எம்பெருமான் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளராகவுள்ள வை.இரகுநாதமுதலியார் அவர்களின் இறை தொண்டு மென்மேலும் சிறப்புற்று விளங்க இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
இ.கலியுகவரதன், குருவும் நிறுவனரும் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்

## பொன்பூத்த நீராவிப் பூங்கோயில் திருத்தேர் காணவாரீர்



ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமான் இன்று பக்தர் குறை தீர்க்க திருத் தேரேறி வருகின்றான். வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாகவும் இந்திய திருநாட்டின் கீர்த்திபெறும் காரைக்கால் பட்டினத்துடன் தொடர்புடைய ஆலயமாகவும் மிளிரும் நீராவி பிள்ளையார் ஆலயம் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திற்கு முற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பல நூற்றாண்டு காலமாக மக்களை காத்தருள் புரியும் பிள்ளையாரின் கீர்த்தியை மக்களுக்கு அருளும் வகையில் ஆலய அறங்காவலர்கள் மிகச்சிறப்பாக ஆலயத்தினை பாதுகாத்து அறநெறி வழுவாது பேணி வருவது சிறப்புக்குரியதாகும்.

இப் பிள்ளையாரை வழிபாடாற்றுவதனால் எல்லா தோஷங்களும் அகலும் என்பது ஐதீகம் ஆகும். இது இவ்வாலயத்தின் அற்புத மாகும். தேரேறிவரும் இன்றைய திருநாளில் அடியார் கள் அனைவரும் பிள்ளையாரை தரிசித்து எல்லா தோஷங்களும் அகன்று சகலசெல்வயோகம் மிக்க நல்வாழ்வு வாழவாழ்த்தி ஆசிர்வதிக்கின்றேன்.

சந்நிதாச்சாரியார்
சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள்,
வீணாகானகுருபீடம், சித்தன்கேணி.

## தேரில் ஏறிவரும் ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகரைக் கைதொழுவோம்




நீராவியடிப் பதியிலே கோயில் கொண்டு அருள்பாலிக்கும் விநாயகரின் ஆலயம் 200 வருடங்களுக்கு மேற்பட்ட கால வரலாற்றை கொண்டது. வேதாரணியத்திலிருந்து இங்கு வந்து குடியேறிய வாணிபச் செட்டிய வம்சத்தவரால் இக்கோயில் நிறுவப்பட்டு பூஜிக்கப்ப்ட்டது. அக்காலத்திலேயே பெரும் பரப்பளவும் அழகும் கொண்ட கேணி அமைக்கப்பட்டமை கோயிலின் அதிசிறப்பாகும்.

ஆலய மகோற்சவத்திலே தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். விநாயகர் தோன்றியதே அசுரனை அழிப்பதற்காகும். இன்று விநாயகப் பெருமானுக்கு தேர்த்திருவிழா நடைபெறும் காட்சியானது மிகவும் அற்புதமானது. திருவிழாக்களிலே முதன்மைபெறுவது தேர்த்திருவிழாவாகும். எம்பெருமானின் அருளை பெற தேர் வடம் பிடித்திடுவோம்.

*வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்.*

குட்டித்தம்பி குடும்பத்தினர்.

## தேரேறிவரும் ஜெயவீரகத்தி விநாயகர்



தமிழ்நாடு வேதாரணியத்தில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் செல்வம், செல்வாக்குடன் பெரு நிலகிழாராக வாழ்ந்த சிறாப்பர் குடும்பத்தினரே யாழ்.நகர் நீராவியடியில் ஸ்ரீஜெயவீரகத்தி விநாயகர் ஆலய்த்தை நிறுவி அதன் அருகில் தீர்த்தக் கேணியையும் வெட்டுவித்தனர்.

ஆலயத்தில் மூன்று நேரப்பூசைகளும் கிரமமாக நடைபெற்று வந்தன.

கோவில் சிறியதாக இருந்தாலும் அது மூர்த்தி, தலம் , தீர்த்தம் ஆகிய சிறப்புக்கள் அமையப்பெற்று நீராவியடியின் மத்தியில் முதன்முதலில் அமைக்கப்பட்டிருந்தமையாலும் வீரகத்தி விநாயகரே நீராவியடி வாழ் மக்களுக்கு குலதெய்வமாகினார்.

இப்பொழுது வருடாவருடம் வீரகத்தி விநாயகர் தேரேறி வீதிவலம் வருகிறார். அவர் தங்களையும் ஆட்கொண்டருளவேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.

அனுசரணை
KUDDYTHAMBY FAMILY
68, FERRYMEAD AVENUE,
GREENFORD,
MIDDLE SEX, UK
0094778872828,
0094713833383
kuddythambyfamily
@gmail.com

# நயினை நாகபூஷணி அம்மன் இரதோற்சவ சிறப்பு மலர்

# சிவகணேசன் டெக்ஸ்டைல்ஸ்

**SIVAKANESAN TEXTILES**

Boys கண்டி காமன்ஸ் சேட் ,எமரல் சேட் வகைகள், டான்ஸ் கொஸ்ரியூம்
சாறிகள், 18 முழம் சாறி வகைகள் , யூனிபோம் சாறிகள் பெற்றுக்
கொள்ள நாடுங்கள்.

இல. 41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

**DEALERS IN TEXTILES**

No.41, Grand Bazaar, Jaffna.
T.P. 021 222 2063

ஆங்கிலத்திற்கு No.1பயிற்சி மையம்

**DMI** COMPUTER EDUCATION

ஆங்கிலத்தில் சரளமாக பேச
ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

**Spoken English**
Veta Fluency Diploma

# Foundation
# Dip in English
# Part - 1
# Part - 2

இம் மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் ....

| யாழ் நகர் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Sat, Sun 4.00 p.m.<br>Mon, Wed 9.30 a.m. | Tue, Thu<br>11.00 am. | Sat, Sun<br>8.00 a.m. | Mon, Wed,<br>11.30 a.m. | Sat, Sun<br>10.00 a.m. |

## சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

**IELTS**

# Academic # General

- Latest training materials ( BOOK 11 )
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

**IELTS Life Skills (A1,B1)**

திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

# UK இல் இருந்து கணினி மூலமான 40 online listening மாதிரி பரீட்சைகள்
# அனுபவம் வாய்ந்த பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் ஆசிரியர் குழாம்.
# இதுவரை 2200 க்கும் மேற்பட்டோர் பயின்று UK சென்றுள்ளார்கள்.
# நடைமுறைகள் தொடர்பான இலவச விளக்கங்கள்.

DMI BRITISH COUNCIL இன் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்.

## நீங்களும் ஆங்கில ஆசிரியர் ஆகலாம்

**Diploma in Teaching English**
as a Second Language

This course will introduce key ideas and principles in English Language Teaching (ELT). The course will examine different approaches to English Language Teaching. It will also examine the basic principles of teaching the four skills.

ஆங்கிலத்தில் முழுமையான புலமையை பெற்றுக்கொள்வதோடு, ஆங்கிலம் கற்பிக்க விரும்புவோர்களுக்கான கற்கை நெறி.

கற்கைநெறியை வெற்றி கரமாக பூர்த்தி செய்பவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு

Programme Duration : 06 months
Applicants should be above 18 years
Pass in English Language at G.C.E (Ordinary Level) or an equivalent qualification.

Start : 20/6/2016 (Mon) at 8.30 a.m.

**DMI COMPUTER EDUCATION**

| No.113, கஸ்தூரியார் வீதி, (சாவ்ஸ் ஹோசல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222-4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174, கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130, K. K. S வீதி. NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19, A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

அரச அங்கீகாரம் பெற்ற “A” தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# நியூ நெல்சன் லேணர்ஸ்

**New Nelson Learners**

கடல் நடுவே வீற்றிருந்து எமைக்காக்கும் அன்னையே…

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.

**கிளைகள்**

இல.97 A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 1393, 077 111 3382

இல.89, கண்டி வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 021 222 4527 077 358 1916

பஸ் நிலையம், சுன்னாகம் 077 715 0097 021 492 3732

சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். 021 225 6955 077 794 2312/ 071 735 8440

காளிகோயில் வீதி, சாவகச்சேரி 021 492 3114 077 761 1686

பிரதான வீதி, வல்வெட்டித்துறை, 077 557 3711 021 492 3733

அல்லும் பகலும் எமக்கருளும்
அன்னையே உன் அடிபணிகின்றோம்
தொல்லைதீர்த்திடவே எம்மருகே
வந்து நின் திருவதனம் தாராயோ!

**WESTERN UNION MONEY TRANSFER**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Waestern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

# ஸ்ரீ முருகன் களஞ்சியம்

நயினை நாயகியே உன்னை நாடியே தேடி வந்தேன் நயந்து
எனைக் காத்து நல்லருள் தாருமம்மா

புதினப் பத்திரிகை முகவரும்
L.P.GAS விற்பனையாளரும்



மூளாய் றோட், வட்டுக்கோட்டை.


தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்
காலங்கள் மாறலாம். அதுபோல் நாமும்,
புதிய பழக்க வழக்கங்கள். அனுபவங்கள்.
அங்கீகாரங்கள். பொறுப்புக்கள்.
இந்த மாற்றங்கள் எல்லாம் வளர்ச்சியின் ஒரு பாகம்.
இருப்பினும். இப்படியொரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்
ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
NEW Uthayaa JEWELLERS
Thank You
021 222 2031
newuthayajwellrs@gmail.com
No. 91, Power House Road, Jaffna
Newuthaya Jwellrs
uthaya.new


இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
ILANKAI VENTHAN ART'S COLLEGE
இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி
அரங்கேற்றம், கூட்டம், ஒன்றுகூடல்,
திருமணம், பூப்புனித நீராட்டு விழா,
பிறந்தநாள் மற்றும் பொது
வைபவங்களுக்கும்.
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
63, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 077 754 9803


அருள்புரிவாய் நாககன்னியே
Aachi Foods Restaurant
ஆச்சி பூட்ஸ் றெஸ்ரோறன்ற்
மிகமிகச் சுத்தமும், செயற்கைச் சுவையூட்டிகள்
அற்றதும், யாழ்ப்பாணப் பாரம்பரியத்தைக்
கொண்டதும்,
குறுகிய காலத்தில் அதிகளவான
வாடிக்கையாளரைப் பெற்று
உணவு விற்பனையில்
தற்பொழுது
யாழ்ப்பாணத்தில்
முன்னணி வகிக்கும்
நிறுவனமாக விளங்கும்
ஆச்சி பூட்ஸ் றெஸ்ரோறன்ற்
147, பலாலி றோட், திருநெல்வேலி- 021 222 5001
யாழ்.மருத்துவபீடம் கன்ரீன்
மானிப்பாய் நவீன சந்தை, மானிப்பாய்- 076 675 7466
No. 102, சுன்னாகம்- 077 468 8286
கண்டி றோட், சாவகச்சேரி- 077 427 8900
கைதடி கிழக்கு, கைதடி:- 021 205 7455 (Factory)



உன் அருள் ஆட்சி என்றும் ஓயாது தாயே
யாழ்.மாவட்ட மக்களின் மனங்களில் முதற்தர
சுத்தமான குடிதண்ணீர் என்ற தனி நாமத்தைப் பெற்ற...
American Water
American
Just drink it!
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்
P.N.K.Group
589, K.K.S.Road,
Jaffna.
T.P :- 021 221 7277, 021 222 3096




ஏழ்கடல் சூழ் நயினையம்பதியிலே
ஏழிலோடு வீற்றிருக்கும்
நர்த்தனியே! நாக பூஷணியே
L
Regd No. DS/ 589, Kiruba Learners, Govt.
Approved A Grade Driving Training School
அரச அங்கீகாரம் பெற்ற
A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.
தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.
கிருபா லேணர்ஸ்
இல, 226. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ,பேசி, 021 222 4353. 021 492 3200. 077 722 5292
கிளிநொச்சி 021 228 5505 071 454 6955
இல. 216, A9வீதி, வவுனியா. (வசந்தி தியட்டருக்கு முன்பாக)
சாவகச்சேரி 021 492 3202 021 2270700
விசுவமடு 021 320 1515 071 454 6955
சுன்னாகம் 021 224 2022 071 454 6956
நெல்லியடி 021 300 6550 071 454 6957
பருத்தித்துறை, 021 492 3201 071 454 6958





கடல் நடுவே வீற்றிருந்து கருணை பொழியும் நயினைத் தாயே...!

# சரஸ்வதி மண்டபம்

## ராஜா கிறீம் ஹவுஸ்






- யாழ்.மாநகரில் மிகப் பிரமாண்டமான மண்டபம்.
- நியாயமான கட்டணங்களுடன் கூடிய தரமான சேவை.
- எல்லா மதத்தினருக்கும் அவரவர் கலாசாரத்திற்கும் விரும்பிய நிறத்துக்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரங்கள்.
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) வசதி.
- மண்டபத்துடன் இணைந்த ஐஸ்கிறீம் விற்பனை நிலையம்.



37, சேர்.பொன் இராமநாதன் வீதி
(நாச்சிமார் கோவிலுக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

021 320 7369
077 923 4176

MATHI COLOURS

# மதி கலர்ஸ்

## பிறிண்டர்ஸ்

உங்கள் இல்லங்களில் நடைபெறவுள்ள மங்களகரமான நிகழ்வுகளுக்கு .....

## திருமண அழைப்பிதழ் காட்சியறை

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 600ற்கு மேற்பட்ட பலவர்ண புத்தம் புதிய டிசைன்களுடன் மலிந்த விலையில் பிறிண்டிங் வசதியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

கண்களைக் கவரும் பலவித புதிய வடிவமைப்புக்களுடன் மடல்கள் உங்கள் விருப்பத்தின் தெரிவுகளுக்கு நாடுங்கள்...

*Wedding Card Show Room*



MATHI COLOURS

10, முருகேசர் லேன், முத்திரைச்சந்தி, நல்லூர்.

web.www.mathicolours.com 021 2229285

கடல் நடுவே வீற்றிருந்து கருணை பொழியும் நயினைத் தாயே...!

# ஜீவாகாரம்

குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு




# Anna Coffee

100% Pure Ground Coffee





*Superbly Blended & Roasted to a Strict Formula....*

எமது புதிய தயாரிப்புக்கள்....




அண்ணா தொழிலகம் - இனுவில்.

TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063





# தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி, கர்நாடகா ஊடான யாத்திரை ஆரம்பம் 05.07.2016 நாட்கள் 16 மலைக்கோட்டை விநாயகர், ஆறுபடை வீடுகள், 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூதத் திருத்தலங்கள், திருப்பதி, குருவாயூர், மேல்மருவத்தூர், கன்னியாக்குமரி, பிரம்மா கோவில், தோனியப்பர், இராமேஸ்வரம், பொற்கோவில், திருக்கடையூர், மைசூர்சாமுண்டீஸ்வரி உட்பட 60 இற்கு மேற்பட்ட ஆல்யங்களை தரிசிப்பதுடன் சுற்றுலா இடங்களும் காணலாம்.

இருவழி விமான ரிக்கெட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, 2 பேருக்கு குளியலறை இணைந்த சுகாதார மான அறைகள், யாத்திரை முடியும் வரை (A/C)வாகன வசதி, மினரல் வோட்டர், மேலும் ஆலய தரிசனக் கட்டணங்கள் உட்பட 10 பேர் மட்டும். மேலும் விபரங்களைக் கேட்டறிந்து பதிவு செய்யவும்.

**வட இந்திய காசியாத்திரை**


நாட்கள் 19 யாத்திரீகர் 15 ஆரம்பம் 06.08.2016 டெல்லி பார்த்தல், ஆக்ரா தாஜ்மகால், மதுரா கிருஷ்ணஜென்மபூமி அலகாபாத், கங்கை, ஜமுனா, சரஸ்வதி, கயா, புத்தகயா-குருச்சேத்திரம், சீத்தாமடி, காசி, ஹரித்துவார்,ரிஷிகேஸ், அயோத்தி, நைமி, சரண்யம், இராமேஸ்வரம், உத்தரகோச மங்கை, திருப்புவாணி நவபாஷாணம் உட்பட பல இடங்களை தரிசிக்கலாம்.

பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை. பிரயாண வசதிகள், பயணம் 6 விமானங்கள், (A/C) வாகனம் உடன் சமைத்த உணவு (பிராமண சமையல்), மூன்று வேளை உணவு, குடிநீர், பிராமண சமையல்காரர் சமைப்பதால் பிராமண சமூகத்தினரும் தயக்கமின்றி கலந்து கொள்ளலாம். விருப்பமுடையவர்கள் விபரத்தை கேட்டு அறிந்து பதிவு செய்யவும். விபரங்கட்கு

தற்சமயம் காசி யாத்திரை 10 நாட்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**15.06.2016 இல் ஆரம்பமாகியது.** **கலாநிதி ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்**

**(TP) 077 768 0102, 077 736 2154** **59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு- 11,**



கலை வளர் நயினைப் பதியினிலே கருணை செய்வாயே நாகம்மா
நிலை பெறு சக்தி நீ யெனவே நிதமுனை நாடித் தொழுவோமே
அலை கடல் சூழ அமர்ந்திருந்து ஆட்சி செய்யும் தாயம்மா
மலைவளர் காதலிப் பெண்ணுமையே மனம் நிறை தாயே நீயம்மா

நயினைச் செல்வி. விஜி





# S.V. முருகேசு

**கடலுறை நாயகி**

நயினையுறை நாயகியே
பாம்பணையின் பாலகியே
மக்கள் துயர் தீர்த்து நிற்கும்
கடலுறை இரட்சகியே
எம்துயர் தீர்த்திட வருடந்தோறும்
வந்திடும் நின் வருடத் திருவிழா
காணக் கண் கோடியுண்டோ
காண அருள் தந்திடம்மா

**இல. 154, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**TP: 021 222 8899**

# புவனேஸ்வரி பீடத்தை அலங்கரிக்கும் நாயகி புதுவாழ்வைத்தர தேரேறி வருகிறாள்

உலகுயிர்கள்உய்யும் வண்ணம் எம்பிரானாகிய சிவபெருமான் தமது சக்தியைப் பதித்தற்குரிய இடங்கள் அறுபத்து நான்காகும். இவை சக்தி பீடங்கள் எனப்படும்.

காஞ்சியிலே காமாட்சி எனவும் காசியிலே விசாலாட்சி எனவும் மதுரையிலே மீனாட்சி எனவும் தஞ்சையிலே முத்துமாரியெனவும் திருக்கடவூரிலே அபிராமியெனவும் பலப்பல திருநாமங்களை கொண்ட பேரரும் சக்தியானவள் நயினாதீவு எனப்படும் மணி பல்லவத்திலே புவனேஸ்வரி பீடத்தினை அலங்கரித்துக் கொண்டு நாகேஸ்வரி, நாகபூஷணி முதலிய திருநாமங்களுடன் எழுந்தருளி அருளாட்சி நடத்தி வருகிறாள்.

நாகபூஷணிக்கு நாகேஸ்வரி என்ற திருநாமம் வழங்குவதனை முன்னரே குறித்தோம். நாகம் வழிபட்டதனால் நாகத்தால் பூசிக்கப்பட்டதனால் அன்னைக்கு இத் திருநாமம் அமைந்தது என்பர்.


நயினை ஆலயத்தின் கருவறையில் ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் அருள் பொழிந்த வண்ணமாகவுள்ளது. இந்தியாவில் கூட நாக வழிபாட்டிற்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயிலைக் காண்பதரிது.

கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவில் காணலாம். இந்த நாகச்சிலை பதினான்காயிரம் வருடம் பழைமை வாய்ந்தது. இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பார்க்க முடியாத பிரத்தியட்ச உருவமாக சர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக விளங்குகிறது.

நாக வழிபாட்டிலே தொடங்கி காலப் போக்கிலே நாகபூஷணி வழிபாடாக வளர்ந்து அவ் வழிபாட்டின் தொடர்ச்சியின் மகோன்னத நினைவுச் சின்னமாக நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. இலங்கையிலுள்ள ஆலயங்கள்யாவற்றிலும் மிகவும் பழைமை வாய்ந்தது நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமே. இத்தகு வரலாற்றுப் பெருமைகளை கொண்ட நாயகி நயினை நாகபூஷணி அம்பாள் இன்று பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் சகிதம் தேரேறி தேச நலன் காத்து அருள் செய்ய வருகிறாள்.

திருமதி அனுசூயா அருளானந்தன்
திருநெல்வேலி.

# நம்பி வருவோரை நலமருளிக் காத்திடும் நயினை நாகபூஷணித் தாய்



அலைகடல் நடுவினிலே வீற்றிருக்கும் அன்னை நாகபூஷணி அம்பாள் ஆலயம் அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடம் ஊட்போற்றிவழிபடும்ஆலயமாகும். நாட்டின் பலபாகங்களில் இருந்து வரும் பக்தர்களின் யாத்திரைத் தலமாகவும் பெரும்பான்மை இனத்தவர்களும் வந்து வழிபடும் பத்தினித் தெய்வமாகவும் போற்றி வழிபாடு செய்வதையும் காணக்கூடியதாகஉள்ளது. இவ்வாலயம் அண்மையில் இந்தியச் சிற்பக் கலைஞர்களால் திருத்தி வடிவமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகிறது.

நயினாதீவுக்கு சமீபமாக அனலைதீவு என்னும் ஒரு அழகிய தீவு உண்டு. அதன் தெற்குப் பகுதியில் புளியந்தீவு என்னும் சிறியதீவு உண்டு. அங்கு வரலாற்றுடன் கூடிய நாக தம்பிரான் ஆலயம்உள்ளது. அந்தஆலயப் பகுதியில் இரு ந்து நாகபாம்பு பூக்கொண்டு வந்து நயினாதீவு நாகபூஷணி அம்மனைப் பூசித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. நாகம் வந்து பூசித்தமையால் நாகபூஷணி எனப் பெயர் வரக்காரணமாயிற்று.

இதனைச் சான்று பகிரும் அடையாளச்சின்னமாக ஆலய வடக்குப்பகுதியில் இரு பெரிய கற்கள் காணப்படுகின்றன. ஒரு கல் பாம்பு சுற்றிய கல் எனவும் மற்றைய கல் கருடன் கல் எனவும் குறிப்பிடப்படுகிறது. நாகபாம்பு பூக்கொண்டு அம்பாளை வழிபட சென்ற போது கருடன் பாம்பை வழி மறித்துக் கல்லில் அமர்ந்து கொண்டதாகவும் நாகபாம்பு மற்றைய கல்லில் சுற்றிக் கொண்டு இருந்ததாகவும் அவ்வேளை அந்த வழியால் கடல் மார்க்கமாக வந்த வணிகச் செட்டியார் இந்த காட்சியை கண்டதும் அம்மனை நோக்கி வழிபாடு செய்ததாகவும் கருடன் பின் அவ்விடத்தை விட்டு பறந்து சென்றதாகவும் நாக பாம்பு பின்பு பூக்கொண்டு சென்றதாகவும் அறியமுடிகிறது. பாம்பு சுற்றி இருந்த கல்லை பாம்பு சுற்றிய கல் எனவும் கருடன் இருந்த கல்லை கருடன் கல் எனவும் கூறப்படுகிறது. இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்கள் இவ்விரு கற்களையும் கடற்கரை வழியாக கடந்து சென்று வழிபாடு செய்கின்றனர். இவ்விரு கற்களும் இவ்வாலயத்தின் புராதன அருட்சின்னமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இவ்வாலயத்தின் 11 ஆம் திருவிழா அன்று இப்புராதன கற்களுக்கு விசேட பூஜை, அபிஷேகம் நடைபெறுகின்றது. அவ்வேளைதனில் பல வருடங்களாக அந்தப் பகுதியின் மேல் கருடன் வட்டமிட்டுப் பறப்பதைக் கண்டு பக்தர்கள் ஆனந்தக் கூத்தாடி மகிழ்வதையும் பக்தி பரவசமாக நிற்பதையும் காணக்கூடிய தாகவுள்ளது. ஆலயத்தில் பல்வேறு இடங் களில் இருந்து பக்தர்கள் வந்து தங்கி நின்று நாகதோஷ நிவர்த்தி செய்து வருகிறார்கள். அம்பாள் அவர்களுக்கு கேட்ட வரங்களை அள்ளி அள்ளி கொடுக்கிறாள். பௌர்ணமி தினங்களில் ஸ்ரீசக்கர பூஜை வழிபாடுகள் நடைபெறு கின்றது.

இதில் திருமணமாகாத பெண்கள் திருமண பாக்கியம் வேண்டியும் திருமணமானவர்கள் தாலிப்பாக்கியம் நிலைத்திருக்க அம்பாளை வழி படுகின்றனர்.

அன்னே உலகிற்கு
அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை
யான் மறவாமல் நின்று ஏத்துவனே

நயினை
விசு-இராசநாயகம்

# இந்த தேசத்திற்கு நல்ல தீர்வு ஒன்றைத்தர நயினை அம்மன் இன்று தேரேறி வருகின்றா

ஈழ மணி நாட்டிலுள்ள புராதன சக்தி வாய்ந்த ஆலயங்களில் மிகவும் வரலாற்று சிறப்புமிக்க திருத்தலமாக நயினை நாகபூஷணிஅம்மன்ஆலயம் பன்நெடுங்காலமாக சிறப்புற்று விளங்குகின்றது. முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் அம்மன் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் துர்முகி வருட மஹோற்சவ வருடாந்த தேர்த்திருவிழா இன்று வெகு சிறப்பாக இனிதாக இடம்பெறுகின்றது. விக்கினங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமான் தங்க ரதத்தில் ஆரோகணித்து முன் செல்ல அதற்கடுத்தாற் போல் தீந்தமிழால் ஔவைக்கருள் செய்த கந்தப்பெருமான் ரதத்திலே பவனிவர இறுதியாக நாக தீபத்தில் இருந்து பக்தர்களைக் காக்கும் அம்மன் தங்க ரதத்தில் பவனி வருகின்ற கோலாகலமான காட்சியைக்காண கோடி கண்கள் வேண்டுமய்யா. நம்மக்கள் கொடுத்து வைக்க வேண்டும்.

தேர்த்திருவிழா அழித்தலைக்குறிக்கும். எமது உள்ளத்தில் உள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் பேராசை, களவு, காமம் போன்றவற்றையும் ஒடுக்கவே நயினை அம்மன் இன்று தங்கத்தேரேறி வருகின்றா. அக்காட்சியை காணும் போது எமது உள்ளத்தில் உள்ள அழுக்குகள் அகன்று உள்ளம் தூய்மையும் அழகும் பெறும். அந்த வகையில் இன்றைய ரதோற்சவம் சிறப்புற்று பக்தர்களின் பாவங்கள் அழிந்து போகவும் துன்ப துயரங்கள் நலிந்து போகவும் எல்லாம்வல்ல நயினை அம்மனை பிராத்திக்கின்றேன். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்குவது அம்பாளின் ஆலயம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூஷணி அம்மன் ஆலய கருவறையில் அம்மன் உருவம் போலக் காட்சியளிப்பது பழைய நாகபிரதிஷ்டையே. இது மிகவும் பிரசித்தமான அம்மன் உருவம் போலக் காட்சியளிக்கின்றது. இதற்குப்பின்னால் ஐந்து தலை நாக பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்த நாகச்சிலையானது இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டு பழைமை வாய்ந்ததாகும். நயினை நாகபூஷணி அம்மன் திருவிழா என்றால் யாழ்.குடாநாடு மட்டுமல்ல அம்பாள் அடியார்கள் அனைவரினதும் உள்ளங்களிலும் உற்சாகம்தான். இன்று நயினாதீவு இந்திரலோகம் போலக்காட்சியளிக்கின்றது. எங்குபார்த்தாலும் பக்தர்கள் கூட்டம். லட்சோபலட்சம் மக்கள் இந்தத் தேர்த்திருவிழா வைக் காண இங்கு கூடியிருக்கின்றார்கள்.

நயினையிலே அம்பாளின் அருள் மணக்கும், அடியார்களின் பக்தி மணக்கும், அந்தணர்களின் வேதபாராயண ஒளிமணக்கும், அடியார்களின் அரோகரா ஒலி வானைப் பிளக்கும். இத்தகைய மகத்துவம் நயினை மண்ணுக்குண்டு.

மஹோற்சவ காலத்தில் நயினாதீவு விழாக்கோலம் பூண்டிருக்கும். பக்தர்கள் எல்லோரும் கூடி பஜனைகள் நடைபெறும். பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களைக் செலுத்துவதற்காக அங்கப் பிரதிஸ்டை செய்தும், அடி அளித்தும், கர்ப்பூரச் சட்டி ஏந்தியும் காவடி, துலாக்காவடிகள் எடுத்தும் கடன்களைச் செலுத்திக் கொள்வார்கள்.

நயினை அம்பாளின் ரதோற்சவ பவனியை காணவரும் பக்தர்களுக்கு அம்பாள் வல்வினை நீக்கி இந்த மண்ணிலே எல்லோரும் நல்ல வண்ணம் வாழ அருள் பாலித்து இந்த தேசத் திற்கு நல்ல ஒரு தீர்வை பெற்றுத்தர அம்பாள் தன் அகக்கண்ணைத் திறந்து அருள் பாலிப்பாராக!

கலாவித்தகர்
திருமதி. மலர்விழி கனகசபை,
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
(அழகியல்)
தீவகக்கல்வி வலயம்,
வேலணை.

# எங்கள் மண்ணிலிருந்து ஒரு சாதனையாளன்



**தன்னியக்க நீர் இறைக்கும் இயந்திரம், மாற்றுத்திறனாளிகளுக்கான மலசல கூட அமைப்பு உள்ளிட்ட 21 புதிய கண்டுபிடிப்புக்களை செய்து சாதனை படைத்த தமிழரான வவுனியா ஓமந்தையைச் சேர்ந்த இளம் கண்டுபிடிப்பாளர் என்.என்.ஜக்சன் வலம்புரிக்கு அளித்த நேர்காணல் இங்கே தரப்படுகிறது.**

**நேர்காணல்:- எஸ்.ஆர்.கரன்**

கேள்வி:- கண்டு பிடிப்பாளராக வர வேண்டும் என்று தூண்டிய விசேட காரணங்கள் ஏதும் உள்ளனவா?

பதில்:- சின்ன வயதிலிருந்தே சரியான விருப்பம். பாடசாலையில் படிக்கும் போது போட்டிகள் நடைபெறும். அப்போதே பங்குபற்றி வெற்றி பெற்றிருக்கின்றேன். அதன் தொடர்ச்சிதான் இப்போது என்னை ஒரு கண்டுபிடிப்பாளனாக மாற்றியுள்ளது.

எனது குடும்ப சூழ்நிலை மிகவும் கஷ்டமானது. எனக்கொரு விளையாட்டுப் பொருளை வாங்கித்தரக் கூட எனது அம்மாவால் முடியவில்லை. எனக்கு அப்பா இல்லை. அப்படிப்பட்ட நிலையில் எனக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்களை நானே உருவாக்கிக் கொண்டேன். அந்தச் சூழ்நிலைதான் புதிய கண்டுபிடிப்புக்களை செய்யக் காரணமாக இருந்தது.

கேள்வி:- கண்டுபிடிப்புக்குரிய மூலப்பொருட்களை இலங்கையில் பெறக்கூடியதாகவுள்ளதா?

பதில்:- எனது கண்டுபிடிப்புக்களுக்கான எல்லா மூலப்பொருட்களையும் இலங்கையில் பெறக்கூடியதாகவுள்ளது. அவ்வாறு கிடைக்காத சந்தர்ப்பத்தில் அதற்குரிய வகையில் கண்டுபிடிப்புக்களை மாற்றிக் கொண்டேன்.

அதேவேளை கிடைக்காத மூலப்பொருட்களை இணைப்புச் செய்து பெற்றுக்கொண்டேன்.

கேள்வி:- உரிய மூலப் பொருட்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் ஏதாவது கண்டுபிடிப்பைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டதா?

பதில்:- அவ்வாறில்லை. எனக்குத் தேவையான மூலப்பொருட்களை உருவாக்கும் அடிப்படை மூலப் பொருட்களைக் கொண்டு எனது கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டேன்.

கிடைக்காத பல மூலப் பொருட்கள் உள்ளன. இருப்பினும் கண்டுபிடிப்புக்களை கைவிடும் நிலை எனக்கு ஏற்படவில்லை.

கேள்வி:- உங்களின் 21 கண்டுபிடிப்புக்களில் மிகவும் சோதனைக்குட்படுத்திய கண்டுபிடிப்பு எது?

பதில்:- விசேட தேவைக்குட்பட்டோருக்கான நவீன மலசலகூட அமைப்பு முறையை 3 நாட்களில் என்னால் கண்டுபிடிக்க முடிந்தது. ஆனால் தன்னியக்க நீர் இறைக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடிக்க சுமார் பத்து ஆண்டுகள் பிடித்தன. அந்தக் கண்டுபிடிப்பு குறித்து ஆராய்ந்து அதனை உருவாக்கப் பல சிரமங்களை எதிர்கொண்டேன். மிகவும் கூடுதலான காலம் எடுத்தது அந்தக் கண்டுபிடிப்புக்குத்தான். இவற்றை விட இன்னும் 19 கண்டுபிடிப்புக்கள் என்னிடம் உள்ளன. அவற்றையும் விற்பதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளேன்.

கேள்வி:-புதிய கண்டுபிடிப்பாளன் என்ற அடையாளம் கிடைக்க முன்னர் அங்கீகாரத்தை இலகுவில் பெற முடிந்ததா?



பதில்:- நிச்சயமாக இல்லை. என்னை யாருமே ஒரு பொருட்டாகக் கருதவில்லை. இப்போது எல்லோரும் என்னை நாடிவருகின்றனர்.

கேள்வி:- புறக்கணிக்கப்பட்டீர்கள் என்று சொல்ல முடியுமா?

பதில்:- கண்டிப்பாக அது தான் சரியான சொல். நான் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டேன்.

## எதிர்காலத்தில் என் பெயர் பாடப் புத்தகத்தில் வரும்

கேள்வி:- இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு ஏன் இத்தகைய நிலை ?

பதில்:- எங்கள் நாட்டைப் பொறுத்தவரை கண்டுபிடிப்பாளர்கள் என்றால் அது வெள்ளக்காரர்கள்தான். அவர்களால்தான் கண்டுபிடிக்க முடியும். எங்களால் முடியாது என்ற மனநிலை உள்ளது. நாங்கள் கண்டுபிடித்தாலும் வெள்ளக்காரர்களால் முடியாததை இவர்களால் கண்டுபிடித்துவிட முடியுமா? என்ற ஏளனம். விஞ்ஞானிகள், கண்டுபிடிப்பாளர்கள் என்றால் அது வெளிநாட்டவர்கள்தான் என்ற மனநிலை இங்குள்ளவர்களுக்குண்டு. பண்டைய காலத்தில் தமிழர்கள் தான் மிகச் சிறந்த விஞ்ஞானிகளாக, மிகப்பெரிய கண்டுபிடிப்பாளர்களாக இருந்தனர். தமிழனால் சாதிக்க முடியாதது என்று எதுவும் இல்லை. எதிர்காலத்தில் என் பெயர் பாடப் புத்தகத்தில் வரும் என்ற நம்பிக்கையுள்ளது.

கேள்வி:- யுத்தம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?

பதில்:-1996 ஆம் ஆண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டுதான் நாங்கள் வவுனியாவுக்குச் சென்றோம். எனது கண்டுபிடிப்புக்களுக்கு யுத்தம் தடை ஏற்படுத்தவில்லை. யுத்த காலப்பகுதியில்தான் என்னால் இத்தகைய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ள முடிந்தது. யுத்தத்தை காரணம் காட்டி தங்களால் சாதிக்க முடியவில்லை என்று யாராவது கூறினால் அதை என்னால் ஏற்க முடியாது.

கேள்வி:- குடும்ப சூழல் சாதகமாக அமைந்திருந்ததா?

பதில்:- இல்லை. எனது குடும்பத்தில் யாருக்கும் விருப்பம் இல்லை . இருந்தாலும் என்னால் கண்டுபிடிப்புக்களை கைவிட முடியவில்லை. கண்டுபிடிப்புக்களுக்குரிய சந்தைவாய்ப்பு இல்லை. விரைவாக கண்டுபிடிப்புக்களை செய்ய முடிந்த போதும் அதனை வாங்கி உற்சாகப்படுத்த யாரும் முன்வரவில்லை. அதனாலும் குடும்பத்தாரின் ஒத்துழைப்பைப் பெற முடியவில்லை. இலங்கையில் ஆட்சிப் பீடத்திலிருக்கிற அத்தனை பேரிடமும் சென்றேன். விஞ்ஞானத் துறைசார்ந்த அத்தனை பேருக்கும் என்னைத் தெரியும். என்னைத் தெரியாமல் விஞ்ஞானத்துறை சார்ந்தவர்கள் இலங்கையில் இல்லை.

கேள்வி:-கண்டுபிடிப்புக்களை விற்பதற்குரிய களம் தற்போது கிடைத்துள்ளதாகக் கருதுகின்றீர்களா?

பதில்:-கண்டிப்பாக தற்போது கிடைத்துள்ளது. எல்லாக் கம்பனிகளும் என்னைத் தேடி வருகின்றன. எனது கண்டுபிடிப்புக்களை இன்னும் அதிக தொகைக்கு விற்றிருக்கலாம் என்று இப்போது நினைக்கின்றேன். கண்டுபிடிப்புக்களை விற்கும் விடயம் இலங்கைக்கே புதிய விடயம்.

கேள்வி:-பல புறக்கணிப்புக்குப் பின்னர் உங்களுக்கு கிடைத்துள்ள இந்த வாய்ப்பை சாதிக்க நினைக்கும் ஏனையவர்களுக்குச் சாதகமாக்கும் நோக்கம் உள்ளதா?

பதில்:- எனது கண்டுபிடிப்புக்களுக்கு கிடைத்துள்ள பணத்தை வைத்து ஒரு அமைப்பை (Forum) உருவாக்கவுள்ளேன். அந்த அமைப்பு ஊடாக புதிய கண்டுபிடிப்பாளர்களை ஒருங்கிணைத்து அவர்களின் கண்டுபிடிப்புக்களை வெளிநாடுகளுக்கு அறிமுகப்படுத்தி அவற்றுக்குரிய சந்தைவாய்ப்பினை உருவாக்கும் நோக்கம் உள்ளது. எங்கள் மத்தியிலும் கண்டுபிடிப்பாளர்கள் உள்ளார்கள் என்பதை சர்வதேச நாடுகளுக்கு காட்ட வேண்டும். எனக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. அந்தச் சூழ்நிலை இனி யாருக்கும் ஏற்படக் கூடாது. அடுத்த தலைமுறைக்கு சிறந்த வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். பல கண்டுபிடிப்பாளர்கள் தங்களுடைய கண்டுபிடிப்புக்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று கூறி ஆதங்கப்படுகின்றனர். எனது கண்டுபிடிப்புக்கள் பற்றிய தகவல் அறிந்து பலர் என்னுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தாம் எதிர்கொண்ட சவால்கள் பற்றிப் பேசினர். பலர் அழுதனர்.

## இலத்திரனியல் கண் தயாரிக்கின்றேன்

கேள்வி:-புலம்பெயர் சமூகத்தினரிடம் எதிர்பார்ப்புக்கள் உண்டா?

பதில்:-ஆம், பல எதிர்பார்ப்புக்கள் உள்ளன. புலம்பெயர் சமூகத்தினர் கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவிகள் செய்ய முன்வரவேண்டும். பிறவியிலேயே கண்பார்வையற்றவர்களுக்காக இலத்திரனியல் கண் தயாரித்துக் கொண்டிருக்கின்றேன். அதற்கு நிறைய பொருட் செலவுகள் ஏற்படுகின்றன. என்னைப் போன்று பல கண்டுபிடிப்பாளர்கள் உதவிகளற்று காணப்படுகின்றனர். அவர்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

## திறமையானவர்களை வாங்க வெளிநாடுகள் தயாராகவுள்ளன

கேள்வி:- வடக்கு மாகாண சபையிடம் நீங்கள் வைக்கும் கோரிக்கை?

பதில்- வடக்கு மாகாண சபையினர் தங்களது கடமையைச் செய்யத் தவறிவிட்டனர். எனது கண்டுபிடிப்புக்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைத்த பின்னர் பலர் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர். ஆனால் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழனான எனக்கு மாகாண சபையைச் சேர்ந்த எவரும் வாழ்த்துக் கூட தெரிவிக்கவில்லை.

ஆனால், பல வெளிநாட்டுத் தூதரகங்கள் தொடர்பை ஏற்படுத்தின. என்னைத் தங்கள் நாட்டுக்கு வந்துவிடுமாறு கூறின. இலங்கையிலிருந்து வெளியேறும் எண்ணம் இல்லை. வெளிநாட்டுக்கு செல்லும் எண்ணமும் இல்லை என்று சொல்லிவிட்டேன். தடைகளைத் தாண்டுவதுதான் கஷ்டம், தடைகளைத் தாண்டினால் அனைவரும் எங்களை நாடிவருவார்கள். என்னைப்போன்றவர்களை வாங்க வெளிநாடுகள் தயாராகவுள்ளன.

விஞ்ஞானத்துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ளேன். அடுத்த தலைமுறைக்கு சிறந்த அடித்தளம் இட்டுள்ளேன்.

சில கண்டுபிடிப்புக்கள் குறுகிய காலத்திற்குள் நிறைவுபெறும். சில கண்டுபிடிப்புக்களுக்கு நீண்ட காலம் எடுக்கும். அதற்காக மனம் வருந்தக்கூடாது. யாரையும் நம்பி வாழக்கூடாது. அவ்வாறு செய்ய முற்பட்டால் ஒருபக்கம் ஏமாற்றப் பார்ப்பார்கள். இல்லாவிட்டால் நடுத்தெருவில் விட்டுவிட்டு போய்விடுவார்கள். யாரையும் நம்பினால் இதுதான் நடக்கும். கடவுளை நம்பலாம். விஞ்ஞானத்துறையில் யாரும் கடவுளை நம்புவதில்லை. ஆனால் எனக்கு கடவுள் நம்பிக்கை அதிகம் உண்டு.

# நான் கண்டுபிடிப்பாளனாக வாழவே விரும்புகிறேன்



“கண்டுபிடிப்பாளர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் இடையில் நிறைய வித்தியாசம் உண்டு. தோமஸ் அல்வா எடிசன் விஞ்ஞானியல்ல. அவர் ஒரு கண்டுபிடிப்பாளர். இப்போது அவர் விஞ்ஞானிகளின் பட்டியலுக்குள் வந்துவிட்டார். ஒரு கண்டுபிடிப்பாளரின் கண்டுபிடிப்பை வைத்துக்கொண்டு தான் விஞ்ஞானியால் ஆராய்ச்சி செய்ய முடியும். இல்லாவிட்டால் ஒரு பொறியியலாளரால் அதனை விருத்தி செய்ய முடியும். தொழில்நுட்பவியலாளரால் அதனை மீண்டும் உருவாக்க முடியும். கண்டுபிடிப்பாளன் விஞ்ஞானியை விட ஒருபடி மேற்பட்டவன். எல்லோரும் விஞ்ஞானி என்ற ஒருபட்டம் கிடைக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். ஆனால் எனக்கு அதற்கான அங்கீகாரம் கிடைத்தும் அதனைப் பயன்படுத்தவில்லை. நான் விஞ்ஞானி என்று கூறுவதைவிட கண்டுபிடிப்பாளன் என்று கூறவே விரும்புகின்றேன்.

விஞ்ஞானத்துறையைத் தான் அதிகம் விரும்பினேன். ஆனால் உயர்தரத்தில் என்னால் விஞ்ஞானம் கற்க முடியவில்லை. கலைப் பிரிவைத் தான் தெரிவு செய்தேன். அதே வேளை ஏனைய கண்டுபிடிப்பாளர்களின் வரலாறுகள் பற்றி அறிந்த காரணத்தால் என்னை விஞ்ஞானக் கோட்பாடுகளுக்குள் சிக்கவிடாமல் பாதுகாத்துக் கொண்டேன். கலைப்பிரிவை தெரிவு செய்ததால் பல விடயங்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்ததது.

தமிழ்,புவியியல், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். இருப்பினும் மூன்று பாடங்களிலும் சித்தியடையவில்லை. பரீட்சையில் சித்தியடையும் விரும்பம் எனக்கில்லை. அதனால் வேண்டுமென்றே பரீட்சையில் சித்தியடையவில்லை. பரீட்சையில் சித்தியடைந்தால் தொழில்துறைக்குள் சென்று கண்டுபிடிப்பாளனாக வரமுடியாமல் போய்விடுவேனோ என்ற அச்சம் இருந்ததது.

கல்வியானது கண்டுபிடிப்பாளனுக்கு தடையாக இருக்க முடியாது. ஆனால் விஞ்ஞானிக்கு கல்வி அறிவு முக்கியம். எனது கல்வித்தகைமையைக் காரணம் காட்டியும் தடைகளைப் போட்டார்கள். இருப்பினும் அனைத்துச் சவால்களையும் எதிர்கொண்டு மேலே வந்துள்ளேன்.

தோமஸ் அல்வா எடிசனை என்ன பாடுபடுத்தினார்கள். இருப்பினும் அவர் சாதித்தார். அவரைப் போன்ற பல கண்டுபிடிப்பாளர்களின் வரலாறுகளை அறிந்ததால் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளும் துணிச்சல் எனக்குள் ஏற்பட்டது.

கண்டுபிடிப்பாளர்களுக்கு மேற்கத்தேய ஊடகங்கள் செய்த பணியை நம்நாட்டு ஊடகங்களும் செய்து இளம் கண்டுபிடிப்பாளர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்றார் தமிழ் கண்டுபிடிப்பாளரான ஜக்சன்.

## கண்டுபிடிப்பாளர்களை காப்பாற்ற வேண்டும்

கண்டுபிடிப்பாளர்களைக் காப்பாற்ற வேண்டும். வெளிநாட்டவர்கள் இங்குள்ள கண்டுபிடிப்பாளர்களை கொள்வனவு செய்து அவர்களின் பெயர் வெளியில் வரவிடாமல் செய்கின்றனர். எனவே புதிய கண்டுபிடிப்பாளர்களை உற்சாகப்படுத்தி இத்துறையை வளர்த்தெடுக்க வேண்டும். அதேவேளைபுதிய கண்டு பிடிப்பாளர்கள் வெளிநாடுகளுக்கு சோரம் போகாமல் என்னுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். உங்கள் கண்டுபிடிப்புக்களுக்குரிய சந்தை வாய்ப்பை நான் ஏற்படுத்தித் தருகின்றேன்.

**கேள்வி:-** தமிழனால் அனைத்து இன கண்டுபிடிப்பாளர்களையும் இணைக்கக்கூடிய வாய்ப்புள்ளதா?

**பதில்:-** எனது கண்டுபிடிப்புக்கள் தொடர்பான தகவல்கள் வெளியுலகிற்கு வந்த பின்னர் சிங்கள, முஸ்லிம் கண்டுபிடிப்பாளர்கள் சுமார் 200பேர் வரை என்னுடன் தொடர்பை ஏற்படுத்தினர். அமைப்பு ஒன்றை உருவாக்கி ஒத்துழைக்குமாறு கூறினார்கள். நான் அவர்களிடம் கூறினேன். எனக்கு தலைவர் பதவி வேண்டாம். ஒரு ஆலோசகராகயிருந்து உங்களுக்கு உதவுகின்றேன் என்று.

**கேள்வி:-** இலங்கையில் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்காக அரச அமைப்பொன்று இயங்குவதால் அதனூடாக உதவிகளைக் கோரலாமே?

**பதில்:-** ஆம், புத்தாக்க ஆணைக்குழு என்று இலங்கையில் ஒரு ஆணைக்குழு இருக்கிறது. அது புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு உதவுவதற்கு உருவாக்கப்பட்டது தான். ஆனால் அங்குள்ளவர்களுக்கு அவர்களின் ஆணைக்குழுவின் நோக்கம் என்னவென்று தெரியவில்லை.

நான்சென்று அந்த ஆணைக்குழுவிடம் உதவிகோரினேன். முதலில் சென்று புதய கண்டுபிடிப்பை செய்யவுள்ளேன உதவி செய்யுங்கள் என்றேன்- இல்லை என்றார்கள். தொழில்நுட்ப ஆதரவு தாருங்கள் என்றேன்- இல்லை. ஒரு புத்தாக்கத்தை விற்றுத தருமாறு கேட்டேன் - இல்லை. ஒரு புத்தாக்கத்தின் வடிவமைப்பை செய்யக் கோரினேன். அதற்கும் இல்லை என்றார்கள்.

ஆனால் அந்த ஆணைக்குழுவின் மகுட வாசகம் “கண்டுபிடிப்பின் ஊடாக சுபீட்சமான எதிர்காலம்” எந்தக் கண்டுபிடிப்பிற்கு எதிர்காலம் என்று தெரியவில்லை. மாட்டுக்குப் பின் செல்லும் அதன் கன்றைப் பிடிப்பதற்கான எதிர்காலமா? என்று தெரியவில்லை. பல நிறுவனங்கள் உள்ளன. ஆனால் எதுவும் உதவும்நிலையிலில்லை. அனைத்தும் செயலிழந்தே காணப்படுகின்றன.

**புத்தாக்க ஆணைக்குழுவிற்கு அதன நோக்கம் தெரியவில்லை**

# தமிழ் சினிமா வரலாறு

## 187 கருணாநிதி வசனத்தில் சிவாஜி நடித்த வீரகாவியம் ‘மனோகரா’



**தந்தையுடன் வாக்குவாதம்**

மனோகரனுக்கும் மன்னார் புருஷோத்தமனுக்கும் நடக்கும் வாக்குவாதம் உயிர்த் துடிப்புடன் அமைந்தது.

அரசர்:- மனோகரா? உன்னை எதற்காக அழைத்திருக்கிறேன் தெரியுமா?

மனோகரன்:- திருத்திக் கொள்ளுங்கள் அரசே! அழைத்து வரவில்லை என்னை. இழுத்துவரச் செய்திருக்கிறீர்கள்.

அரசர்:- என் கட்டளையைத் தெரிந்து கொண்டிருப்பாய் நீ.

மனோகரன்:- கட்டளையா இது? கரை காண முடியாத ஆசை! பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து கண்ணே முத்தே என்றெல்லாம் குலாவிக் கெஞ்சி, தந்தத்தால் ஆன கட்டிலிலே, சந்தனத் தொட்டிலிலே, வீரனே! என் விழி நிறைந்தவனே! என்று யாரைச் சீராட்டி பாராட்டினீர்களோ அவனை அந்த மனோகரனை சங்கலியால் பிணைத்து, சபை நடுவே நிறுத்தி சந்தோஷம் கொண்டாட வேண்டும் என்ற தங்கள் தணியாத ஆசைக்குப் பெயர் கட்டளையா தந்தையே?

அரசர்:- நீ நீதியின் முன்னே நிற்கும் குற்றவாளி! தந்தையின் முன் தனயன் அல்ல இப்போது!

மனோகரன்:- குற்றவாளி! நான் யாருக்கு என்ன தீங்கிழைத்தேன்? என்னால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? அரசே தந்தையின் முன் தனயனாக அல்ல பிரைஜைகளில் ஒருவனாக கேட்கிறேன். கொலை செய்தேனா? கொள்ளை அடித்தேனா? நாட்டைக் கவிழ்க்கும் குள்ளநரி வேலை செய்தேனா? குற்றம் என்ன செய்தேன் கொற்றவனே! குற்றம் என்ன செய்தேன்? கூறமாட்டீர்களா? நீங்கள் கூற வேண்டாம். இதோ அறங் கூறும் அமைச்சர்கள் இருக்கிறார்கள். மறவர் குடிப்பிறந்த மாவீரர்கள் இருக்கிறார்கள்! மக்களின் பிரதிநிதிகள்-இந்த நாட்டின் குரல்கள் இருக்கிறார்கள். அவர்கள் கூறட்டும்... என்ன குற்றம் செய்தேன்?

சபையோர்:- குற்றத்தை மகாராஜா கூறத்தான் வேண்டும்.

அரசர் இது உங்களுக்குச் சம்பந்தம் இல்லாதது.

மனோகரன்:- சம்பந்தம் இல்லாதவன் சபைக்கு வருவானேன்? குடும்பத் தகராறு கொலு மண்டபத்துக்கு வரும் விசித்திரத்தை சரித்திரம் இன்று தான் முதன் முதலாகச் சந்திக்கிறது மகாராஜா!

அரசர்:- போதும் நிறுத்து... வசந்த விழாவில் நீ செய்த தவறுக்காக வசந்த சேனையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

மனோகரன் அதற்குத்தான் காரணம் கேட்கிறேன்!

அரசர்:- எதிர்த்துப் பேசுபவருக்கு ராஜ சபையில் என்ன தண்டனை தெரியுமா?

மனோகரன்:- முறைப்படி மணந்த ராணிக்கு சிறைத் தண்டனை அளித்து விட்டு, மூலையில் கிடந்ததற்கு முடி சூட்டியவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனையை விடக் குறைவானதுதான்.

அரசர்:- ஆத்திரத்தைக் கிளப்பாதே! நிறைவேற்று. அரசன் உத்தரவு.

மனோகரன்:- அரசன் உத்தரவென்ன? ஆண்டவனின் உத்தரவுக்கே காரணம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். அரசே சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டும் தாய் என்று கேள்விப்பட்ட பின்னும் அடங்கிக் கிடப்பவன் ஆமை!

அரசன்:- தாய்க்கும் தந்தைக்கும் வேற்றுமை அறியா மூடனே! தந்தையின் ஆணை கேட்டு தாயாரின் தலையை வெட்டி எறிந்த பரசுராமனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா நீ?

மனோகரன்:- பரசுராமன்- அவதாரம். மனோகரன்- மனிதன். இப்படிப்பட்ட உணர்ச்சி மயமான கட்டங்கள் மனோகராவில் ஏராளம். இந்தப் படத்தின் வெற்றியில் டைரக்டர் எல்.வி.பிரசாத்துக்கு முக்கிய பங்கு உண்டு.

எஸ்.வி.வெங்கட ராமனின் இசை அமைப்பில் இனிய பாடல்கள் இடம் பெற்றிருந்தன.

**பம்பல் பாராட்டு**

மனோகரா படத்தை பம்பல் சம்பந்த முதலியார் பார்த்தார். (தொடரும்)

# ஆனி மாத இராசிபலன்கள்

## 15.06.2016~15.07.2016



*வருங்காலம் செல்வங்கள் வரும் காலமாக இருக்க வேண்டுமென்று விரும்பும் சிம்ம ராசி அன்பர்களே!*

துர்முகி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, வெற்றித் தேவதையே உங்கள் வீட்டிற்கு விருந்தாளியாக வரும் வாய்ப்பு உள்ளது. கற்றவர்களின் பாராட்டும், கண்ணில்பட்டவர்களின் பாராட்டும் உங்களுக்கு வந்துகொண்டே இருக்கும். உற்றார, உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். ஜென்மத்தில் குருவும், ராகுவும் சஞ்சரிக்கின்றார்கள். வாழ்க்கையில் மறக்க முடியாத சில சம்பவங்கள் நடைபெறும் மாதமாகக் கூட இந்த மாதததைக் கருதலாம்.

ஜென்மத்தில் ராகுவும், 7இல் கேதுவும் இருக்கின்றார்கள். இது நன்மையைத் தருமா? என்று நீங்கள் கேட்கலாம். ராகுவோடு குரு இருப்பதை நினைவில் கொள்ளுங்கள். குரு மற்ற கிரகங்களோடு சேர்ந்தாலும் கோடி நன்மை, பார்த்தாலும் கோடி நன்மை என்று சாஸ்திரங்கள் சொல்கின்றது. கேதுவைக் குரு பார்ப்பதால் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

சுபச் செலவுகள் அதிகரிக்கும். பூமி யோகம் முதல் பொன்னான யோகங்கள் வரை பலவும் உங்களை வந்தடையும். சாமி துணையும், உங்களைச் சார்ந்தவர்களின் துணையும் கிடைக்கும். ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜப் பெருமானை வழிபடுவதோடு, அர்த்தாஷ்டமச் சனிக்கு பரிகாரமாக அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

செவ்வாய் உங்களுக்கு யோகம் செய்யும் கிரகமாகும். அது இந்த மாதம் மூன்று விதமான மாற்றங்களை அடைகின்றது. தொடக்கத்தில் ஜூன் 19ஆம திகதி, வக்ரம் அடைந்த செவ்வாய் துலாம் ராசிக்குச் செல்கின்றார். பிறகு ஜூன் 28ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகின்றார். மீண்டும் ஜூலை 1ஆம் திகதி விருச்சிக ராசிக்குச் செல்கின்றார். செவ்வாயின் வக்ர நிவர்த்திக்குப் பின்னால் உங்கள் செயற்பாடுகளில் எல்லாம் வெற்றி கிடைக்கும். 4,9இறகு அதிபதியான செவ்வாய், இல்லத்தில் நல்ல காரியம் நடைபெற வழிவகுக்கும்.

குடும்பத்தில் நீண்ட நாட்களாக திருமணம் தள்ளிப்போகிறதே, மங்கல ஓசை மனையில் எப்பொழுது கேட்கும் என்று நினைத்தவர்களுக்கு இந்தச் செவ்வாய் பெயர்ச்சி சாதகமாக அமையப் போகின்றது. முதலில் ஜூன் 19ஆம் திகதி துலாமில் செவ்வாய் வக்ரம் பெற்று

## நம்பிக்கைகள் நடைபெறும் மாதம் இது!

சஞ்சரிக்கப் போகின்றார். அதன் விளைவாக வழக்குகள் சாதகமாக அமையும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். நிலம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பாக்கிகள் வசூலாகும். அதன்பிறகு ஜூன் 28ஆம் திகதி செவ்வாய் வக்ர நிவர்த்தியாகின்றார். ஜூலை 1ஆம் திகதி விருச்சிக ராசிக்குச் செல்கின்றார். பலம்பெற்ற செவ்வாயால் வளமான வாழ்க்கை அமையும். புதிய தொழிலுக்கு நண்பர்கள் ஒததுழைப்புக் கொடுப்பார்கள். பொருளாதார நிலைபோதுமான அளவிற்கு வந்து சேரும். அருளாளர்களின் ஆலோசனை, அவ்வப்போது கைகொடுக்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

உங்கள் ராசிக்கு 2,11 இற்கு அதிபதியானவர் புதன். அவர் ஜூன் 20ஆம திகதி




மிதுனத்திலும், ஜூலை 6ஆம திகதி கடகத்திலும சஞ்சரிக்கப் போகின்றார். இந்த இரண்டு பெயர்ச்சிகளும் உங்களுக்கு எண்ணற்ற பலன்களை வாரி. வழங்கப் போகின்றது.

குறிப்பாக ரொக்கத்தால் வந்த சிக்கல்கள் அகலும். பொருளாதார நிலை பல மடங்கு உயரும். மிதுனத்தில் செவவாய் சஞ்சரிக்கும் பொழுது, இதுவரை தடைப்பட்டு வந்த காரியங்கள் தடையின்றி நடக்கும். பிரபலமானவர்கள் உங்களுக்கு அறிமுகமாகி, பிரச்சினைகள் தீர வழிவகுத்து கொடுப்பர். கடகத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது, பயணங்களால் பலன் கிடைக்கும்.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

உங்கள் ராசிக்கு 3,10இற்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் ஜூலை 8ஆம திகதி 12ஆம் இடமான கடகத்திற்கு வரப்போகின்றார். கடக-சுக்ரன் உங்கள் கனவுகளை நனவாக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அரசியலில் உள்ளவர்கள் அதிக நன்மையைப் பெறுவர். பொது வாழ்வில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிரிகள் விலகுவர்.

இம்மாதம் சர்ப்பக் கிரக வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

குரு வக்ர நிவர்த்தியாகி, சூரிய பலத்தோடு பிறப்பதால், இந்த மாதம் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். பற்றாக்குறை மாறி பணவரவு பலமடங்காக உயரும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்கள் அதிக நன்மைகளைக் காண்பார்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். உடன் இருப்பவர்களும், குடும்ப உறுப்பினர்களும் உங்கள் செல்வாக்கைக் கண்டு ஆச்சரியப்படுவார்கள். குழந்தைகள் உதிரி வருமானங்களைக் கொண்டுவந்து சேர்ப்பர். அவர்களின் எதிர்கால நலன் கருதி, தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். உத்தி யோகத்தில் உள்ள வர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. ராகு-கேதுக்களின் வழிபாடும், நடராஜர் வழிபாடும் நன்மையை வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்**



*தொல்லை தந்தவர்களுக்கும் நல்லது செய்ய நினைக்கும் கன்னி ராசி அன்பர்களே!*

துர்முகி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் சுக்ரனோடு பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார். ராசிநாதன் புதனும், தனாதிபதி சுக்ரனும் வலிமை இழந்திருப்பதால், திடீர், திடீரென மனமாற்றம் ஏற்படும். ஒரு காரியத்தைச் செய்யும் முன்னதாகவே எதிர்மறைச் சிந்தனைகள் மேலோங்கும். ஆரோக்கியத் தொல்லையும் அடிக்கடி வந்து போகலாம். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு எந்த நேரத்திலும் மாற்றங்கள் வரலாம்.

தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு, பழைய தொழிலை விட்டு விட்டுப் புதிய தொழில் தொடங்கினால் என்ன? என்ற சிந்தனை மேலோங்கும். வியாபாரப் போட்டிகள் அதிகமாகிவிட்டதே, இனி வேறு துறையைத் தேர்ந்தெடுக்கலாமா? என்ற நினைவு இப்பொழுது கைகூடி வரப்போகின்றது. புதிய நண்பர்கள் வந்திணைந்து முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பர். தொழில் ஸ்தானத்தில் சூரியன் வீற்றிருக்கிறார். எனவே அரசியல் பிரமுகர்களின் ஆதரவு கிடைக்கும்.

கடந்த சில மாதங்களாக வக்ர இயக்கத்தில் இருந்த குரு, இப்பொழுது வக்ர நிவர்த்தியாகி உங்கள் ராசிக்கு 4,6,8 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். சுக ஸ்தாத்தைப் பார்க்கும் குரு, உங்களுக்குப் புதிய பாதையைப் புலப்பட வைப்பார். இடம், பூமி வாங்கி கட்டிடம் கட்டுவதில் இடையூறுகள் இருந்தால், அவை நிவர்த்தியாகும் நேரம் இது. அதற்கான தொகை இப்பொழுது கைக்கு வந்து சேரும். பிள்ளைகள் வழியிலும் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும். வீட்டில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

**செவ்வாய் பெயர்ச்சி காலங்கள்!**

உங்கள் ராசிக்கு 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 3ஆம் இடத்திலேயே சொந்த வீட்டில்

## தொழிலில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும் நேரம்!

சஞ்சரிக்கும் பொழுது, சகோதர வழியில் சகாயங்கள் கிடைக்கும். ஆனால் அதே செவ்வாய் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது உடன்பிறப்புகள் உங்களுக்கு பகையாவர். ஜூன் 19ஆம் திகதி துலாம் ராசிக்கு, வக்ர இயக்கத்தில் செவ்வாய் பெயர்ச்சியாகிறார். வாக்குஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது, கோபம், படபடப்பு அதிகரிக்கும். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது. முன்கோபத்தால் முன்னேற்றத்தில் பாதிப்பு ஏற்படலாம. இருப்பினும் வருமானம் திருப்திகரமாக இருக்கும். செவ்வாயின் பார்வை அஷ்டம ஸ்தானத்தில் பதிவதால், இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். இடமாற்றம், ஊர்மாற்றம், உத்தியோகத்தில் இலாகா மாற்றங்கள் வந்து சேரலாம். ஜூன் 28ஆம் திகதி செவ்வாய் வக்ர நிவர்த்தியா




கிறார். ஜூலை 1ஆம் திகதி விருச்சிகத்திற்குச் செல்கிறார். இதன் விளைவாக வழக்குகள் சாதகமாகும். வாங்கிய இடத்தால லாபம் கிடைக்கும். பணியாளர் தொல்லை அகலும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜூன் 20ஆம் திகதி மிதுனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். ஜூலை 6ஆம் திகதி கடகத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். மிதுன புதனின் சஞ்சார காலம் மிகுந்த யோகம் தரும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வந்து கொண்டேயிருக்கும். தெரியாத தொழிலில் ஈடுபட்டவர்கள் கூட லாபம் அடைவார்கள். போட்டியாளர்கள் விலகுவர். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். கடக புதனின் சஞ்சாரத்தால் மேலும் நன்மைகள் வந்து சேரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வாகனம் வாங்கும் முயற்சிக்கு வழிபிறக்கும்.

**சுக்ர பெயர்ச்சிக் காலம்!**

ஜூலை 8ஆம் திகதி கடகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 2,9இற்கு அதிபதி 11இல் சஞ்சரிக்கும் பொழுது, பணத்தேவைகள் பூர்த்தியாகும். வங்கிச் சேமிப்பு உயரும். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும்.

இம்மாதம் நடராஜர் வழிபாடு நலம் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

யோகமான மாதம் இது. மாமன் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். சேமிப்பு உயரும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்க, உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். வீடு மாற்றங்கள் விரும்பும் வதத்தில் அமையும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்தவர்கள் விலகுவார்கள். குழந்தைகளின் கல்விக்காகச் செய்த ஏற்பாடுகள் கைகூடும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க எடுத்த முயற்சி வெற்றி பெறும். உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்கள் ஏற்படலாம். பயணங்களால் பலன் கிடைக்கும். மாருதி வழிபாடு மகிழ்ச்சியை வழங்கும்

(தொடரும்)

# தீர்வை எட்டுவதற்கு தமிழ் மக்களின் தனிப்பட்ட அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் செவ்வி

(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி...)

கேள்வி: தமிழ் மக்களின் நீதி மறுக்கப்படுவதற்கு மேற்குலகமும் உள்ளூர் தமிழ்த் தலைவர்களும் காலாக இருப்பதாக அண்மையில்தமிழ்மக்கள்பேரவை குற்றம் சுமத்தியிருந்த்து. இத்தகைய குற்றச்சாட்டானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரானது இல்லையா? இக்குற்றச்சாட்டிற்கு நீங்களும் பொறுப்பாளியா?

பதில்: இவ்வாறானதொரு கூற்றை நான் அறியவில்லை. இக்குற்றச்சாட்டானது எமது மக்களின் கருத்தாக இருக்கலாம். ஏனெனில் தமிழ் மக்கள் பேரவையானது மக்களின் நிறுவனமாகும். குற்றச சாட்டு ஒன்று முன்வைக்கப்படும் போது முதலில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களின உண்மைத்தன்மையை ஆராயவேண்டும். குறித்த ஒருவரின் நலன்களைப் பாதுகாப்பதற்கு விரைந்து செல்வதை விட இதனை முதலில் ஆராய்வதே புத்தி சாலித்தனமான செயலாகும்.

கேள்வி: தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவின் உதவியுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் எனக் கூறப்படும நிலையில், கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்த சூழல் மீண்டும் ஏற்பட இடமளிக்கப்படுமா?


பதில்: எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு நான் எப்போது ஜெயலலிதாவைக் கோரினேன்? நான் அவரை வாழ்த்தியதுடன், இன்னமும் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும் எனவும் கோரியிருந்தேன். அவர் அதற்கு சாதகமாகப் பதலளித்தார். இதனை வேறு அர்த்தத்தில் புரிந்து கொண்டால் அது எனது தவறல்ல.

கேள்வி: தாங்கள் ஜெயலலிதாவை வாழ்த்தி அனுப்பிய செய்தியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மத்தியிலும் மாகாண சபை உறுப்பினர்கள் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் அளவிற்கு நம்பகமான ஒரு அரசியல்வாதியாக ஜெயலலிதா விளங்குகிறாரா?

பதில்: அன்றைய தினம் சபையில் என்ன நடந்தது என்பதை நீங்கள் உறுதிப்படுத்த முடியும். தங்களது தகவல் தவறானது.

கேள்வி: ஜெயலலிதா, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தனது ஆதரவை வழங்குவார் என்பது நம்பகமற்றது. இந்நிலையில் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்பைப பேணுவதில் தங்களுக்குத் தடையாக உள்ள காரணிகள் எவை?

பதில்: செல்வநாயகம், அமிர்தலிங்கம் கடந்த காலத்தில் இதற்காகப் பணியாற்றினர். தற்போது சம்பந்தன் தனது பணியைத் திறம்பட ஆற்றி வருகிறார். முதல் இரு தலைவர்களினதும் முயற்சிகள தோல்வியுற்றன. ஆனால மூன்றாவது தலைவரின் எண்ணங்கள் வெற்றியடையும் என நம்புவோம்.



கேள்வி: அண்மையில் இலங்கையின் வடக்கிற்குப் பயணித்த அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் மற்றும் நோர்வே இராஜாங்கச் செயலரரோர் கற்றேம் ஆகியோர் தங்களிடம் என்ன கூறினார்கள்? இவர்கள் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுமாறு வடக்கு மாகாண சபைக்கு ஆலோசனை வழங்கியதாக ஊடகங்கள் தெரிவித்தன.

பதில்: நாங்கள் அதாவது தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஒன்றிணைந்தே இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவந்தோம். ஆகவே நாங்கள் அரசாங்கத்துடன் பணியாற்றுகிறோம். ஆனால கடந்த கால அரசியற் செயற்பாடுகள் தற்போதும் பின்பற்றப்படுவது எமக்கு வேதனை அளிக்கிறது. நாங்கள் கூறிய கருத்தை நோர்வே இராஜாங்கச் செயலர் புரிந்து கொண்டார். ஆனால் சமந்தா, தனது அரசாங்கத்தின் பூகோள அரசியல் நலன்களுக்காகச் செயற்பட்டார். ஆகவே எமக்கு ஆலோசிப்பதற்கு எவ்வித அவசியமும் இல்லை. ஏனெனில் நாங்கள் ஏற்கனவே அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுகிறோம்.

கேள்வி: தங்களது அணுகுமுறை தொடர்பாக இந்திய உயர் ஆணையாளர் அதிருப்தி வெளியிட்டாரா? ஈழத் தமிழர் விவகாரங்களைத் தீர்ப்பதற்குத தாங்கள்இன்னமும்வெளிநாட்டு சக்திகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றின் மீது தங்கியுள்ளீர்களா?

பதில்: எதன் மீதான அணுகுமுறை? நானும சின்காவும் நல்லதொரு உறவைப் பேணுகிறோம். இந்த அரசாங்கமானது ராஜபக்ஷாக்களைத் தோற்கடிப்பதற்காக வெளிநாட்டு சக்திகள் மீது தங்கியிருந்தது. அவர்கள் தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் தங்கியிருக்க முயறசிக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொருவரின் உறவும் நிலையானது கடந்தகால வாழ்வின் நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது.

கேள்வி: புலம்பெயர் தமிழ சமூகத்தின் மீது அதீத நம்பிக்கையைத் தாங்கள் கொண்டுள்ளீர்கள். ஆனால் புலம் பெயர் சமூகத்தால் புலிகள் அமைப்பைக்காப்பாற்றமுடியவில்லை. புலம்பெயர் தமிழ் மக்கள் ஆரவத்துடன் செயற்படுகின்றன என நீங்கள் அறிவீர்களா?

பதில்: புலம்பெயர் சமூகம என்பது எம்மிலிருந்து வேறுபட்டுள்ளது. புலம்பெயர் தமிழ் சமூகத்தை அரசாங்கம் சரிவரப் பயன்படுத்த வேண்டும். புலிகள் அமைப்பு மீதான தோற்றப்பாடானது இன்னமும தங்களை விட்டு மறையவில்லை. இதற்காக என் மீதோ அல்லது புலம் பெயர் மக்கள் மீதோ பழி சுமத்த வேண்டாம்.

கேள்வி: புலிகள் அமைப்பின் தனிநாடு என்கின்ற கருத்தியலை உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இல்லாமற் செய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணியாற்றுகிறார். இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?

பதில்: நாங்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கவில்லை. ஆனால் எமது தனிதத்துவத்தை அரசாங்கம் அடையாளங்கண்டுகொள்ள வேணடும். எமது மக்கள் சமனாக மதிக்கப்பட வேண்டும்.

கேள்வி: வடக்கு மாகாண சபைக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முரண்பாடு தோன்றக் காரணம் என்ன?

பதில்: இராணுவத்துடன் எமக்கு எவ்வித பிரச்சினையுமில்லை. நான் வடக்கிற்கான முன்னாள் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவுடன் சிறந்த தொடர்பைப் பேணினேன். இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்ற வேண்டும் எனக் கோருவது தனிப்பட்ட விடயமல்ல. இது இயற்கையானது, நியாயமானது, அவசியமானது. யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன. தற்போதும் எமது பகுதியில் இராணுவம் நிலைத்திருப்பதைக் காணலாம். நாங்கள் எமது பொருளாதாரத்தை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் மேற்கொள்ளலாம். முறையற்ற மீன்பிடி போன்ற மீனவர்களின் பிரச்சினைகளும் காணப்படுகின்றன. இதைவிட நிலக்கையளிப்பு என்பதும் பிரச்சினையாகும். பிறிதொரு கொஸகம போர்ச் சூழல் உருவாகும். கொஸ்கமவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு போன்ற பிறிதொரு சம்பவம் இடம்பெறக் கூடாது. (முற்றும்)

வழிமூலம் - சண்டே ஒப்சேவர்
மொழியாக்கம் - நித்தியபாரதி

---

06.2016
19

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1269 - பிரான்சில் மஞ்சள் அடையாளம் இல்லாமல் பொதுவில் திரியும் அனைத்து யூதர்களும் தண்டம்செலுட்த்த வேண்டும் என ஒன்பதாம் லூயி மன்னன் கட்டளையிட்டான்.
- 1867 - மெக்சிகோவின் மன்னன் முதலாம் மாக்சிமிலியன் மரணதண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டான்.
- 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அனைத்து தெற்கு மாநிலங்களும் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட பின்னர், அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- 1910 அமெரிக்காவில் வாஷிங்டனில் முதல் தடவையாக தந்தையர் நாள் கொண்டாடப்பட்டது.
- 1912 - ஐக்கிய அமெரிக்காவில் 8-மணி நேர வேலைத்திட்டம் அமுலாகியது.
- 1943 - டெக்சாசில் இனமோதல் இடம்பெற்றது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில பிலிப்பீன்ஸ் கடல் சமர் இடம்பெற்றது.
- 1953 - அமெரிக்காவின் அணுவாயுத இரகசியங்களை சோவியத் ஒன்றியத்துக்கு வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஜூலியஸ் மற்றும் எத்தல் ரோசன்பேர்க் என்ற யூதத் தம்பதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1961 - குவெய்த் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1987 - ஸ்பெயினில் கடைத்தொகுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 21 பேர்ர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள

- 1623 - இலாய்சி பாஸ்கல், பிரெஞ்சு அறிவியலாளர். (இ.. 1662)
- 1903 - வால்ரர் ஹமொண்ட், இங்கிலாந்துத் துடுப்பாட்டக்காரர். (இ. 1965)
- 1947 - சல்மான் ருஷ்டி, இந்திய எழுத்தாளர்.
- 1970 - ராகுல் காந்தி, இந்திய அரசியல்வாதி
- 1978 - டெர்க் நொவிட்ச்கி, ஜெர்மன் கூடைப் பந்து ஆட்டக்காரர்.
- 1985 - காஜல் அகர்வால் இந்திய திரைப்பட நடிகை.

### இறப்புகள்

- 1720 - ரொபர்ட் நொக்ஸ், பிரித்தானியக் கிழக் கிந்தியக் கம்பனியின் ஆங்கிலேய கப்பல் மீகாமன். (பி. 1641)
- 1867 - முதலாம் மாக்சிமிலியன், மெக்சிக்கோ மன்னன். (பி. 1832)
- 1993 - வில்லியம் கோல்டிங், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய எழுத்தாளர். (பி. 1911)

---

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 120 | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 85 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 700 | 500 | 550 | 600 | 800 | 500 |
| தக்காளி | 220 | 250 | 180 | 200 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 100 | 70 |
| கோவா | 180 | 200 | 120 | 200 | 160 | 180 |
| கரட் | 250 | 400 | 250 | 240 | 300 | 250 |
| பூசணி | 80 | 100 | 80 | 80 | 100 | 60 |
| புடோல் | 100 | 150 | 100 | 80 | 120 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 140 | 120 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 250 | 400 | 200 | 240 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 100 | 100 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 100 | 200 | 100 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 250 | 300 | 150 | 180 | 160 | 180 |
| லீக்ஸ் | 220 | 300 | 150 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 130 | 150 | 200 | 150 |
| கறிமிளகாய் | 300 | 400 | 220 | 240 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 550 | 400 | 300 | 400 | 600 | 700 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 240 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 | 100 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 20 | 30 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 240 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 300 | 120 | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 250 | 300 | — | 240 | — | — |
| முள்ளங்கி | 100 | 200 | — | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 50 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 120 | 50 | 80 | 80 | 50 |

# ஊழல், மோசடி விசாரணைகளின் தாமதத்தை போக்க நடவடிக்கை

## ஜனாதிபதியும் பிரதமரும் இணக்கம்

**பாரிய ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பான விசாரணைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்களை களைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபாலவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.**

கொழும்பில் நேற்றுமுன் தினம் சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்த போதே அவர்கள் இந்த இணக்கத்தை வெளியிட்டனர். ஊழல்கள் தொடர்பான விசாரணையில் ஏற்பட்டுள்ள தடைகள் குறித்த விசாரணைகளில் அரசியல் தலையீடுகள் உள்ளதாகவும் சிவில் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர். இதே வேளை அமைச்சர்கள் கற்பனைகளில் தமது கருத்துக்களை வெளியிடக் கூடாது என்று சிவில் பிரதி நிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்களுக்குதாம் இது தொடர்பில் அறிவுறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன்மஹேந்திரனை ஜுன் 30க்கு பின்னர் மீண்டும் நியமிக்கக் கூடாது என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதியும் பிரதமரும் தாம் இது தொடர்பில் கலந்தாலோசிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

இதற்கிடையில் வேறு ஒரு பணி நிமித்தம், பிரதமர் கூட்டத்தின் இடையில் சென்றுவிட்ட போதும் அதன் பின்னர் ஜனாதிபதியுடன் 45 நிமிடங்கள் வரை பேச்சு தொடர்ந்ததாக சிவில் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## எம்.பியின் வாகனம் மோதி பெண்ணொருவர் மரணம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறியானி விஜேவிக்கிரமவின் வாகனத்தில் மோதி பெண் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று முன் தினம் இரவு திகாமடுல்ல மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிறியானி விஜேவிக்கிரமவின் வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-10)

## இந்த ஆண்டில் இந்தியாவுடன் எட்கா உடன்பாடு

இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு இந்த ஆண்டில் கையெழுத்திடப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடத்திய சிறப்பு செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

“எட்கா எனப்படும் பொருளாதார மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு தொடர்பாக இந்தியாவுடன் தொடர்ந்து பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.

இந்த உடன்பாடு தொடர்பான எல்லா நடைமுறைகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்படும்.

இந்த உடன்பாடு, இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஊக்கமளிப்பதாக அமையும்.

சில தரப்பினரால் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அடிப்படையற்றவை.” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

## டெங்கு நோயால் 24 மரணங்கள்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் தற்போது அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பாலித மஹிபால தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

42 சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவுகளில் டெங்கு நோய் பரவல் தற்போது அதிகரித்துள்ளது. மேலும் இவ் வருடத்தில் சுமார் 19,000 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 24 பேர் வரையில் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளனர் எனவும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## முன்னோடிப்பரீட்சை ஜூலை 9 ஆம் திகதி

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகி வரும் மாணவர்களின் நன்மை கருதி மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தினால் வருடந்தோறும் நடத்திவரும் தரம் 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை இம்முறை மாகாண தமிழ் கல்வி அமைச்சின் ஊடாக எதிர்வரும் ஜூலை மாதம் 09ஆம் திகதி சனிக்கிழமை நாடு தழுவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் தரம் 05 மாணவர்களின் பரீட்சை பெறுபேற்றினை அதிகரிக்கும் நோக்கில், மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தால் வருடாவருடம் இலவசமாக நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் இப்பரீட்சையானது இவ்வருடமும் தேர்ச்சி மிக்க ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களை கொண்டு நடத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சையானது பாடசாலை அதிபரின் ஊடாக உறுதிப்படுத்தபட்ட விண்ணப்பங்களை அனுப்பும் அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும் குறித்த நாளில் நாடளாவிய ரீதியில் இடம்பெறும்.

அத்துடன் விண்ணப்பிக்கும் பாடசாலைகள் தங்களது பாடசாலை கடித தலைப்பில் மாணவர் தொகை மற்றும் பாடசாலை விலாசம், அதிபர், பொறுப்பாசிரியர் தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு ஜுன் 30இற்கு முன்னதாக கிடைக்கும் வகையில், மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம், இல.189, 3ஆவது மாடி, செட்டியார்தெரு, கொழும்பு 11 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அத்துடன் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் தரம் 05 அறிவொளி முன்னோடிப் பரீட்சைக்கான விண்ணப்பம் 2016 எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும் எனவும் மேலதிக தகவல்களை 011 242 4886, 011 244 4339 மற்றும் 077 164 4808 என்ற இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## திருகோணமலை சீனன் குடா மீன்பிடித்துறைமுகத்தில் தீ

### மூன்று படகுகள் சேதம்

திருகோணமலை சீனன்குடா மீன்பிடித்துறை முகத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரோலர் படகு ஒன்றில் நேற்று அதி காலை ஏற்பட்ட தீவிபத்து காரணமாக மேலும் பல மீன் பிடி வள்ளங்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

ரோலர் படகில் தீப்பற்றத் தொடங்கியதும் அதன் அருகில் நங்கூரமிட்டிருந்த ஏனைய மூன்று படகுகளும் தீயினால் சேதமடைந்துள்ளன.

பொலிஸார், கடற்படையினர் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து பெரும் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

தீ விபத்தின் காரணமாக உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படாத போதும், பாரிய பொருட் சேதம் ஏற்பட்டுள்ளது. எனினும் சேதமதிப்பீடு இன்னும் முழுமை பெறவில்லை.

தீவிபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-10)

## காட்டில் மாணவியின் சடலம்

மஹியங்கனை குடாலுனுக பனுல்ல காட்டுப்பகுதியிலிருந்து 9 வயதான பாடசாலை மாணவியொருவர் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொரான யல்வெல பகுதியை சேர்ந்த ஒன்பது வயதான மலினி சந்தமாலி என்ற சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி பாடசாலைக்கு சென்று வீடு திரும்பாத நிலையில், அச்சம் கொண்ட பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிஸாரும், கிராமவாசிகளும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த சிறுமி காட்டுப்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதேவேளை, குறித்த சிறுமி துஷ்பிரயோகத்துக் குட்படுத்தி கொலை செய்யப்பட்டுள்ளாரா என்பது குறித்து மஹியங்கனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-10)

# பலுஜா நகரம் முழுவதும் படையினர் வசம் தேசியக்கொடியை ஏற்றி உறுதிப்படுத்தினர்



(பக்தாத்)

ஈராக் மற்றும் சிரியா நாட்டின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க படையுடன் இணைந்து கூட்டுப் படையினர் மேற்கொண்ட எதிர்த்தாக்குதல்களின் பயனாக தீவிரவாதிகளின் பிடியில் இருந்த ஈராக்கின் முக்கிய நகரங்களில் ஒன்றான பலூஜா நகரை முழுமையாக நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) மீட்டுள்ளதாக, தெரவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பலூஜாவிற்குள் நுழைந்த படையினர், நகரின் மத்திய பகுதியில் அமையப்பெற்றுள்ள அரச கட்டடம் ஒன்றில் தேசியக் கொடியினை ஏற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நக்ரின் மத்திய பகுதியை படையினர் கைப்பற்றும் முன்பாக நகரத்தின் முக்கியமான தொழில் துறை மாவட்டம் ஒன்றினையும் கைப்பற்றியுள்ளதாக கூறப்படுகின்றது.

பலூஜா நகரைப் பொறுத்தவரையில், ஈராக் மற்றும் சிரியாவில் நிலைகொண்டுள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளால் ஒப்பீட்டளவில் மிக அதிக காலம் கட்டுப்பாட்டில் இருந்த நகரம் என்றும், ஐ.எஸ்ஸின் அதிக பலம் பொருந்திய கோட்டையாக இது விளங்கியது என்றும் சர்வதேச ஊடகங்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-10)

நெருங்கிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் துரோகம் செய்பவர்கள் பலர் உள்ளனர்.

–விதுரர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கைகேயி விட்ட தவறை பரதனாவது நீக்கவேண்டும்

இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடுகள் நடந்தவண்ணம் உள்ளன. அயோத்தி மாநகரம் முழுவதும் விழாக்கோலம். தசரத மைந்தனுக்கு பட்டாபிஷேகம் நடப்பதைக்காண ஆவலுடன் மக்கள் காத்திருக்கிறார்கள். எனினும் அயோத்தி மாநகரில் இருவரோடு மூவருக்கு உறக்கம் இல்லை.

அதென்ன! இருவரோடு மூவர் என நீங்கள் கேட்கலாம். ஆம்; இருவர் கைக்கேயியும் அவள் தோழி கூனியும். மூன்றாவது நபர் தசரத சக்கரவர்த்தி. முன்னைய இருவரும் இராமருக்கு பட்டாபிஷேகம் நடந்துவிடக் கூடாது என்பதால் உறக்கம் இழந்தவர்கள். தசரதனோ எப்பாடுபட்டும் இராமனுக்கு பட்டாபிஷேகம் நடத்திவிட வேண்டும் என்று நினைத்ததால் உறக்கம் இழந்தவன்.

எனவே வேறுபட்ட நினைப்பில் உறக்கம் இழந்தவர்களை ஒன்றுபடுத்தி மூவர் என்று உரைப்பது அழகல்ல என்பதால் இருவரோடு மூவர் என்று உரைத்தோம்.

இராமருக்கான பட்டாபிஷேகத்தைக்காண காத்திருந்த அயோத்தி மாநகர மக்களுக்கு ஏமாற்றம். தசரதனுக்குத் தோல்வி. தசரத மாளிகையில் இருந்த கைகேயி, கூனி தவிர்ந்த ஏனையவர்களுக்கு தீராக் கவலை.

என்ன செய்வது? கூனி இட்ட சூழ்ச்சியும் மன மாறிய கைகேயியும் தங்கள் நினைப்பை அமுலாக்கும் பொருட்டு இராமனை வனவாசம் செல்லவைத்தனர்.

ஏதும் அறியாத இராமர் தன் பத்தினி சீதை, தம்பி இலட்சுமணன் சகிதம் காடேகிறார். தன் மூத்த மகன் இராமன் காடேகினான் என்ற செய்தி கேட்ட தசரதன் இறந்துபோகிறான். விழாக்கோலம் காண இருந்த அயோத்தி மாநகர் அமங்கலமாக காட்சி தருகிறது. இரண்டு பெண்கள் விழித்திருந்ததால் ஏற்பட்ட நாசம் இவை.

இப்போது பிறதேசம் சென்றிருந்த பரதனுக்கு தந்தையின் மரணச் செய்தி கிடைக்கப்பெறுகின்றது. பரதன் அயோத்திக்கு வருகிறான். அயோத்தி வந்த பரதன் நீதி – நியாயம் – நேர்மை என்பவற்றை துறந்திருப்பான் ஆயின் தன் தாய் கைகேயி போட்ட சூழ்ச்சிப்படி பட்டாபிஷேகம் செய்து அயோத்தி மாநகரை ஆண்டிருப்பான். ஆனால் அவன் அப்படி செய்யவில்லை.

இராமாயணத்தில் மிக உன்னதமான பாத்திரம் என்றால் இராமனைவிட அந்தப் பரதனே என்று எடுத்துரைக்க முடியும். அந்தளவுக்குப் பரதன் நீதி உணர்ந்தவன்.

பரதன் நீதிக்குமாறாக நடந்திருப்பான் ஆயின் இராமாயணம் என்ற இதிகாசம் தலையெடுத்திருக்க முடியாது போயிருக்கும்.

ஆக கூனி சூழ்ச்சி செய்யலாம்; கைகேயி பிழைவிடலாம். ஆனால் பரதன் நீதி தவறாததால்தான் தர்மம் வெல்கிறது. எனவே இந்த மண்ணில் கைகேயிகளும் கூனிகளும் இருந்தாலும் பரதர்களும் இருந்தால் நீதி நிலைபெற்று தர்மம் தலைத்தோங்கும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக எங்கள் தமிழ் மண்ணில் கூனிக்கு ஏற்ற கைகேயியும் கைகேயிக்கு ஏற்ற பரதர்களும் என்பதாக நிலைமை இருப்பதால் இன்னமும் வனவாசம் முடியாமல் தொடர்கிறது.

என்று பரதர்கள் புறப்படுகிறார்களோ அன்று தான் இராமர்களுக்கு விடிவுகிட்டும். பட்டாபிஷேகமும் நடக்கும்.

## சிகரெட்டின் விலை ரூ. 5 ஆல் அதிகரிக்கும்

(கொழும்பு)

ஜூலை முதலாம் திகதியில் இருந்து சிகரெட்களுக்கான வற்வரியை உயர்த்த இருப்பதாக அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி சிகரெட்டுக்களுக்கான விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

வருடாந்தம் சிகரெட்டுக்களை விற்பனை செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு ரூபாய் 80 பில்லியன் வரவு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வற்வரி சேர்க்கப்படுவதன் மூலம் வருடாந்தம் 100 பில்லியன் பெறுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-12)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் தருக்கோவில் மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

தொடர்ந்து யூலை மாதம் 02ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு தேர்த்திருவிழாவும், 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (செ-5)

## பரிசளிப்பு விழா

யா/கொழுமபுத்துறைவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை காலை 9 மணியளவில் வித்தியாலய மண்டபத்தில் நிலைபெறவுள்ளது. அதிபர் என்.தயாளன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்வி அலுவலர் எஸ்.சண்முககுமார் பிரதமவிருந்தினராக கலநது கொள்ள்வுள்ளார். (செ-5)

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் (நீராவியடி-யாழ்ப்பாணம்)



இன்று தேர்த் திருவிழா (19.06.2016)

தேரேறி வருகின்ற நீராவியடி ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகரே
தேவாதி தேவனே! சங்கரன் மகனே மூத்த விநாயகனே
வேரோடு வினைகளரும் தேர்த்திருவிழா தனிலே
நீரேறிக் களிப்புடனே நிலவொளிபோல் ஒளிவீசி
தேர்மீது காட்சிதரும் கார்முகத்துக் கணபதியே
பாரோடு விண்ணாய்ப் பரந்தே பக்தர்க்கருள்புரிய
நீராவியில் தேரேறும் நின்மலனே சரணம் ஐயா

நீராவி குலன்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை மன்னார் பிரதேசத்தில தோமஸ்புரி, வங்காலை ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)

## தமிழக மீனவர் பிரச்சினை குறித்து ஜெயலலிதா மீண்டும் மோடிக்கு கடிதம்

(சென்னை)

தமிழக மீனவர்களின் வாழ்வாதார விவகாரத்தில் நிலையான மற்றும் நடைமுறைகேற்ற தீர்வை மத்திய அரசு முன்னெடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம், பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடிதமொன்றினூடாக தமிழக முதல்வர் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுவதாகவும், அவர்கள் கைது செய்யப்படுவதாகவும் அந்த கடிதத்தல் குறிப்பிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் காங்கேசன்துறை கடற்பரப்பில் கோட்டைப்பட்டின மீனவர்கள் 3 பேர் கைது செய்யபபட்டுள்ளமை தொடர்பிலும் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் தனது கடிதத்தில் எடுத்துகூறியுள்ளார்.

1974 மற்றும் 76 ஆம் ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் காரணமாகவே பாரம்பரிய இடங்களில் மீன்பிடிப்பதில், மீனவர்கள் சிக்கலை எதிர் நோக்குவதாகவும் தமிழக முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இலங்கையில் தடுத்து வைத்துள்ள இந்திய மீனவர்களின் படகுகளை இலங்கை அரசு விடுவிப்பதற்கு மறுப்பு தெரிவிப்பது மிகுந்த கவலை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மீனவப் பிரச்சினையில் தலையீடு செய்து உடனடியாக இலங்கை வசமுள்ள 93 படகுகளையும், 24 மீனவர்களையும் விடுதலை செய்வதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழக முதல்வர் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (செ-12)

## ‘நான் யார் என்று தன்னாய்வு செய்வோமா!’


‘நான் யார்?’இந்தக் கேள்வியைச் சிந்திக்காதவர்களே இல்லை எனலாம். இன்று நம்மில் பலருக்கு இது எப்போதும் எழும் ஒரு கேள்வியாக இருக்கலாம். ஆனால் அறிஞர்களும் ஞானிகளும் ‘நான் யார்?’ என்ற தேடலில் வாழ்க்கை முழுவதும் ஈடுபட்டுள்ளனர். நான் யார் என்ற இந்தக் கேள்விக்குள் பல கேள்விகள் உள்ளன: என குடும்பத்தினருக்கு நான் யார்? என் நண்பருக்கு நான் யார்? என் பணியிடத்தில் நான் யார்? நான் வாழும் சமுதாயத்தில் நான் யார்? இவர்களுக்கெல்லாம் நான் என்னவாகத் தெரிகிறேன்? அடிப்படையில் மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? என்பது இன்று நம் வாழ்வின் ஒரு முக்கிய கேள்வியாகிறது.

### பரமபிதா காட்டிய பாதை

இயேசுவுக்கும் இந்தக் கேள்வி எழுந்தது. 21 நூற்றாண்டுகளாக மனிதர்கள் ‘யார் இந்த இயேசு?’ என்னும் கேள்விக்கு விடை தேடுகின்றனர். இக்கேள்விக்குப் பதில் என்ன?. இயேசு மக்களும் சீடர்களும் தம்மை யார் என்று கூறுகிறார்கள் என்னும் கேள்வியைக் கேட்கிறார். இயேசுவின் இந்தத் தேடலை இன்றைய நற்செய்தி நமக்குத் தருகின்றது. இன்றைய நற்செய்தியில் இயேசுவின் இந்த இரு கேள்விகள் நாம கவனிப்போம். ‘நான்யார் என்று மக்கள் சொல்கிறார்கள்?” “நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?”

‘நான் யார் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?” என்ற இந்தக் கேள்வி நமக்குத் தான் தரப்படுகின்றது. ஆனால் இந்த இரண்டாவது கேள்விக்கு அப்படி எளிதாகப் பதில் சொல்லி விட முடியாது. நாம் படித்தவைகளை விட பட்டுணர்ந்தவைகளே இந்தக் கேள்விக்குப் பதிலாக வேண்டும். நாம் மனப்பாடம் செய்தவைகளை விட மனதார நம்புகிறவைகளே இந்தக் கேள்விக்கான பதிலைத் தரமுடியும். இந்தக் கேள்வி நம்மில் பலருக்கு சங்கடங்களை உருவாக்குகின்றன என உணர்ந்தால் அது ஒரு நல்ல ஆரம்பம். இயேசுவின் இந்தக் கேள்வி வெறும் கேள்வி அல்ல. ஓர் அழைப்பு. ‘என்னைப் பற்றிப் புரிந்து கொள். என்னைப் பற்றிக் கொள்” என்று இயேசு விடுக்கும் அழைப்பு. இது சாதாரண அழைப்பு அல்ல. அவரை நம்பி அவரோடு நடக்க அவரைப் போல் நடக்க இரவனாலும் புயலானாலும் துணிந்து நடக்க அவர் தரும் ஓர் அழைப்பு. வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த கொடுக்கப்படும் இந்த அழைப்பிற்கு மனதின் ஆழததிலிருந்து வரட்டும் நம் பதில்கள்.

இயேசுவை அறிந்து கொள்ளும் இரு வழிகளை இன்றைய நற்செய்தி நமக்கு வழங்குகிறது. சொந்த ஈடுபாடு எதுவும் இல்லாமல் இயேசுவைப் பற்றிய கருத்துக்களைத் திரட்டுவது முதல் வழி. ‘மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?” என்று இயேசு கேட்டபோது இந்த முதல் வழியில் திரட்டிய பதில்களையே சீடர்கள் இயேசுவிடம் கூறினர். பின்னர் இயேசு தன் சீடர்களிடம் ‘ஆனால் நீங்கள் நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என்று கேட்டார். சீமோன் பேதுரு ‘நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்” என்கின்றார். பேதுருவின் பதில் வெறும் கருத்துக்களைத் தாண்டி விசுவாசத்தின் அறிக்கையாக இங்கு ஒலிக்கிறது.



இன்று எங்களிடம் இயேசு ‘நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?”என்ற இதே கேள்வியைக் கேட்கிறார் என வைத்துக் கொணடால்: இயேசுவின் கேள்விக்கு தாராள மனதோடும் துணிவோடும் பேதுருவின் விசுவாச அறிக்கைக்குப் பதிலாக நாம் உலகிற்கு இயேசு மெசியா வாழும் கடவுளின் மகன்” என எமது வாழ்வால் காட்டுவோமா?

ம. பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# நெற்கொழு கழுகுகள் வி. கழக வல்லவன் உதைபந்தாட்ட தொடர்





## மன்னார் கில்லறி வெற்றி

வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் கில்லறி வி.கழகம் யோசப்வாஸ் நகர் ஐக்கிய வி.கழகத்தினை வெற்றிகொண்டு மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் வி.க. நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 12.06.2016 அன்று நடைபெற்ற போட்டியில் மன்னார் கில்லறி வி.க எதிர்த்து ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய வி.க. மோதியது. இரண்டு பலம்வாய்ந்த அணிகள் மோதிய போட்டியாக அமைந்ததனால் உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு கண்கவர் போட்டியாக அமைந்தது.

முதற்பாதி ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் கில்லறி டிலக்சன் முதலாவது கோலினை அடிக்க ஆட்டம் மேலும் விறுவிறுப்பானது. தொடர்ந்த இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஐக்கிய வி.க.கிடைத்த தண்ட உதையினை ஜோன்சன் கோலாக மாற்ற மீண்டும் சமநிலையானது.

போட்டியின் இறுதி நேரத்தினை திட்டமிட்டு ஆடிய கில்லறி வி.க 84 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினை பெற ஆட்ட நேர முடிவில் 2:1 என மன்னார் கில்லறி வி.க. வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக பல கோல் வாய்ப்புக்களை தடுத்த கில்லறி வி.க கோல் காப்பாளர் சரண் தெரிவு செய்யப்பட்டதுடன் அணிக்கான பணப்பரிசினை மூத்த உறுப்பினர் சி.தேவராசா வழங்க பதக்கத்தினை கழக நலன் விரும்பி செ.அற்புதராசா வழங்கி கௌரவித்தார். (க)






# ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்து; ஊரெழு றோயலை வென்றது வதிரி டயமன்ஸ்



ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் லீக்சுற்று ஆட்டங்கள் புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

11.5.2016 அன்று நடைபெற்ற போட்டியில்ஊரெழுறோயல்அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

காலிறுதிக்குத் தகுதிபெற இப்போட்டி முக்கியமாகையால் ஆரம்பம் முதல் ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது வதிரி டயமன்ஸ் அணி. இதனைப் பயன்படுத்தி ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்திலேயே டயமன்ஸ் வீரர் அரவிந்தன் கோலடித்தார்.

போட்டியின் 21 வது நிமிடத்தில் கிடைத்த நேருதை (Direct free kick) வாய்ப்பினைப் பயன்படுத்தி பின்கள வீரர் உசானந்த் சிறப்பான கோலொன்றைப் போட மேலும் முன்னிலை பெற்றது டயமன்ஸ்.

கடந்த போட்டிகளில் பலமாக ஆடியிருந்த றோயல் அணி இன்றைய போட்டியில் மந்தமான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. அத்துடன் பின்களத்திலும் அதிக தவறுகளை (defending mistakes) ஏற்படுத்தியது. இதனால் டயமன்ஸ் அணிக்கு அதிக கோல் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. எனினும் முன்கள வீரர் துசிகரன் இவற்றை வீணடித்தார்.

ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் டயமன்ஸ் வீரர் மதுசூதன் ஒரு கோலைப் போட்டு அணியின் வெற்றி வாய்ப்பை மேலும் உறுதிப்படுத்தினார். கிடைக்கப்பெற்ற சில கோல் வாய்ப்புக்களையும் றோயல் அணி வீரர்கள் வீணடித்தனர்.

ஆட்டத்தில் முழு ஆதிக்கம் செலுத்திய டயமன்ஸ் இறுதியில் 3:0 எனும் கோலடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக டயமன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் உஷானந்த் தெரிவானார். (க)

# மாகாண மட்ட கராத்தே போட்டி கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவர்கள் பதக்கங்கள் குவிப்பு



மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் 2 தங்கம், 2 வெள்ளி உட்பட 9 பதக்கங்கள் பெற்று தேசியபோட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

அவர்களுடன்பிரதிப்பணிப்பாளர் (உடற்கல்வி) K. சத்தியபாலன், S. செந்தூரன் (ISA), பாடசாலை கராத்தே பொறுப்பாசிரியர் இ.சிவலிங்கம்,உடற்கல்வி ஆசிரியர் S. கரிகரன், இல்ல பொறுப்பாசிரியர்கள் S.வளர்மதி , N. ரவிபவன் மற்றும் பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சே S விஜயராஜை படத்தில் காணலாம்.

வெற்றி பெற்ற மாணவர்கள் மகாதேவா சுவாமிகள் இல்ல மாணவிகள் ஆவர். கா.லக்குனா 19 வயது பிரிவு குறூப்காட்டா வெண்கலம், த.கேசாளினி (19) குறூப்காட்டா வெண்கலம், குமித்தே க.பானுசியா (15) வெள்ளி , கி.பானுஷா (17) குமித்தே வெண்கலம், மோ.சுதர்சினி (17) வெண் கலம் குறூப்காட்டா , இ.சரணியா (15) குமித்தே தங்கம், இ.பிரியதர்சினி (17) குமித்தே வெண்கலம், ஆ.கயல்விழி (17) குமித்தே தங்கம் A. நிறோஜன் (17) காந்தி இல்ல மாணவன் குமித்தே வெள்ளி பெற்று சாதனை படைத்துள்ளனர். (கு)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் முல்லைத்தீவு சென்.யூட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் சென் .லூசியஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

✦✦✦✦✦✦✦✦

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அன்னை விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் தீவகம் இருதயராஜா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# பாடுமீன், யாழ். பல்கலை அடுத்த சுற்றுக்கு தகுதி

புத்தூர் எவரெஸ்ட் வி.கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் 14.06.2016 (செவ்வாய்) இடம்பெற்ற முதலாவது போட்டியில் நவாலி சென்.பீற்றர் தாமதமாக போட்டிக்கு சமுகம் தந்ததால் பாடுமீனுக்கு வெற்றி வழங்கப்பட்டது. 2 ஆவது போட்டியில் கொலின்ஸ் வி.கழகத்தை 3:0 என்ற கோல் அடிப்படையில் யாழ்.பல்கலைக் கழகம் வெற்றியினை தனதாக்கி கொண்டது. (கு)

# இளவாலை ஹென்றீஸ் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கழகங்களிடையே நடத்தும் உதைபந்தாட்ட தொடரின் நிறைவு விழா முன்னிட்டு கழகங்களிடையே நடைபெற்ற போட்டியில் அன்னை வி.கழகத்தை 4:2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது இளவாலை ஹென்றீஸ் வி.கழகம். (கு)

## இலங்கையின்...

இலங்கை தான் விரும்பிய முன்னேற்றத்தை காண்பதற்கு இந்தியா அருகருகே இருந்து செயற்படும் என தெரிவித்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி துரையப்பா விளையாட்டரங்கு வெறுமனே செங்கற்களால் உருவானதல்ல இது பொருளாதார வளர்ச்சியின் சின்னம் எனவும் தெரிவித்துள்ளார். இந்திய அரசின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்ட விளையாட்டரங்கை காணொலி மூலம் திறந்து வைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், இலங்கை தமது வழியில் முன்னேற்றத்தை காண இந்தியா அருகருகே இருந்துசெயற்படும். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவு வரையறுக்கப்படவில்லை. துரையப்பா விளையாட்டரங்கு வெறுமனே செங்கற்களால் செய்யப்பட்டதல்ல. இது பொருளாதார வளர்ச்சியின் சின்னமாகும். நான் கடந்த மார்ச் மாதம் யாழ்ப்பாணம் வந்த போது மக்கள் பெருமளவில் என்னை வரவேற்று இருந்தனர்.

இந்த நிகழ்வு இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவின் வரலாற்று முக்கியத்துவமான நிகழவாகும். ஏனெனில் முதல் தடவையாக வடக்கிற்கு இந்திய பிரதமர் விஜயம் செய்ததாகும். இலங்கையின் சகல அபிவிருத்தி செயற்பாடுகளிலும் இந்தியா துணை நிற்கும். எனது யாழ் விஜயமானது உலகின் இன்றையதினத்திற்கான முக்கிய நிகழ்வாக பதிவாகியுள்ளமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ் மக்கள் பல்வேறு துயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன தொடர்ந்தும் அவர்கள் கலை கலாசாரத்துடனே வாழ்ந்து வருகின்றனர் இந்த நிலை மேலும் தொடரப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் நூலகம் அமைக்கப்பட்டுள்ளமையானது பல நூற்றாண்டுகளை ஒன்றிணைக்கும் நிகழ்வாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நரேந்திர மோடி குறித்த காலப்பகுதிக்குள் யாழ் கலாசார நிலையத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கான உறவை பலப்படுத்தும். ஐ.நாவின் யோகா தினத்திற்கு இலங்கைதான் முதலில் ஆதரவளித்தது. இந்த விளையாட்டு அரங்கம் பொருளாதார வளர்ச்சியின் அடையாளம். இது நமது ஒருங்கிணைப்பிற்கு உத்வேகம் அளிக்கக் கூடியது. இலங்கை மக்களுடன் ஒன்றுகூடி விழா கொண்டாடுவதால் இன்றைய தினம் மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த தினம். கலை, கலாசாரம், மொழி ஆகியவற்றால் இந்தியா-இலங்கை இடையே நட்புறவு நிலவுகிறது இலங்கையின் முன்னேற்ற பாதையில் இந்தியா, இலங்கையுடன் கைகோர்த்து நிற்கும் என மோடி தெரிவித்தார். (செ-4)

# 90 வீதமான குற்றச்செயல்களுக்கு இவ்வருட இறுதிக்குள் முடிவு - பூஜித

(மல்லாவி)

வடக்கில் இவ்வருட இறுதிக்குள 90 வீதம் குற்ற செயலகள் கட்டுப்படுத்தப்படும் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார். நேற்று சனிக்கிழமை கிளிநொச்சியில் இடம் பெற்ற சிவில் பாதுகாப்பு குழுவினரிற்கும், பொலிசாருக்கும் இடையிலான கலந்துரையாடலில் அவர் இதனை தெரிவித்தார்.

குறித்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இரவு 7 மணியளவில் வருகை தந்த பொலிஸ்மா அதிபர் வரவேற்கப்பட்டதை அடுத்து மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் சிவில் பாதுகாப்பு தொடர்பில் மக்கள் கருத்து கேட்டறியப்பட்டது.

இதன்போது உரையாற்றிய பொலிஸ்மா அதிபர், வடக்கில் தற்போதுள்ள குற்ற செயல்களை இவ்வருட இறுதிக்குள் 90 வீதம் வரை கட்டுப்படுத்துவதற்கான பணிகள் இடம பெற்றுவருவதாக அவர் தெரிவித்தார். இதற்காக பொலிசாருக்கு பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ்மா அதிபர், பொலிசார் இதற்காக முழுமையாக அர்ப்பணித்து செயற்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

குறித்த நடவடிக்கைக்கு ஒத்துவராத பொலிசாரை இடமாற்றம் செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டில் தற்போது மொழி பிரச்சினை காணப்படுவதாக தெரிவித்த அவர், அதற்காக 118 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மொழப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஒரு நபர் குறித்த இலக்கத் திற்கு அழைத்து தனது முறைப்பாட்டினை பதிவு செயது கொள்ள முடியும், குறித்த முறைப்பாடானது கணணி மயப்படுத்தப்பட்டு அச்சு வடிவில் சம்மந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பிவைக் கப்படும். குறித்த முறைப்பாடு சரியானதா எனபார்வையிட்டதன் பின்னர் ஒப்பமிட்டுகொள்ள முடியும் என தெரிவித்த அவர், அதற்காக சம்மந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார் எனவும் தெரிவ்த்தார்.

மொழி பிரச்சினையை தற்காலிகமாக தீர்ப்பதற்கு இதுவே பொருத்தமான பணி என்பதை குறிப்பிட்ட பொலிஸ் மா அதிபர், இதற்காக பயிற்றுவிக் கப்பட்டஅதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார். (செ-15)

## இலங்கை - இந்...

இந்திய அரசின் நிதியுதவியில் புனரமைக்கப்பட்ட யாழ். துரையப்பா விளையாட்டரங்கை நேற்றைய தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கின் புனரமைப்புக்கான அனைத்து செலவுகளைய்யும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்கு இலங்கை மக்கள் சார்பில் இந்திய அரசிற்கும் இந்திய மக்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன். இலங்கை - இந்திய நட்புறவில் இது முக்கிய சந்தர்ப்பமாக நான் பார்க்கின்றேன்.

சரித்திர காலம் தொட்டே இந்திய இலங்கை நட்புறவு தொடர்ந்து-கொண்டே உள்ளது. நாளைய தினம் (இன்றைய தினம்) பொசன் நிகழ்வும் இதே போல் தான் இலங்கை பௌத்தர்களுக்கும் இந்திய பௌத்தர்களுக்கும் முக்கிய ஒரு நிகழ்வாக உள்ளது. எமது நாட்டின் அபிவிருத்திக்காக இந்தியா தொடர்ந்தும் உதவி வருகின்றது.

யுத்தத்தின் பின்னர் பல அபிவருத்தி திட்டங்களை பொருளாதார துறையில் இந்தியாவின் உதவியினால் அவை மேம்பட்டு கொண்டு செல்வதனை அனைவரும் காணகின்றோம். இந்த இணைந்த நடவடிக்கைகளுக்காக நாங்கள் தியாக உணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம்.

எமது இரண்டு நாடுகளின் முன்னேற்றங்களுக்காக சர்வதேச ரீதியாக நாம் இருவரும் செயற்பட்டு வருகின்றோம்.

இந்த முன்னேற்றமே இரு நாடுகளின் அனைத்து விதமான அபிவிருத்திகளுக்கு அவசியமாகும்.

எனினும் எமது இந்த இணைந்த நடவடிக்கைகளுக்கு சில கடும் போக்காளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஆயினும் எமது நட்புறவு இந்த எதிர்ப்புக்களையும் தாண்டி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகன்றது. விளையாட்டரங்கு என்பது நல்லிணக்கத்துக்கான தேசிய அரங்காகும். மைதானங்களில் மாணவர்கள் இனமத பேதமின்றி ஒன்றாக விளையாடுகின்றனர். இந்த ஆரோக்கியமான நிலை தான் தேசிய நல்லிணக்கத்திற்கு வித்திடும்.

யாழ்.மாநகர சபையின் முன்னாள் மேயர் பெயரில் அமைந்துள்ள இந்த அல்பிரட் துரையப்பா விளையாட்டரங்கை இந்திய ஜனாதிபதியுடன் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடையும் நான், அவர் கொல்லப்பட்டமை ஜனநாயக விரோத செயலுமாகும் எனக் கூறிக் கொள்கிறேன் என ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார். (செ-4)

## வீதி விபத்தில்...

உயிரிழந்த பெண்ணின் சடலம் வவுனியா மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து சம்பவம் தொடர்பில் ஜீப் வண்டி சாரதியை கைது செய்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

## இராணுவ வாக...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் யாழ் வருகையை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இராணுவத்தின் தண்ணீர் பவுசர் வாகனம் மோதியதில் குடும்ப பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்ப வம் நேற்றையதினம் காலை யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள மனித வுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். இவரது விஜயத்திற்கு கடும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. இதன்போது பிரதான வீதியிலிருநது இரண்டாம் குறுக்கு வீதியூடாக இராணுவத்தின் தண்ணீர் பவுசர் வாகனம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கு சென்று கொண்டிருந்தது.

இதன் போது மனிதவுரிமை ஆணைக்குழுவின் வலது பக்க ஒழுங்கையிலிருந்து இரண்டாம் குறுக்கு வீதிக்கு ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் தாயும், மகளும் வந்து கொண்டுள்ளனர். இதன் போது மிக வேகமாக வந்த இராணுவத்தின் தண்ணீர் பவுசர் வாகனம், வீதியை கடக்க முயன்ற குறித்த இருவர் மீதும் மோதியுள்ளது. இதில மோட்டார் சைக்கிள் இராணுவ வாகனத்தின் கீழ் நசிந்த நிலையில் குறித்த தாயாரும் பின் பக்க சில்லுக்குள் நசிபட்டுள்ளார்.

இதனால் சம்பவ இடத்திலேயே சிவராசா சௌந்தரராணி (வயது 52) எனும் பெயருடைய தாயார் உயிரிழந்துள்ளார். இவரது இருபத்தி நான்கு வயதுடைய சிவராசா சங்கீதா எனும் அவரது மகள் படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்து இடம்பெற்றதும் சம்பவ இடத்திற்கு வந்த இராணுவ உயர் அதிகாரிகள்,

இராணுவத்தின் தண்ணீர் பவுசர் வாகனத்தை அங்கிருந்து உடன் கொண்டு செல்ல முயற்சித்த நிலையில், அங்கு கூடிய பொது மக்களுடன் சமரச முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தனர். எனினும் அங்கு நின்ற இராணுவத்திற்கு மக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்தனர். ஒரு ஒழுங்கையில் இந்தளவிற்கு வேகமாக ஓட முடியுமா? எனவும் அவர்கள் கோபமடைந்தனர்.

இதன் பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த் யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிசார், விபத்து நடந்த இரு வாகனங்களையும் அங்கிருந்து எடுத்து சென்றனர்.

விபத்து நடைபெற்று சிறு நேரத்திற்குள்ளேயே அங்கு பெருமளவிலான இராணுவமும் பொலிசார் மற்றும் புலனாய்வுத்துறையும் அங்கு கூடியிருந்ததை காணமுடிந்தது. (செ-4,30)

## உதய கம்பன்பில...

செய்யப்பட்ட பிவிதுரு ஹெல உறுமய கடசியின் தலைவரும், மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பிலவை அடுத்த மாதம் 01ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில பொலிஸாரின் சிறப்பு விசாரணைப் பிரிவினால் நேற்று சனிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொட பாகொட வீதியில் உள்ள தனது அலுவலகத்தில் வைத்து நேற்று காலை கைது செய்யப்பட்டதாக உதய கம்மன்பில ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வர்த்தகரான ப்ரயன் செடிக என்பவருக்கு சொந்தமான 110 மில்லியன் ரூபாய் பெறுமதியான பங்குகள் போலி அனுமதிபத்திரம்மூலம்விற்பனை செய்ததாக உதய கம்மன பில மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ-12)


# கண்ணீர் அஞ்சலி

செல்வி மாலதி
கணேசபிள்ளை




S.V முருகேசு நிறுவனத்தின்
கிளிநொச்சி முகாமையாளர்
**கணேசபிள்ளையின்**
அன்பு மகள்
செல்வி **மாலதி**
**கணேசபிள்ளை**
அவர்கள் நேற்று அகால
மரணமடைந்த செய்தி கேட்டு
மிகுந்த துயரடைவதுடன்
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த் அனுதாபத்தை
தெரிவித்துக் கொள்வதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**உரிமையாளரும் ஊழியர்களும்**

S.V.M (Pvt) Ltd - Colombo
S.V முருகேசு – யாழ்ப்பாணம்
S.V முருகேசு – கிளிநொச்சி

## பயங்கரவாத...

கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்த இராணுவ முகாமில் பயிற்சிப் பெற்று வெளியேறும் இராணுவ அதிகாரிகள் உணர்ச்சிபூர்வமானதும் தொழிநுட்பத்தால் வளர்ச்சியடைந்த சமூகத்துக்குள் செல்லவுள்ளனர். இதுபோன்ற இராணுவ முகாமில் பயிற்சிப்பெறும் போது, வெளியுலகத்துடனான தொடர்பு மட்டுப்படுத்தப்படுகின்றது. பயிற்சிகளை முடித்து வெளியேறும் அதிகாரிகளான நீங்கள் பல சவால்கள் நிறைந்த உலக சூழலுக்குள் இன்றிலிருந்து பிரவேசிக்கின்றீர்கள். இவ்வாறு இங்கிருந்து பயிற்சிகளை பெற்று வெளியேறும் இராணுவ வீரர்கள் சுற்றுச்சூழல் அரசியல், சமூக - கலை - கலாசாரம் தொடர்பில் புரிதலை கொண்டிருக்கும் போதே பரிபூரணமாக சேவையை மக்களுக்கும் நாட்டுக்கும் வழங்கமுடியும். அண்மைகாலமாக முப்படை பொலிஸ்போன்ற பாதுகாப்பு தரப்புகள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

2009ஆம் ஆண்டு இராணுவம் உட்பட பாதுகாப்புதரப்பு மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கை ஊடாக வழங்கிய சேவையை எக்காலத்திலும் மறக்கமுடியாது. இந்த மனிதாபிமான நடவடிக்கையின் ஊடாகவே இன்று சமாதானம் நிலவுகின்றது.

அவ்வாறு பெற்றுக்கொண்ட சமாதானத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இராணுவ வீரர்களாகிய உங்களையும் சார்ந்தது. பௌதிக ரீதியாக தீவிரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ள போதிலும் தீவிரவாத சிந்தனை சிலரிடமிருந்து இன்னும் மறையவில்லை. ஆகவே, பாதுகாப்பு தரப்பினராகிய நாம் மிகவும் அவதானத்துடன் இருந்து இந்நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டும்.

இராணுவ அதிகாரிகள் தொடர்பில் இன்று பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு நிலையில் இராணுவ அதிகாரிகளிடம் நேர்மையானதும், ஒழுக்கமானதுமான சேவையினை எதிர்ப்பார்க்கின்றோம். அத்தோடு, அனைத்து பாதுகாப்பு தரப்புகள் ஒழுக்ககோவைகளுக்கு புறம்பாக செயற்படாமல் இராணுவத்தின் கௌரவத்தையும், நாட்டின் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் என பாதுகாப்பு செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (செ-12)

## மீள்குடியேற்றம்...

பதியின் ஏமாற்று நடவடிக்கைக்கு எதிராக தாம் முன்னர் திட்டமிட்டபடி போராட்டம் நடைபெறும் என வலி.வடக்கு மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் நல்லாட்சி அரசாங்கம் எம்மை ஏமாற்றுவதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்களை மேற்கொள்ள நாங்கள் முயற்சி செய்த போது அடுத்து ஆறு மாதங்களிற்குள் எமது காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஆனால் அந்த ஆறுமாத காலம் தற்போது முடிவடைந்துள்ளது. இதன்போது ஜனாதிபதி தனது வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கோரி போராட்டங்களில் ஈடுபட தீர்மானித்தோம். ஆனால் தமிழ் கட்சிகள் எம்மை போராட்டங்களில் ஈடுபடவிடாது தடுத்து விட்டனர். நல்லாட்சியை குழப்பம் செய்யக் கூடாது என அவர்கள் எமக்கு அறிவுரை கூறினார்.

எமது காணிகளில் எப்போதும் இராணுவம் தான் நிலை கொண்டுள்ளது. நல்லாட்சியை குழப்பி விடக்கூடாது என்பதற்காக நாங்களும் இந்த ஆறுமாதங்களாக ஒன்றும் செய்யாமல் பொறுமையுடன் இருந்தோம். ஆனால் தற்போது ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வந்துள்ள நிலையில் தினம் தினம் செத்துக்கொண்டு இருக்கும் எமது வாழ்க்கையை பற்றி பேசாமல், எமது காணிகளைப் பற்றி பேசாமல் திரும்பிச் சென்றுள்ளார்.

ஆகையால் திட்டமிட்டபடி முதற் கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் இருபத்தி இரண்டாம் திகதி தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

இதற்கு ஏனைய இடம்பெயர்ந்த மக்களும் ஆதரவு வழங்குவார்கள் என வலி வடக்கு மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-4)


100க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் கைவசம்
நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management — UK Certified
CERTIFICATE – DIPLOMA – DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்
SIKARAM ACADEMY Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(சி-4932)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-4911)



குயின்சி விநியோகஸ்தர்கள் (புத்தகசாலை)


- மருத்துவ பீட மாணவர்களுக்கான மருத்துவ நூல்கள்
- ஆங்கில அகராதிகள், தேசிய பாடசாலைப் புத்தகங்கள்
- சிறுவர்களுக்கான நகைச்சுவைக் கதைகள்
- மாணவர்களுக்கான அறிவியல் நூல்கள், நீதிநூல்கள்
- மங்கையர்களுக்கான சமையலில் ருசி பார்க்க சமையல் குறிப்புப் புத்தகங்கள், அழகுக்குறிப்புப் புத்தகங்கள் மற்றும் கோலப்புத்தகங்கள்

10% முதல் 50% வரையான விலைக் கழிவு

- சமயத்தினை வளர்க்க ஆன்மீகப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான எழுதுகருவி உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

குயின்சி விநியோகஸ்தர்கள்
271, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 221 7513 H.P. 077 226 8486
(4794)



DELL SINGER
"உலகின் மிகச்சிறந்த Dell Laptop களுக்கு விசேட கொடுப்பனவுகள்"

4 வருடங்கள் வரை நீடித்துக் கொள்ளக்கூடிய உத்தரவாதம்
4G டொங்கல் இலவசம்
நிபந்தனைகளுக்குட்பட்டது

வட்டி இன்றி
DELL - NB - i3 (DELL Inspiron 3543)
★ Intel I3 - 5005U, 2.0GHz
★ 4GB, 500GB, HD Webcam
★ 15.6" HD Display, DVD RW
★ McAfee Virus Guard
ரூ.71,999/-
விசேட விலை ரூ.65,999/-
மாதாந்தம் ரூ.4,333/- X12

வட்டி இன்றி
DELL - NB - DC5G (DELL Inspiron 3543)
★ Intel Dual Core 1.5GHz
★ 4GB, 500GB, HD Webcam
★ 15.6" HD Display, DVD RW
★ McAfee Virus Guard
கலர் பிரின்டர் இலவசம்
ரூ.62,999/-
விசேட விலை ரூ.57,999/-
மாதாந்தம் ரூ.3,999/- X12

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) | 021-2225408 | பருத்தித்துறை | 021-2263411 | முல்லைத்தீவு | 021-2290180 | கொடிகாமம் | 077-7858232 |
| யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) | 021-2216320 | சங்கானை | 021-2251100 | சாவகச்சேரி | 021-2270197 | கிளிநொச்சி | 021-2280199 |
| நெல்லியடி | 021-2264937 | சுன்னாகம் | 021-2240555 | மானிப்பாய் | 021-2255343 | | |

SINGER Plus
www.masters.lk
(C-4913)



யாழ் மதர் கெயார் Dental Unit
Reg.No.#PV85754
நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல உயர்தர சேவைகள். [தற்போது யாழ் நகரில்]

- பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு,பல் வெண்மையாக்கல்)
- பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
- பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)
514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 221 9595, 021 221 9797, Mob : 077 220 2769
(C-4916)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.